

கல்கி
KALKI 26-5-1974 50 காசு



நினைவில் நிற்கும் நேரங்கள்!
பின்னி அறிந்திடும், நீங்கள் எப்படித்
தோற்றமளிக்க விரும்புவீர் என்பதை
Interpub/BB/48/74 tam

படிப்பு முடிந்து விட்டது...

இனிமேல் வேலை தேடி அலைய வேண்டுமே
என்று கவலைப்பட வேண்டாம்



வேலை வாய்ப்புகளைப் பயன்படுத்த வசதியாக இருக்கும் பொருட்டு, பாங்க் ஆப் இந்தியா உடனடியாக நிதி வசதிகளைத் தாராளமான நிபந்தனைகளின்பேரில் கீழ்க்கண்டவர்களுக்கு வழங்குகிறது :

- பொறியியல் நுண்ணறிவு உள்ளவர்களுக்கு திறமையுள்ள கைவேலைக் கலைஞர்களுக்கும்
- போக்குவரத்து மோட்டார் வாகனங்களை வைத்து தொழில் நடத்தும் தனிப்பட்டவர்களுக்கும், பல பஸ்கள் வைத்துத் தொழில் நடத்துவோர்களுக்கும்
- விவசாயப் பட்டதாரிகளுக்கும் விவசாயப் பண்ணையார்களுக்கும்
- பொது சிகிச்சை டாக்டர்கள், பல் டாக்டர்கள் மற்றும் தனிப்பட்ட நிபுணர்களுக்கும்
- புத்திசாலியான மாணவர்களுக்கும்

விவரங்களுக்கு உங்கள் அருகிலுள்ள கிளை ஆபீஸை அணுகவும்

பாங்க் ஆப் இந்தியா

RAAS/B/144A





அமைச்சு'கை மாறட்டும்! ஊழியர் மனம் மாறட்டும்!

தென்னிந்திய ரயில்வே பொதுஜனத் தொடர்பு அதிகாரி ஸ்ரீ டி. வி. கிருஷ்ணனின் அறை. சில நிமிஷங்களுக்கொரு முறை டெலிபோன் மணி அடித்தபடியே இருக்கிறது.

''டெல்லிக்குப் போய்ச் சேர வேண்டிய கிராண்ட் டிரங்க் ரயில் சரியாகப் போய்ச் சேர்ந்துவிட்டதா ? அதில் என் கணவர் போயிருக்கிறார்!'' — ஒரு பெண்மணியின் கவலைக் குரல் டெலிபோனில் கேட்கிறது.

'' நாங்கள் ரயிலில் ஒரு கல்யாணத்துக்குப் போகவிருக்கிறோம். முகூர்த்த நேரத்துக்குப் போய்ச் சேர முடியுமா ?'' — இப்படி சென்னை பொதுஜனத் தொடர்பு அதிகாரியைக் கேள்விக் கணைகளால் துளைத்து வருகிறார்கள் பொதுமக்கள்.

வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையான ரயில்வேயில் நடக்கும் வேலைநிறுத்தத்தினால் ஏற்படும் நெருக்கடியைத் தெரிந்து கொள்ள அவரிடம் விரைகிறோம்.

''ஜப்பானில் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படும்படி எந்த வேலைநிறுத்தமும் நடப்பதில்லை. அவர்கள் தங்கள் 'வேலை நிறுத்தத்தை' பாட்ஜ் அணிந்து அதிருப்தி தெரிவிப்பதன் மூலமே நடத்துகிறார்கள். வேலைநிறுத்தத்தால் பிரச்னைகள் தீர்ந்துவிடாது!'' என்கிறார் அவர். தொடர்ந்து கூறுகிறார் :

''அத்தியாவசியப் பண்டங்கள் நாட்டின் பல்வேறு பாகங்களுக்குப் போய்ச் சேர வண்டிகள் தக்க பாதுகாப்புடன் பயணமாகின்றன. ரயில்வே போக்குவரத்துத் தடங்கல் இல்லாமல் நடக்க மத்திய சர்க்கார், ரயில்வே நிர்வாகம், போலீஸ் நிர்வாகம் ஆகியவை இணைந்து செயல்பட்டு வருகின்றன. ஜெனரல் மானேஜர் திரு ராமநாதனே மின்சார ரயில் வண்டியில் டிரைவரோடு சென்று அவரை ஊக்குவித்திருக்கிறார்! நாளுக்கு நாள் ரயில் பிரயாணிகளின் எண்ணிக்கை பெருகி வருகிறது.''

குடும்பஸ்தர் ராஜகோபாலன் :

விலைவாசிகள் நாளுக்கு நாள் ஏறிக்கொண்டிருக்கிற தருணத்திலே ரூபாயின் மதிப்பு தேய்ந்து கொண்டிருக்கிற வேளையிலே இந்த ரயில்வே ஸ்டிரைக் நாட்டின் பொருளாதாரத்தை மேலும் குலைத்துவிடும். பாங்கி, எல். ஐ. ஸி., ஊழியர்களுக்குக் கொடுத்த சலுகைகளினால் ரயில்வே ஊழியர்களும் போனஸுக்கு ஆசைப்படத் தொடங்கிவிட்டார்கள். நாட்டின் முதுகெலும்பான ரயில் போக்குவரத்துக்குக் குந்தகம் விளைவிக்கிற முறையில் நடந்து கொள்வது நல்லதல்ல.

லோகோ ஒர்க்ஸ் பணியாளர் :

வடநாட்டில் ஸ்டிரைக் வெற்றி. தென்னாட்டில் எப்படியோ ஆட்களை வைத்துப் போக்குவரத்தைச் சமாளித்து வருகிறார்கள். லோகோ ஒர்க்ஸ், பெரம்பூர் இணைப்புத் தொழிற்சாலை ஆகியவற்றில் 27,000 தொழிலாளர்கள் பணிபுரிபவர்கள். அவர்களில் மூவாயிரம் பேர்கள்தாம் வேலைக்குப் போய் வருகிறார்கள். பந்த் நாளன்று வேலைக்குப் போனேனும். எந்தவித அசம்பாவிதமும் நிகழாமலிருக்க 'இன்று விடுமுறை' என்று அறிவித்து விட்டார்கள். இந்த நாளுக்குப் பதிலாக ஆகஸ்டு மாதத்தில் ஒரு நாள் நாங்கள் வேலை செய்ய வேண்டும்! இந்த ரயில் வேலை நிறுத்தத்தினால் நூறு கோடி ரூபாய் ஒரு நாளைக்கு நஷ்டமாகிறது!

* * *

சென்னை ஜனதா ரயில் பிரயாணிகள் சங்கம் கீழ்க்கண்ட சுவரொட்டிகளைத் தயாரித்துள்ளது.

காந்தி குரல்: ''தாய்மார்களே! மாணவர்களே! ரயில்வே தொழிலாளர்களைக் காந்திய முறையில் சமரசம் காண வேலைக்குத் திரும்புமாறு கூறுங்கள்.''

திரு என். மகாலிங்கம் :

தொழிலதிபர் என். மகாலிங்கம் அவர்களிடம் வேலைநிறுத்தப் பிரச்னையைப் பற்றிக் கேட்கிறோம்.

ரயில்வே ஸ்டிரைக் பற்றிப் பல்வேறு நபர்களின் கருத்துக்கள்:

''வேலை நிறுத்தத்தினால் தொழில் நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவா?''

''ஓ! நிலக்கரி வரவு நின்றுவிட்டதனால் மின் சக்தி பற்றாக்குறை. நூல், துணி, சர்க்கரை ஆகியவை போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. பெரிய தொழிலகங்களைத்தான் பாதித்துள்ளது என்றில்லை, வேலைநிறுத்தம் சிறிய கைத்தொழில்களையும்பாதித்துள்ளது!''

''வேலைநிறுத்தத்தைத் தீர்க்கத் தாங்கள் கூறும் யோசனைகள் என்னென்ன?''

''ரயில்வே இந்தியப் பொருளாதாரத்துக்கு நிதி தரும் கற்பக விருக்ஷம். பொதுத் துறையில் ஒரு தேசிய சம்பளத் திட்டம் தேவை. எல்.ஐ.ஸி. பாங்கி ஆகியவற்றில் சேர்ந்தால், சேர்ந்த ஒன்றிரண்டு வருஷங்களில் ஐந்நூறு, அறுநூறு ரூபாய் சம்பளம் கிடைத்து விடுகிறது. ஆனால் ரயில்வேயில் இருபது வருஷ சர்வீஸுக்குப் பிறகுதான் ஸ்டேஷன் மாஸ்டர் போன்றவர்கள் ஐந்நூறு ரூபாய் பெற முடிகிறது. எனவே, தேசிய சம்பளத் திட்டம் தேவை. தொழில் நுட்பம் தெரிந்த ஊழியர்கள், இதர சாதாரண ஊழியர்கள் என்றும் எஸ்.எஸ்.எல்.ஸி., பி.ஏ., எம்.ஏ., படித்த கருக்கெழுத்து, தட்டெழுத்துப் பிரிவாளர், கணக்காளர் என்றும் அவரவர் தகுதிக்கேற்பச் சம்பளவிகிதங்களைச் சகலருக்கும் நிர்ணயிக்க வேண்டும். திறமைக்கேற்ப உத்தியோக உயர்வு அவர்கள் பெற வேண்டும். ரயில்வேத் தொழிலாளர்களின் பிரச்னை தீர்க்கப்படவேண்டிய பிரச்னைதான். ரயில்வே மந்திரிக்கு வேறு இலாகாவைக் கொடுத்துவிட்டுப் பிரதம மந்திரி முழுப் பொறுப்பேற்றுப் பிரச்னைக்கு முடிவு காண வேண்டும்!''

''ஜனாதிபதி இந்தப் பிரச்னையில் ஈடுபட்டுள்ளாரே, அதைப் பற்றி....?''

''ஜனாதிபதி தலையிட்டது நல்லதுதான். தொழிலாளர்களுக்குத் தங்கள் பக்கம் பரிந்து பேச அவர் வந்திருப்பதில் திருப்தி ஏற்படும். ரயில்வே பணியாளர்கள் பொறுமை இழக்காமல், அராஜக வேலைகளில் ஈடுபடாமல் சுமுகமாகத் தீர்வு காண முன்வர வேண்டும்!''

நாட்டு மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் அளப்பரிய சேதம் விளைவித்துவரும் வேலை நிறுத்தம் விரைவில் நின்று ரயில்கள் மீண்டும் சகஜ நிலையில் ஓடி சுபிட்சத்துக்கு வழிவகுக்கட்டும்.

தொகுப்பு: **பி.எஸ்.எம்.**


1. ரயில்வே போக்குவரத்துப் பாதைகளை யாரும் சேதப் படுத்தாமல் போலீஸ் படைகள் கண்காணித்துவருகின்றன.

2. ரயில்வே ஜெனரல் மானேஜர் திரு ராமநாதன் வேலைநிறுத்த காலத்தில் மின்சார வண்டி டிரைவர்களை ஊக்குவிக்க அவர்களோடு ஒருநாள் பிரயாணம் செய்தார். தாமே ரயில் ஓட்டினார்.

3. ''ஸீஸர்'' என்று பெயர் கொண்ட இந்தப் போலீஸ் நாய் ஜோலார்ப்பேட்டை அருகே ரயிலைக் கவிழ்க்கச் சதி செய்தவரைக் கண்டு பிடித்து விட்டது!

4. ரயில் போக்குவரத்து தடைபடாமல் முன்னேறிச் செல்ல ரயிலிலேயே பயணமாகும் பாதுகாப்புப் படையும், ரயில் நிலையத்தில் காவலிருக்கும் படையும்.





பினகா ஃப்ளோரைட்* பற்பசை வலிதரும் சொத்தையையும் பற்சிதைவையும் தடுக்கிறது


ஆகவே நீங்கள் அதை உபயோகிக்க வேண்டும்

பல் வைத்தியர்களும் ஆராய்ச்சி விஞ்ஞானிகளும் இதை சிபார்சு செய்கின்றனர்

*"பற்சிதைவைக் காப்பதில் பெரும்பகுதி ஃப்ளோரைட் என்று நமக்கு இப்பொழுது தெரியும். பல் ஆரோக்கிய துறையில் விஞ்ஞான ஆராய்ச்சி தந்த ஒரு பெரும் சாதனை ஃப்ளோரைட்"—

"தி ஜெர்னல் ஆஃப் மெடிகல் வியூஸ் (தி மெடிசின் & சர்ஜன் VIII 252-57 பிப். 1967)".

பினகா ஃப்ளோரைடினால் பல்துலக்குங்கள் பற்களை உறுதியாக வைத்திருங்கள்



பினகா டூத் பிரஷ்ஷிலுள்ள மழுக்கப்பட்ட முனைகள் ஈறுகளுக்கு ஊறு செய்யாது

CIBA

ULKA-CF-33 TM

கல்கி



ஆனந்த வைகாசி, 12
மே 26, 1974

★

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

இந்த இதழில்...

சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00

உங்களுக்கு மிகவும் விருப்பமானது இப்போது நிரந்தரமான டப்பாக்களில்!

ஸ்பென்ஸர்ஸ்
ரெட் பாண்ட் அல்லது
கிரீன் லேபல் தேயிலை

அழகான பிளாஸ்டிக் டப்பாக்களில் கிடைக்கிறது.

கவர்ச்சியும் உறுதியும் மிக்க
இந்த டப்பாக்களை நீங்கள்
பல விதங்களில் பயன்படுத்தலாம்.
ஸ்டாக் தீர்வதற்கு முன்
இன்றே முந்துங்கள்.



தற்சமயம்
சென்னையில்
மட்டுமே
கிடைக்கிறது.



ஸ்பென்ஸர் அண்ட் கோ. லிமிடெட்
சென்னை மற்றும் கிளைகள்

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

மலர் 33 -- இதழ் 43

'பல்லவன்' ஊக்குவித்த பகல் கொள்ளை!

ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற ஒரு நாள் கதவடைப்பு — பாரத் பந்த் — பிசுபிசுத்து விட்டது.

பொதுமக்கள் ஆதரவின்றி எந்தப் போராட்டமும் வெற்றிபெற முடியாது என்பதையே இது மீண்டும் உணர்த்துகிறது.

இந்த வேலைநிறுத்தத்தையொட்டி எதிர்க்கட்சிகள் — சுதந்திரா, பழைய காங்கிரஸ் தவிர மற்றவை — பொறுப் புணர்ச்சியுடன் நடந்து கொள்ளவில்லை.

வேலை நிறுத்தத்துக்கு ரயில்வே ஊழியர்களைத் தூண்டிவிட்டு நாட்டுப் பொருளாதாரத்தைக் குலைக்கப் பார்க்கின்றன ஓரிரு கட்சிகள் என்றால், இந்த வேலைநிறுத்தத்தை யொட்டி அரசாங்கத்தினிடம் மக்களில் ஒரு கணிசமான பகுதிக்கு ஏற்படக்கூடிய அதிருப்தியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முயல்கின்றன வேறு பல கட்சிகள்.

ஏற்கனவே மூக்கி முனகிக் கொண்டிருக்கும் பொருளாதாரத்துக்கு இதனால் மூச்சுத் திணறலே ஏற்பட்டு விடும் என்று இவை யோசிக்கக் காணோம்.

நமது மாநில முதலமைச்சர் நடந்து கொண்டவிதமோ அதிவிசித்திரமானது!

மாநில சுயாட்சி இருந்தால் ரயில்வே வேலைநிறுத்தமே நடைபெற்றிருக்காது என்பதுபோல் பேசினார் ஒரு சமயம். பிரதமர் தம்மைக் கலந்தாலோசித்திருந்தால் வேலைநிறுத்தத்தைத் தவிர்த்திருக்கலாம் என்று மார் தட்டினார் இன்னொரு தருணம். பிரதமருக்கும், ராஷ்டிரபதிக்கும் தமது யோசனைகளை, அவர்கள் கேட்கிறார்களோ இல்லையோ அவ்வப்போது விடாமல் வழங்கிக் கொண்டிருந்தார்! ரயில்வே வேலை நிறுத்தத்தால் மக்களுக்கு அதிக சிரமம் ஏற்படாமல் பார்த்துக் கொள்வோம், சகஜ நிலைமை மாறாமல் காப்போம் என்றெல்லாம் சொன்னார்.

இவ்வளவும் கூறிவிட்டுப் பாரத் பந்த் அன்று பல்லவன் போக்குவரத்து ஓடாமல் இருக்க அனுமதித்தார்!

வேலைக்கு வந்த பல்லவா போக்குவரத்து ஊழியர்கள் வாசல் கேட் மூடியிருப்பது கண்டு திகைத்தார்கள்! வீட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்ட போது வியந்தார்கள்!

காரியாலயத்துக்கு மக்கள் நடந்தால் உடம்புக்கு நல்லது என்று முதல்வர் நினைத்தார் போலும்!

நடக்க முடியாதவர்கள் ஐந்தும் பத்தும் இழந்தார்கள். ஐம்பதும் நூறும்கூட டாக்ஸிக்கு அழுதார்கள். ஒருவர் நானூறு ரூபாய் பறி கொடுக்க வேண்டியிருந்ததாகத் துக்கப்பட்டிருக்கிறார்! "பல்லவன்" ஊக்குவித்த பகல்கொள்ளை இது! தி.மு.க. போட்ட இரட்டை வேடமிது. ரயில்வே ஊழியர்களின் தி.மு.க. சங்கம், ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தருகிறது. அதே நேரத்தில் டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா ஊழியர்கள் சங்கத்தின் தி.மு.க. தலைவர்கள் டாக்ஸிகள் ஓடவும் 'எரிந்த வீட்டில் பிடுங்கியது லாபம்' என்பது போல் பொதுமக்களைச் சூறையாடவும்அனுமதித்திருக்கிறார்கள்.

பல்லவன் போக்குவரத்து தி.மு.க.வின் சொந்தப் போக்குவரத்து அல்ல. மக்களால் நடத்தப்படும் மக்களின் போக்குவரத்து. அதைத் தி.மு.க. மத்திய அரசுக்கு எதிராகத் தனக்குள்ள சுதந்திரத்தைக் காட்டிக் கொள்ளத் தன் இஷ்டப்படி பயன்படுத்திக் கொண்டது மாபெரும் தவறு. அதைத் தி.மு.க. அரசு அனுமதித்தது அதைவிடப் பெரிய தவறு.

தி.மு.க. அரசு தி.மு.கழகத்துக்காக மட்டும் ஏற்பட்டதல்ல; மக்களின் அரசு அது என்பதை ஆட்சியில் உள்ளோர் மறக்கலாமா?

நாட்டு நடப்பு

கல்வியிலும் கம்பூனிஸம் !

மதுரைப் பல்கலைக் கழகத்தில் மார்க்ஸிஸ முமம் லெனினிஸமும் பாட திட்டத்தில் சேர்த்திருக்கிறார்களாம் !

வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமையும், அபிப்பிராய சுதந்திரமும், பேச்சு எழுத்துச் சுதந்திரங்களும், தொழில் செய்யும் சுதந்திரமும், சொத்துரிமைச் சுதந்திரமும் உறுதியளித்து அரசியல் நிர்ணயச் சட்டம் வகுத்த நமது மறைந்த மாபெரும் தலைவர்



களின் ஆன்மாக்கள், அடடா, இந்தச் செய்தியைக் கேட்டு ஆனந்தக் கூத்தாடும் ! இந்தியாவின் எதிர்காலம் ஒருவேளை சிறப்பாக இருந்துவிடலாமோ என்று கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் போய்விட்டால் பிறகு அந்த ஆன்மாக்கள் சாந்தி பெற்று ஆனந்தக் கூத்தாட வேண்டியது தானே ?

இந்தத் தலைமுறையில்தான் அரை வேக்காட்டுத் தலைவர்களாகப் போய்விட்டார்கள்; அடுத்து வரும் தலைமுறையாவது அறிவாளிகளான தலைவர்களை நாட்டுக்கு அளித்துத் தேசம் உன்னத நிலையை அடைய உதவும் என்று நம்பக்கூட இனி இடமிராது போலிருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் வாழ்கிறோம் என்று சொல்லிக் கொள்ளவே இனி வெட்கப்பட வேண்டியதுதான் !

பாரதக் குடியரசின் ஜனநாயகக் கோட்பாடுகளையும் சிறந்த பொருளாதாரத் தத்துவங்களையும் மாணவர்களுக்கு உணர்த்துவதற்குப் பதில் அவர்களின் சிந்தனையைக் குழப்பும் திருப்பணி கல்லூரிகளிலேயே ஆரம்பமாகி விட்டால் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவையில்லை.

அமிர்தமான செய்தி

இந்தியாவின் கௌரவம் கல்கத்தாவில் டேவிஸ் கோப்பைப் பந்தயத்தின் வெற்றி விழுல் உயர்ந்து விட்டது. கிழக்கத்தியப் பிரிவு இறுதி ஆட்டத்தில் ஜாஸ்ஜிட் சிங் முதல் வெற்றியைப் பெற்றுத் தந்தார், இல்டினனைத் தோல்வியடைய வைத்து. இரட்டையர் ஆட்டத்தில் அமிர்தராஜ் சகோதரர்கள் மாபெரும் வெற்றியைச் சம்பாதித்து இந்தியாவை வெற்றிப் பாதையில் அடிபெயர்த்து வைக்கச் செய்தார்கள். விஜய் அமிர்தராஜ் இறுதியாகக் கில்டினனைத் தோல்வியடைய வைத்து இந்தியாவின் கௌரவத்தை உயர்த்தினார். கிழக்கத்தியப் பிரிவு ஆட்டத்தின் ஐந்து நாட்களும் தனியர் ஆட்டத்தில் 228 'கேம்'களும், இரட்டையர் ஆட்டத்தில் 99 'கேம்'களும் டென்னிஸ் ரசிகர்களுக்கு அரிய விருந்தாக அமைந்தன. இந்திய டென்னிஸ் விளையாட்டு மன்னர்கள் மகத்தான வெற்றியை மயிரிழையில் பெற்றுத் தந்தார்கள்.

''இந்திய டென்னிஸ் ஆட்டக்காரர்களில் தலைசிறந்தவர் விஜய். விஜய் விரைவாக ஓடி, பந்தைப் பலமாகத் தாக்கி அபாரமாக ஆடியுள்ளார்'' என்று ஆஸ்திரேலிய கோஷ்டி காப்டன் ஃபிரேஸரே புகழ்மாலை சூட்டியிருக்கிறார். அமிர்தராஜ் சகோதரர்களின் வெற்றி அமிர்தமான செய்தி. இந்தியாவின் கௌரவத்தை உயர்த்திய இந்திய டென்னிஸ் விளையாட்டுக் கலைஞர்களுக்கு நம் பாராட்டுக்கள்.



மேலே: ஆனந்த்
கீழே: விஜய்

கேலிக் கூத்து !

பஞ்சாப், ஹரியானா நீதிமன்றம் மத்திய அரசாங்கம் காட்டிய முறையற்ற வழியைத் தானும் பின்பற்றி விட்டது. தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி தாவுகிறது !

முறையாக யார் பஞ்சாப்–ஹரியானா நீதிமன்றத்தின் பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டுமோ அவரை ஒதுக்கிவிட்டு, அவருக்குப் பின்னால் நீதிபதியாகச் சேர்ந்த ஜூனியர் நீதிபதி ஒருவரைப் பிரதம நீதிபதியாக நியமித்துள்ளது.

பிரதம நீதிபதியாக இருந்த திரு டி. வி. மகாஜன் ஓய்வு பெறுகிறார். காலியாகும் அவ்விடத்துக்கு சீனியர் நீதிபதியான திரு பிரேம் பண்டிட் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். அவரை விடுத்து, திரு ரஞ்ஜீத் சிங் நருலா என்பவரை அரசாங்கம் பிரதம நீதிபதியாக நியமித்துள்ளது.

இந்த முறையற்ற செயலை ஆட்சேபித்து நீதிபதி திரு பிரேம் பண்டிட் தமது பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். ஓய்வு பெறும்

பிரதம நீதிபதி திரு டி. வி. மகாஜன் தமக்களிக்கப்பட்ட பிரிவு உபசாரக் கூட்டத்தில் கூறிய மொழிகள் சிந்திக்கும் திறம் படைத்த ஒவ்வொருவர் சிந்தனையையும் கிளறக்கூடியனவாக இருக்கின்றன. அவர் கூறிய மொழிகளாவன:

''சுதந்திரமாக இயங்கமுடியாத நீதிமன்றமுள்ள ஜனநாயகம், ஜனநாயகமல்ல; ஒரு கேலிக்கூத்து!''

''ஜனநாயகம் என்று ஒரு பாவனை காட்டுவதைவிட ருஷ்ய மோஸ்தர் எதேச்சாதிகாரம் எவ்வளவோ தேவலை!''

விரித்த வலையில் சிக்கினார்கள்!

தொழிலாளர்களுக்கு அரசியல் நோக்கில் வலை வீசக் கருதி போனஸ் என்ற வார்த்தையின் அர்த்தத்தையே மாற்றி அமைத்தது இந்திரா அரசு. லாபம் வந்தாலும் வராவிட்டாலும் இத்தனை சதவீதம் போனஸ் தரவேண்டும்என்றுதனியார் துறையிலுள்ள சகல நிறுவனங்களுக்கும் உத்தரவிட்டது. 'இதில் எங்களை மட்டும் விதிவிலக்காக வைப்பானேன்' என்று கேட்கிறார்கள் ரயில்வே ஊழியர்கள். தான் விரித்த வலையில் தானே மாட்டிக்கொண்ட கதையாக அரசு விழிக்கிறது.

தீர்க்கதரிசனமின்றிப் பாங்குகளை, இன்ஷூரன்ஸ் கம்பெனிகளையெல்லாம் அரசுடைமையாக்கினார்கள். அந்நிறுவனங்களில் செயலாற்றல் குறைந்தது ஒருபுறமிருக்க இப்போது ரயில்வே ஊழியர்கள் என்ன சொல்கிறார்கள்? 'அதுவும் அரசுத் துறைதான். இதுவும் அரசுத் துறைதான்; அவர்களுக்கு மட்டும் ஏன் அபரிமிதமான சம்பளம்?' என்கிறார்கள்.



எதற்காகப் போராட வேண்டும்?

அநியாயமான விலைவாசி உயர்வுகளைப் பார்க்கும் போது ரயில்வே ஊழியர்கள் அதிகச் சம்பளம், போனஸ் என்றெல்லாம் கேட்பதில் தவறில்லை என்றே எல்லாருக்கும் தோன்றும். ஆனால் கோரிக்கைகள் ஏற்கப்பட்டால் விளைவு என்ன? பலகோடி ரூபாய்களை அரசாங்கம் இவர்களுக்கு அதிகப்படி ஊதியமாகத் தரும்போது பட்ஜெட்டில் துண்டு விழும். அதை ஈடுகட்ட ரயில் கட்டணங்களையும் சாமான்களை அனுப்பக் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும். நிகர விளைவு: மீண்டும் விலைவாசி உயர்வு. அதிகமாகக் கொடுத்த சம்பளமும் போதாமல் போகும்!

இந்த விஷ வட்டத்துக்கு முறிவுகாண ரயில் ஊழியர்கள் மட்டுமின்றி மக்கள் அனைவருமே விலைவாசிகள் குறைய ஏகோபித்துப் போராட வேண்டும். பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துமாறும் உற்பத்தியைப் பெருக்க ஆற்றல் உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிக்குமாறும் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.

இத்தகைய போராட்டமே நாட்டுக்கு நல்லது செய்யும்.

ராஜாஜி சிந்தனை

நமது இசையானது வித்துவான்களிடமும் பாகவதர்களிடமும் மட்டுமே வழங்கும்படியாக விட்டுவிடக் கூடாது. இசையை வளர்த்துக் குடும்ப வாழ்க்கையிலும் அது இடம் பெற்றிருக்கும்படி செய்ய வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் அரை மணி நேரமாவது இசைக்கென்று ஒதுக்கி வைக்க வேண்டும். பெற்றோருடன் குழந்தைகளும் சேர்ந்து பாட வேண்டும். வீட்டிலே வழங்கும் இசையில் சங்கீத வித்துவான்கள் தலையிட வேண்டியதில்லை. இப்படியே நடனத்தையும் குடும்பக் கலையாக்கிவிட வேண்டும். தாளத்துக்கும் இசைக்கும் ஒத்து உடலின் அங்கங்கள் இயங்குவதற்குச் சமமான உடற்பயிற்சி வேறு எதுவும் கிடையாது. நடனத்திலே சிரமமில்லாமல் உடற்பயிற்சி உண்டாகிறது. வீட்டிலும் வெளியிலும் நாட்டிலும் பொதுவாக மக்கள் அனைவரிடத்திலும் நடனத்தினால் இன்பம் பிறக்கிறது. உயர்தர பரத நாட்டியம் சாமான்ய மக்களால் ஆட முடியாது என்றால் எளிய இன்பமான நடனங்களை வீட்டிலே பழகிக் கொள்ளலாம். குழந்தைகள் ஆடுவதிலே ஆராய்ச்சியாளர் குற்றம் குறைகளைக் காண முயலக் கூடாது. பெற்றோரும் கூடவே சேர்ந்து நாட்டியத்தில் ஈடுபட்டாலொழிய நாட்டியத்தில் குழந்தைகளுக்கு உற்சாகம் பிறக்காது. குழந்தைகளுக்கு மட்டுமென்று எதையும் தனியாக ஒதுக்கி வைக்கக் கூடாது. சாஸ்திரோக்தமான உயர்ந்த சங்கீதமும் உயர்ந்த நாட்டியக் கலையும் ஒருபுறம் வளர வேண்டும். ஆனால் வீட்டிலே வழங்கும் நாட்டியமும் தனிச் செல்வம். அது சங்கீதத்திலும் நாட்டியத்திலும் காணப்படும் உயர்ந்த கலைப் பண்புகளுக்குச் சிறப்பும் உயிரும் தரும்.

மற்றும் ஓர் அரசியல் திருத்தம்


அதிக விவாதமோ, பரிசீலனையோ இல்லாமல், அசாதாரண வேகத்துடன் மேலும் ஓர் அரசியல் சட்டத் திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. சட்டசபை அங்கத்தினர்கள் சுயவிருப்பத்தினாலன்றி நிர்ப்பந்தத்தின் விளைவாகத் தமது அங்கத்தினர் பதவியை ராஜிநாமா செய்தால் அதைச் சட்டசபைத் தலைவரோ லோகசபை சபாநாயகரோ ஏற்றுக் கொள்ள வேண்டியதில்லை என்கிறது இந்த 35வது திருத்தம். பீஹாரில் ஏற்பட்டுள்ள மாணவர் கிளர்ச்சியினால் பல சட்டசபை அங்கத்தினர்கள் ராஜிநாமா செய்துள்ளனர். இதை ஒரு முன்னோடியாகக் கொண்டு இதர மாநிலங்களிலும் கிளர்ச்சிகள் எழுந்து, ஒழுங்கீனங்களுக்காக மக்களால் விரும்பப்படாத சட்டசபை அங்கத்தினர்கள் ராஜினாமா செய்ய நேரிட்டால் இந்திரா காங்கிரஸின் மெஜாரிட்டி, சட்டசபையில் சரிந்து விடக்கூடும். இதைத் தடுக்கத்தான் இந்தத் திருத்தம் உதவும்.


கிளர்ச்சிக்குத்தான் சட்டசபை, பாராளுமன்ற உறுப்பினர்கள் பயப்படுகின்றனர். அவர்கள் ஏன் பயப்பட வேண்டும்? மடியில் கனம் இருந்தால்தானே வழியில் பயம்? ஒழுங்கீனங்களோ தவறுதல்களோ இல்லாத நேர்மையாளர்களை எதிர்த்துக் கிளர்ச்சிகள் ஏன் நடக்கப் போகின்றன?

இந்த நிலைமையில் சட்டசபை அங்கத்தினர்களுக்கு உண்மையாகவே பாதுகாப்பு அளிக்க வேண்டுமானால் நீதிமன்றத்தின் மூலம் அவர்கள் அதைப் பெற வேண்டுமே தவிர, சபாநாயகர் மூலம் பெறும்படி செய்வது கூடாது. ஓர் அங்கத்தினர் நிர்ப்பந்தத்தினால் தான் ராஜினாமா செய்தாரா இல்லையா என்பதை நிர்ணயிக்கும் பொறுப்பைச் சபாநாயகருக்கு ஏன் கொடுக்க வேண்டும்? அவருக்கு இது ஓர் அநாவசிய வேலை என்றே கருத வேண்டும். ஆளும் கட்சியின் பலத்தைக் குலைக்காமல் பாதுகாக்க இயற்றப்பட்ட திருத்தமே இது. மக்களின் நலனுக்காக ஏற்பட்டது அல்ல.






Arthi
வாஷ்-அண்ட் வியர் 2 x 2 வாயில்கள்
Lavanya
வாஷ் அண்ட் வியர் 2 x 2 கேம்ப்ரிக்
Suchitra
ஹைச். டி: வாயில்கள்
Sharmila
செமி ஃபுல் வாயில்கள்
Pushpanjali
வாஷ் அண்ட் வியர் டைட் கேம்ப்ரிக் வாயில்கள்
தாவண்கெரே
துணிவகைகள்
ThomasJDCM/10 d Tam



பொருட்களைப் பத்திரமாகப் பொதிந்து அனுப்ப உறுதுணை—பொதிவதற்கான ஆந்திரப் பிரதேஷ் காகிதம்.

கடினமான மரம், மூங்கில், நார் போன்ற முரட்டுத் துணிக் கந்தல்கள், கிழிந்த துணிகள் ஆகிய வற்றைக் கொண்டு உருவாக்கப்பட்டது ஆந்திரப் பிரதேஷ் பொதியும் காகிதம்...எனவே உறுதி யானது, பாதுகாப்பளிக்கக் கூடியது...அடுக்கடுக் காக, ஆறு முறை சுற்ற வேண்டிய அவசியம் இல்லை. ஆந்திரப் பிரதேஷ் பொதியும் தாளுக்கு வரவேற்பு—இதோ மூடுதாள்களுக்கு மூடு விழா.

mcm/app/12d tam

ஆந்திரப் பிரதேஷ் பேப்பர் மில்ஸ்
லிமிடெட்டு ஆபீஸ் & மில்ஸ்: ராஜமுந்திரி (ஆ.பி.)
பம்பாய் ஆபீஸ்: ஸ்ரீனிவாஸ் ஹவுஸ்,
ஹஸாரிமால் ஸோமானி மார்க்.
ஹைதராபாத் ஆபீஸ்: 1-2-33/3 மதுபன்,
கன்மஹல் ரோடு.

மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, ஸ்ரீனிவாஸ் ஹவுஸ், ஹஸா. ஸோமானி மார்க், பம்பாய்-1
மெஸ்ஸர்ஸ். சஞ்சய் & கம்பெனி, தாஸ் சேம்பர்ஸ், 25, தலால் ஸ்ட்ரீட், பம்பாய்-1.
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், ஹாரிஸ்லா ஹவுஸ், மின்ட் ரோட், பம்பாய்-1.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, இண்டஸ்ட்ரி ஹவுஸ், நடராஜ சினிமா பின்புறம், ஆஷ்ரம் ரோட், அஹமதாபாத்-9
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், 31, சௌரிங்கி ரோட், கல்கத்தா-16.
மெஸ்ஸர்ஸ். பிலாசிட் லிமிடெட், 24, லிங்கி செட்டித் தெரு, சென்னை-1.
மெஸ்ஸர்ஸ். சஞ்சய் & கம்பெனி, 90, சுந்தர் நகர், புது டெல்லி-11.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, 4-4-288, இந்தர்பாக், சுல்தான் பஜார், ஹைதராபாத்.
மெஸ்ஸர்ஸ். தாக்கர் & கம்பெனி, ஸ்ரீனிவாஸ் நிலயம், ஸ்ரீராம் நகர், ராஜமுந்திரி. (ஆ.பி.)

அம்பாளை உபாசிப்பதன் பலன் 7

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

ஜகன்மாதாவாக இருக்கிற அம்பாளைப் பற்றி அநேக மகான்கள், கவிகள் ஸ்தோத்திரங்கள் செய்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஸ்தோத்திர கிரந்தங்களுக்குள் மூன்று மிகவும் சிரேஷ்டமானவை. முதலாவது 'ஸௌந்தர்ய லஹரி'. ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் கைலாசத்துக்குப் போனபோது சாட்சாத் பரமேசுவரன், தாமே அம்பிகையைப் பற்றிச் செய்திருந்த ஸௌந்தர்யலஹரி சுவடிக் கட்டை நம் ஆசாரியாளுக்குக் கொடுத்து அநுக்கிரகித்தார். அதில் மொத்தம் நூறு சுலோகங்கள் இருந்தன. ஆசாரியாள் கைலாசத்திலிருந்து திரும்பி வரும்போது வாசலில் காவலிருந்த நந்திகேசுவரர், மகா பெரிய சொத்து கைலாசத்திலிருந்து போகிறதே என்று நினைத்து, ஆசாரியாள் கொண்டுவந்த சுவடியிலிருந்து தம் கைக்குக் கிடைத்ததை அப்படியே உருவிக்கொண்டு விட்டார். முதல் 41 சுலோகங்கள் மட்டுமே ஆசாரியாள் கையில் நின்றன. பாக்கி 59 சுலோகங்கள் நந்திகேசுவரர் கைக்குப் போய் விட்டன. ஆசாரியாள் தாமே அந்த 59 சுலோகங்களையும் கடல்மடை திறந்தமாதிரிப் பாடிப் பூர்த்தி செய்து விட்டார். இவ்விதத்தில் இப்போதுள்ள 'ஸௌந்தர்யலஹரி' உருவாயிற்று. அதில் முதல் நாற்பத்தியொரு சுலோகங்கள் மந்திர சாஸ்திர சூட்சமங்கள், குண்டலினி யோகதத்துவங்கள், ஸ்ரீ வித்யா ரகசியங்கள் முதலியவற்றைச் சொல்கின்றன. அதில் உபாசகர்களுக்கு ரொம்ப விஷயங்கள் இருக்கின்றன. ஆனாலும் பின்னுள்ள, ஆசாரியாள் வாக்கிலிருந்து வந்த, 59 சுலோகங்களின் அழகே அழகு! இந்தச் சுலோகங்களில் அம்பாளின் சிரசிலிருந்து பாதம் வரையில் அங்கம் அங்கமாக வர்ணிக்கிறார். கம்பீரத்துக்கும் சரி, மாதுர்யத்துக்கும் சரி, இந்த வாக்குத்தான் சிகரம் என்று சொல்கிற மாதிரி அப்படிப்பட்ட அற்புதமான சுலோகங்கள் இவை. பழங் காலத்தில் செய்த அதி சுந்தரமான விக்கிரகங்கள், சிற்பங்களில் ஒரு நகத்தளவு பங்கமானால்கூட, பிற்காலத்தவர்களால் அதே மாதிரி வேலைப்பாட்டோடு செய்து ஒட்டுப் போட முடியவில்லை. இந்த மாதிரிதான், ஆசாரியாளின் ஸௌந்தர்ய லஹரி சுலோகத்தில் ஒரு வார்த்தையை எடுத்துவிட்டு அதற்குப் பதில் இன்னொரு வார்த்தையை யாரும் போட முடியாது. ஆதி ஸௌந்தர்யலஹரியில் 59 சுலோகம் நஷ்டமானதே நம் பாக்கியம்தான், நந்திகேசுவரர் அதை உருவிக் கொண்டிராவிட்டால் ஆசாரியாளின் இந்த அற்புத வாக்கு லோகத்துக்குக் கிடைத்திருக்காதல்லவா என்று தோன்றுகிறது. இப்படிப்பட்ட கவித்வ பொக்கிஷமாக ஒரு கிரந்தத்தைச் செய்து முடிக்கிறபோது, ஆசார்யாள், ''இதில் நான் செய்தது என்ன அம்மா இருக்கிறது? . எல்லாம் நீ கொடுத்த வாக்கு. நீ தந்த வாக்கால் உன்னையே துதித்தேன்'' என்று வினய சம்பத்துடன் சொல்கிறார். அவளைத் துதிக்கிற கவித்வமும் அவளது உபாசனையாலேயே சித்திக்கிறது.

அம்பாளைப் பற்றிய முக்கியமான மூன்று கிரந்தங்களில் இன்னொன்று 'மூக பஞ்சசதீ'. ஊமையாக இருந்ததால் 'மூகர்' என்கிற பேர் பெற்ற ஒரு பக்தருக்குக் காஞ்சி காமாக்ஷி தாம்பூலப் பிரசாதத்தை அநுக்கிரகம் பண்ணியதால் அவருக்கு உத்தமமான கவித்வ சித்தி உண்டாயிற்று. உடனே காமாக்ஷி அம்பாளின் பொதுவான மகிமை பற்றி 'ஆரியா' என்கிற விருத்தத்தில் நூறு சுலோகங்கள், அவளுடைய பாதார விந்தங்களின் அழகைப் பற்றி நூறு சுலோகங்கள், அவளது ஸ்துதிக்கு உகந்த குணங்களைப்பற்றி நூறு சுலோகங்கள், அம்பாளின் கடாக்ஷ வீக்ஷண்யத்தைப் பற்றி நூறு சுலோகங்கள், அவளுடைய புன்சிரிப்பின் ஸௌந்தரியத்தைப் பற்றி 100 சுலோகங்கள் என்றிப்படி மொத்தம் ஐந்நூறு சுலோகங்களைப் பொழிந்து விட்டார். நூறு சுலோகங்கள் கொண்ட தொகுப்புக்குச் 'சதகம்' என்று பெயர். தமிழில் கூட 'தொண்டை மண்டல சதகம்', 'அறப்பளீசுவர சதகம்' என்றெல்லாம் கேள்விப் பட்டிருப்பீர்கள். நான் மேலே சொன்ன ஐந்து நூறு சுலோகங்களுக்கு ஆரியா சதகம், பாதாரவிந்த சதகம், ஸ்துதி சதகம், கடாக்ஷ சதகம், மந்தஸ்மித சதகம் என்று பெயர். ஐந்து நூறும் சேர்ந்த நூலுக்கு 'மூக பஞ்ச சதீ' என்று பெயர். ஆரியா சதக முடிவில் அம்பாளை ஆராதிக்கிறவனுக்கு அமிருதம் போன்ற வாக்கு சித்திக்கிறது என்று சொல்லியிருக்கிறது.

அம்பாளைப் பற்றிய முக்கியமான ஸ்தோத்திரங்களில் மற்றது 'ஆர்யா த்விசதி' என்பது. த்வி — இரண்டு; சதம் — நூறு. 'ஆர்யா த்விசதி' 'ஆரியா' என்ற விருத்தத்தில் இருநூறு சுலோகங்கள் கொண்டது. அம்பாளுடைய பிரஸாதத்தைப் பரிபூரணமாகப் பெற்ற துர்வாஸ மஹரிஷி செய்த நூல் இது. இந்த ஸ்தோத்திரத்தைப் பாராயணம் பண்ணினாலே நல்ல வாக்கு உண்டாகும் என்பது கண்கூடு.

ஆக, அம்பாளைப் பற்றிய மூன்று பிரதானமான தோத்திரங்களும் நல்ல வாக்கு அவள் அருளால் சித்திக்கிறது என்கின்றன.

ஆனால் முடிந்த முடிவாக இந்தத் துதிகள் எல்லாம் அம்பாள் உபாசனையின் முக்கிய பலனாக ஞானம் சித்திக்கிறது என்பதையே சொல்கின்றன. அஞ்ஞானம் நீங்கி ஞானம் வருவதுதான் மோக்ஷம். இதை அம்பாள் அநுக்கிரகிக்கிறாள்.

Links the several worlds of women

Every fortnight, Femina reaches out to over two million readers across Asia. It brings to them a discerning, balanced and urbane interpretation of the Indian woman today—and through her, of the country she has helped to change.

Policy-maker, home-keeper or ego-preserver, the Indian woman is, like her counterparts in Asia, destroying old myths and carefully defined roles. She is emerging as the force that motivates much of the change in the sub-continent.

Femina records her life, her changing values, her experiences...every fortnight in colour and black and white.



femina

A FORTNIGHTLY FOR EVERY WOMAN

A TIMES OF INDIA PUBLICATION

அமரர் கல்கி

சிவகாமியின் சபதம்



முப்பத்தேழாம் அத்தியாயம்

தியாகப் போட்டி

சிவகாமியின் அலறலைக் கேட்ட சர்ப்பம் சற்றுநேரம் திகைத்து நின்றது. பிறகு, தன் வழியே போய்விட்டது.

தூரத்தில் பாறைகளுக்கு அப்பாலிருந்து, ''சிவகாமி! என்னைக் கூப்பிட்டாயா?'' என்று ஆயனரின் குரல் கேட்டது. ''இல்லை, அப்பா!'' என்று சிவகாமி உரத்த குரலில் கூறினாள்.

இந்த இரண்டு வார்த்தைகள் மாமல்லருக்கு எவ்வளவு மகிழ்ச்சியையும் நன்றி உணர்ச்சியையும் உண்டாக்கின என்பதைச் சிவகாமி அவருடைய கரங்களின் ஸ்பரிசத்தினால் உணர்ந்தாள்.

இருவரும் மரத்தடியிலிருந்து சற்று அப்பால் சென்று பட்டப் பகல் போல் வெளிச்சமாயிருந்த பாறையின்மீது உட்கார்ந்தனர்.

''மன்னிப்புக் கேட்பதாகச் சொன்னாயே, சிவகாமி! எதற்காக?'' என்று மாமல்லர் கேட்டார்.

''தங்களைப் பற்றிப் பொல்லாத வசை மொழிகளைக் கேட்டுக் கொண்டு சும்மா இருந்ததற்காக; அம்மொழிகளை நம்பியதற்காக!''

''இவ்வளவுதானே! மன்னித்து விட்டேன். அப்படி யார் என்னைப் பற்றி, என்ன கூறினார்கள்?''

''நாகநந்தி என்னும் புத்தபிக்ஷுவைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம் அல்லவா? அவர்தான் தங்களைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்றார். தாங்கள் போர்க்களத்துக்குப் போகப் பயந்து கொண்டு காஞ்சிக் கோட்டைக்குள் ஒளிந்து கொண்டிருப்பதாகச் சொன்னார். இன்னும் என்னவெல்லாமோ சொன்னார்....''

சிவகாமி கூறியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாமல்லர், ''இதற்காக நாகநந்தியின் மேல் எனக்குக் கோபம் இல்லை. என் தந்தை பேரில்தான் கோபம். இராஜ்யத்தைத் தேடி மகாயுத்தம் வந்திருக்கும்போது நான் கோட்டைக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தால் பயங்கொள்ளி என்று ஏன் ஜனங்கள் சொல்ல மாட்டார்கள்? அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால், அதையெல்லாம் நீயும் நம்பினாயா, சிவகாமி?'' என்றார்.

''ஆம், பிரபு! நம்பினேன். தங்களைப் பிரிந்திருந்ததில் என் மன வேதனையைச்

சகிக்க முடியாமல் அந்த அவதூறுகளை நம்பினேன். 'இவ்வளவு மட்டமான மனுஷரின் காதல் இல்லாமற் போனால் தான் என்ன?' என்று எண்ணுவதில் ஓர் ஆறுதல் உண்டாயிற்று. ஆனாலும், என் வெளி மனம் அப்படி நம்பியதே தவிர, என் உள் நெஞ்சம் 'இதெல்லாம் பொய்' என்று சொல்லிக் கொண்டிருந்தது. 'மாமல்லர் வீர புருஷர்; அவருடைய காதலுக்கு நீ பாத்திரமானவள் அல்ல; ஆகையால், அவரைப் பற்றித் தாழ்வாக எண்ணுகிறாய்; இது உன் நீச குணம்' என்று என் உள் இதயம் எனக்கு இடித்துச் சொல்லிக் கொண்டிருந்தது. பிரபு ! என்னை மன்னிப்பீர்களா ?''

''சிவகாமி ! உன்னை மன்னிப்பதற்குரிய குற்றம் எதுவும் நீ செய்யவில்லை. அவ்வளவு மன வேதனைக்கு உன்னை ஆளாக்கியதற்காக நான்தான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். இனிமேல் என்னைப் பற்றி அத்தகைய அவதூறுகளை நம்பமாட்டாயல்லவா ?'' என்று கேட்டார் மாமல்லர்.

''ஒருநாளும் நம்பமாட்டேன். அந்தப் புத்த பிக்ஷுவை மறுபடியும் பார்க்க நேர்ந்தால் அவரை இலேசில் விடப் போவதில்லை !'' என்றாள் சிவகாமி. பிறகு, திடீரென்று எதையோ நினைத்துக்கொண்டு, ''பிரபு! கூடு விட்டுக் கூடு பாயும் வித்தை என்று கதைகளில் சொல்லுகிறார்களே ? அதிலே உங்களுக்கு நம்பிக்கை உண்டா ?'' என்று தயக்கத்துடன் கேட்டாள்.

'' என்ன கேட்கிறாய், சிவகாமி ! நம்பிக்கை உண்டா என்றால்....?''

''ஓர் உயிர் உடலிலிருந்து இன்னோர் உடலுக்குப் போவது சாத்தியமாகுமா என்று கேட்டேன். அதாவது, ஒரு மனுஷர் பாம்பு உருவம் எடுத்துக் கொள்ள முடியுமா?.....''

இப்படிக் கேட்டபோது சிவகாமியின் உடம்பு மறுபடியும் நடுங்குவதை மாமல்லர் கண்டார். உடனே அவளை ஆதரவோடு தம் அகன்ற மார்பிலே சேர்த்து அணைத்துக் கொண்டு, ''இதென்ன வீண் பீதி? மனுஷனாவது, பாம்பு உருவங் கொள்வதாவது? அப்படி ஒருவன் பாம்பு உருவம் எடுத்து உன்னைத் தீண்ட வரும் பட்சத்தில், நான் கருடன் உருவம் கொண்டு வந்து அவனை சம்ஹரிப்பேன். அல்லது உன் எதிரே அவனுடைய விஷப் பல்லைப் பிடுங்கி எறிவேன். நான் இருக்கும் போது உனக்கு ஏன் பயம்?'' என்றார்.

''பிரபு ! எப்போதும் தாங்கள் என் அருகில் இருந்து என்னைப் பாதுகாத்துக் கொண்டிருப்பீர்களா ? இந்த ஏழைப்




பெண்ணைக் காப்பாற்றுவது ஒன்றுதானா உங்களுக்கு வேலை? உங்களுடைய பாதுகாப்பை எதிர்பார்த்து இராஜ்ய லட்சுமி காத்துக் கொண்டிருக்கிறாளே ?'' என்றாள் சிவகாமி.

''சிவகாமி! நீமட்டும் ஒரு வார்த்தை சொல்லு. இராஜ்யம் எக்கேடாவது கெட்டும் என்று விட்டுவிட்டு உன்னோடு இருந்து விடுகிறேன். உன்னைவிட எனக்கு இராஜ்யம் பெரிதல்ல...'' என்று மாமல்லர் கூறி வந்தபோது, சிவகாமி குறுக்கிட்டாள்.

''பிரபு! அவ்வளவு சுயநலக்காரியல்ல நான். அப்படி உங்களை எனக்கே உரிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எனக்கில்லை. விஸ்தாரமான சாம்ராஜ்யத்துக்கு உரிமை கொண்டவர் தாங்கள். வாழையடி வாழையாக வந்த பல்லவ வம்சத்தின் சிம்மாசனத்துக்குத் தனி உரிமை பூண்டவர். எத்தனையோ லட்சம் பிரஜைகள் தங்களுடைய தோள் வலியையும் வாள் வலியையும் நம்பி இந்தப் பெரிய இராஜ்யத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பொல்லாத பகைவர்

களை விரட்டி அடித்துப் பிரஜைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு தங்களுடைய இந்த இரு புஜங்களிலும் சார்ந்திருக்கிறது. அத்தகைய புஜங்கள் இன்று இந்த ஏழையை அணைத்துக்கொண்டிருப்பது என்னுடைய பூர்வ ஜன்மத்துச் சுகிர்தம். ஆனால், இந்தப் பாக்கியத்தினால் என் தலை திரும்பிப் போய் விடவில்லை. என் பகுத்தறிவை நான் இழந்துவிடவில்லை. பல்லவர் குலம் விளங்க வந்த மாமல்லருடைய வலிமையும் வீரமும் கேவலம் இந்தச் சிற்பியின் மகளைப் பாதுகாப்பதற்காக மட்டும் உபயோகப்பட வேண்டும்



என்று ஒருநாளும் சொல்லமாட்டேன். அப்பேர்ப்பட்ட மகா தியாகத்தைத் தங்களிடம் நான் ஏற்றுக் கொள்ளவும் மாட்டேன். இந்தக் கிராமவாசிகள் புள்ளலூர்ச் சண்டையில் தாங்கள் நிகழ்த்திய வீரச் செயல்களைப் பற்றி உற்சாகமாகப் பேசுவது என் காதில் விழும்போது என் உள்ளமும் உடலும் எப்படிப் பூரிக்கின்றன, தெரியுமா?''

''சிவகாமி! இந்தக் கிராமவாசிகள் உன்னுடைய நடனக் கலைத் திறனைப் பற்றிப் பாராட்டும்போது நானும் அப்படித்தான் பூரித்துப் போகிறேன். நினைத்துப் பார்த்தால் என்னுடைய சுய நலத்தைப் பற்றி எனக்கு வெட்கமாய்க் கூட இருக்கிறது.''

''தங்களிடம் ஒரு சுயநலத்தையும் நான் காணவில்லையே, பிரபு!''

''நீ காணமாட்டாய், சிவகாமி! உன்னுடைய காதலாகிற பொன்னுடையினால் என்னை நீ போர்த்திவிட்டுப் பார்க்கிறாய். அதனால் என்னிடமுள்ள குற்றங் குறைகளை நீ காணமாட்டாய். ஆனால், என்னுடைய சுயநலத்தை நான் நன்றாக உணர்கிறேன். இறைவன் உனக்கு அற்புதமான கலைச் செல்

வத்தை அளித்திருக்கிறீர். அதையெல்லாம் நான் எனக்கென்று ஆக்கிக் கொள்ளப் பார்க்கிறேன். என்னைப் போன்ற சுயநலக்காரன் யார்? உன்னுடைய அற்புத நடனக் கலை இறைவனுக்கே உரியது, கேவலம் மனிதர்களுக்கு உரியதல்ல என்று என் தந்தை கூறுவதுண்டு. அதன் பொருள் நேற்று இந்தக் கிராமத்துக் கோயிலில் நீ நடனமாடியபோதுதான்எனக்குத் தெரிந்தது. இறைவனுக்கு உரிய நிவேதனப் பொருளை நான் அபகரிக்கப் பார்ப்பது தெய்வத்துக்குச் செய்யும் அபசாரமாகாதா என்றுகூட எண்ணமிட்டேன்...''

சிவகாமி அப்போது எழுந்து, மாமல்லருக்கு முன்புறமாக வந்து குனிந்தாள்: அவளுடைய உத்தேசத்தை அறிந்து மாமல்லர் அவளைத் தடுப்பதற்கு முன்னால், அவருடைய பாதங்களைத் தொட்டுத்தன் கண்களிலே ஒற்றிக் கொண்டாள். பின்னர் அவர் எதிரில் அமர்ந்து கூறினாள்: ''சுவாமி! என்



னுடைய நடனக் கலை இறைவனுக்கே உரியதா யிருக்கும் பட்சத்தில், அந்த உரிமை பூண்ட இறைவன் தாங்கள்தான். அந்த நாளில் நான் ஆர்வத்துடன் என் தந்தையிடம் நடனக் கலையைப் பயின்றதன் காரணம், அடுத்த தடவை தாங்கள் வரும்போது தங்களுக்கு ஆடிக் காட்டி மகிழ்விக்க வேண்டும் என்னும் ஆசையே. எனது நடனக் கலை கனிந்து உணர்ச்சியும் உயிரும் பெற்றதெல்லாம் தங்களுடைய காதலினால்தான். என்னை மறந்து ஆனந்த பரவச நிலையில் நான் ஆடும் போதெல்லாம், தங்களுடைய அன்புக்கு உரிமை பூண்டவள் என்னும் எண்ணமே அந்த ஆனந்த பரவசத்துக்கு ஆதாரமா யிருந்தது. திருநாவுக்கரசர்ப் பெருமானின் இனிய தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு நான் அபிநயம் பிடிக்கும்போது, தங்களுடைய திருவுருவந்தான் என் அகக் கண் முன்னால் நிற்கிறது. தங்களால் கிடைத்த இந்தக் கலைச் செல்வத்தை வேறொருவருக்கு உரிமையாக்க எனக்குப் பாத்தியதை இல்லை. நடனக் கலை தெய்வத்துக்கும் எட்டாத கலையாகவே யிருக்கட்டும். தங்களைக் காட்டிலும் எனக்கு அது உயர்ந்ததல்ல. தாங்கள் வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உடனே அந்த நடனக் கலையை இந்த நதிப் பிரவாகத்திலே விட்டுவிட்டு ஒரு முழுக்கும் போட்டு விடுகிறேன்.''

மடல் விரிந்த மாதுளை மொட்டுப் போன்ற சிவகாமியின் செவ்விதழ்களை மாமல்லர் தமது அகன்ற கரத்தினால் மூடினார். ''சிவகாமி! நீ இப்படியெல்லாம் சொல்லச் சொல்ல என் தர்ம சங்கடம்தான் அதிகமாகிறது. ஒரு நாள் நீ இந்தக் கலையை விட்டு விடத்தான் வேண்டி யிருக்கும் என்று எண்ணும்போது எனக்குப் பகீர் என்கிறது. பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினி அரங்க மேடையில் நின்று நடனமாடுவது என்பது நினைக்க முடியாத காரியம் அல்லவா? அதை எண்ணும் போதுதான் உண்மையிலேயே நான் உன்னுடைய தந்தையின் சிற்பக் கலைச் சீடனாக இருந்திருக்கக் கூடாதா என்று தோன்றுகிறது. அப்படியானால் இந்த மூன்று நாட்களைப் போல் நம் வாழ்நாள் முழுவதுமே ஆனந்தமயமா யிருக்குமல்லவா? சாம்ராஜ்யம் என்னத்திற்கு? யுத்தமும் இரத்த வெள்ளமும்தான் என்னத்திற்கு? உண்மையாகவே சொல்கிறேன், சிவகாமி! நான் சக்கரவர்த்திக்குச் சொல்லி அனுப்பி விடுகிறேன், எனக்கு இராஜ்யம் வேண்டாம் என்று. நானும் நீயும் உன் தந்தையுமாகப் படகில் ஏறிக் கொண்டு கிளம்புவோம். ரதியையும் சுகரையும் கூட அழைத்துக்கொள்வோம். எங்கேயாவது கடல் நடுவில் உள்ள தீவாந்தரத்துக்குப் போய்ச் சேர்வோம். அங்கே நமது வாழ்நாளை ஆனந்தமாகக் கழிப்போம். என்ன சொல்லுகிறாய்? 'ஆகட்டும்' என்று சொல்லு!''

''ஒரு நாளும் சொல்ல மாட்டேன்!'' என்று அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்டுச் சிவகாமி மேலும் சொன்னாள்:

''கதைகளிலே, காவியங்களிலே கேட்டிருக்கிறேன்: வீரப் பெண்கள் நாயகர்களுக்குப் போர்க் களத்தில் துணை நின்று சாகஸச் செயல்கள் புரிந்தார்கள் என்று. தசரதருக்குக் கைகேயியும், அர்ஜுனனுக்குச் சுபத்திரையும் போர்க் களத்தில் ரதம் ஓட்டினார்கள் என்றும் படித்திருக்கிறேன். அப்பேர்ப்பட்ட பாக்கியத்துக்கு நான் பிறக்கவில்லை. போர்க்களத்திற்கு என்னால் வர முடி



சாரதா'ஸ்
பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர்
தன் பில்டிங், 175/1, மவுண்ட்ரோடு,
சென்னை-2. போன்: 87177
குதூகலமான
திருமணம் மற்றும்
விசேஷ
வைபவங்களுக்கு
சிறந்த பட்டுப் புடவைகளை
அளிப்பது
சாரதா'ஸ்
32, N.S.B. ரோடு, திருச்சி-2,
போன்: 7077



வெள்ளைத் துணி-உடைகளை மிகப்பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு

ராபின் ப்ளூ தான் தேவை

(என்பதை லட்சக்கணக்கான தாய்மார்கள்
ஒப்புக் கொள்ளுகின்றனர்.)



வெள்ளைத் துணி–உடைகளை, சோப்பு அல்லது டிடர்ஜென்ட் கொண்டு வெளுக்கச் செய்வது மட்டும் போதாது. மிகப் பளிச்சிடும் தூய வெண்மை ஆக்குவதற்கு அவற்றை ராபின் ப்ளூவில் மூழ்கச் செய்தெடுக்க வேண்டும். ஒரு வாளி தண்ணீரில் ஒரு சிட்டிகை ராபின் ப்ளூ அற்புதமாக வேலை செய்யும்.

ராபின் ப்ளூ

ARBC-39 TAM

யாது. இரத்தத்தைக் கண்டால் நான் மூர்ச்சை யடைந்து விடுவேன். ஆடவும் பாடவும் அலங்காரமாகக் கொலு விருக்கவும் பிறந்த பேதைப் பெண் நான். ஆனால், தங்களையும் என்னைப் போலாக்க உடன்பட மாட்டேன். சிம்மாசனத்தில் அமர்ந்து சாம்ராஜ்யம் ஆளவும் சமர்க்களத்தில் பகைவர்களைச் சின்னபின்னம் செய்யவும் பிறந்த தங்களைக் கல்லுளி பிடித்து வேலை செய்ய விட மாட்டேன். வாளும் வேலும் பிடித்து எதிரிகளைத் துவம்ஸம் செய்ய வேண்டிய கைகளை ஆடல் பாடலுக்குத் தாளம் போடும்படி விடமாட்டேன். சுவாமி! 'இராஜ்யம் என்னத்திற்கு? யுத்தம் என்னத்திற்கு?' என்றெல்லாம் இனிமேல் சொல்லாதீர்கள். அவ்விதம் தாங்கள் சொன்னால் இந்தப் பாவியின் காரணமாகத் தானே இப்படித் தாங்கள் சொல்கிறீர்கள் என்று எண்ணிப் பிராணத் தியாகம் செய்து கொள்வேன்!''

''சிவகாமி! கையில் கல்லுளி பிடித்து வேலை செய்யும் சிற்பியின் இரத்தம் மட்டும் உன் உடம்பில் ஓடவில்லை. பழந்தமிழ்நாட்டு வீரத் தாய்மாரின் இரத்தமும் ஓடுகிறது. மணக் கோலம் பூண்ட மணவாளனைப் போர்க் களத்துக்கு மனமுவந்து அனுப்பிய வீரத் தமிழ் மங்கையின் இரும்பு நெஞ்சம் உன்னிடம் இருக்கிறது. உண்மையில் வீர பத்தினியாவதற்குரியவள் நீதான்! போர்க் களத்துக்கு என்னோடு நீ வரவேண்டியதில்லை. ரதசாரத்தியமும் செய்ய வேண்டியதில்லை. ஆனால், இனி நான் எப்போது போர்க்களம் சென்றாலும் என்னுடைய நெஞ்சில் நீ இருந்து கொண்டிருப்பாய். சற்றுமுன் நீ கூறிய வீர மொழிகள் என் செவியிலே ஒலித்துக்கொண்டிருக்கும். உன்னுடைய காதலின் நினைவு எனக்கு இணையற்ற வீரத்தையும் துணிவையும் ஊட்டிக்கொண்டிருக்கும்....''

''சுவாமி! வீர பல்லவ வம்சத்தில் பிறந்து, பதினெட்டு வயதுக்குள் தென்னாட்டில் உள்ள மல்லர்களை யெல்லாம் வென்று மகா மல்லர் என்று பெயர் பெற்ற தங்களுக்கு இந்த ஏழைப் பெண்ணின் நினைவுதானா தீரமும் துணிச்சலும் ஊட்ட வேண்டும்? யுத்தத்திலே தாங்கள் எதிரிகளைச் சின்னபின்னம் செய்து உலகமே ஆச்சரியப்படும்படியான வெற்றி கொண்டது இந்த ஏழைப் பெண்ணின் ஞாபகத்தில் தானா? கேவலம் ஓர் எட்டுக்கால் பூச்சியைக் கண்டு கதி கலங்குபவள் நான்! தங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? நமது குழந்தைப் பிராயத்தில் ஒரு நாள் நீங்களும் நானும் என் தந்தையின் சிலைகளுக்குப் பின்னால் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருந்தபோது, ஒரு பெரிய கரப்பான் பூச்சியைப் பார்த்து, 'ஓ' என்று அலறி விட்டேன். நீங்கள் ஒளிந்துகொண்டிருந்த இடத்திலிருந்து ஓடிவந்து என்னைக் கட்டி அணைத்துத் தேறுதல் கூறினீர்கள். 'என்ன, என்ன?' என்று கேட்டீர்கள். நான் முதலில் சொல்வதற்கு வெட்கப்பட்டு அப்புறம் உண்மையைச் சொன்னேன். தாங்கள் நம்பவேயில்லை. 'கரப்பான் பூச்சிக்குப் பயப்படவாவது? பொய்! என்னை ஒளிந்து கொண்டிருந்த இடத்திலிருந்து வெளியே வரச் செய்வதற்காகவே நீ இப்படிப் பாசாங்கு செய்தாய்!' என்றீர்கள். நிஜமாக நான் அப்போது பயப்பட்டேன். சற்று முன்னால் இங்கே பாம்பைக் கண்டபோதும் எனக்கு உண்மையில் பயமாகத்தான் இருந்



தது. பாருங்கள், இப்போதுகூட என் உடம்பு நடுங்குவதை!''

மாமல்லர் மீண்டும் முன்போல் சிவகாமியைத் தமது வலிய புஜங்களினால் சேர்த்து அணைத்துக் கொண்டு, ''இதென்ன அசட்டுத்தனம், சிவகாமி! ஏன் இப்படி நடுங்குகிறாய்?'' என்று கேட்டார்.

''ஏனோ தெரியவில்லை! சில காலமாக எனக்கு அடிக்கடி இம்மாதிரி பயம் உண்டாகிறது. ஏதோ ஒரு பெரிய அபாயம்—இன்னதென்று தெரியாத விபத்து—என்னைத் தேடி வந்து கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. சுவாமி! தங்களிடம் ஓர் இரகசியம் சொல்லுகிறேன். என் தந்தையிடம் கூட அதை நீங்கள் சொல்லக் கூடாது...''

''சொல்லு, சிவகாமி!''

''காஞ்சியில் திருநாவுக்கரசர் மடத்திலே நான் மூர்ச்சை அடைந்து விழுந்த அன்று எனக்குப் பிரக்ஞை வந்ததும், தாங்கள் நயன பாஷையில்

விடைபெற்றுக் கொண்டு போய்விட்டீர்கள். சற்று நேரம் கழித்து, நானும் என் தந்தையும் வாகீசப் பெருமானிடம் விடைபெற்றுக் கொண்டு, கமலியின் வீட்டுக்குக் கிளம்பினோம். அப்போது நாவுக்கரசர் என் தந்தையைப் பின்னால் நிறுத்திச் சில வார்த்தைகள் மெல்லிய குரலில் கூறினார்: 'உங்கள் பெண் மகா பாக்கியசாலி; உலகத்தில் இல்லாத தெய்விகக் கலை அவளிடம் இருக்கிறது. ஆனால், அவளைப் பார்க்கும்போது ஏனோ என் மனத்தில் துயரம் உண்டாகிறது! ஏதோ ஒரு பெரிய அபாயம் அவளுக்கு வரப் போவதாகத் தோன்றுகிறது. ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று அப்பெருமான் கூறியது என் காதிலும் விழுந்தது. அதைக் கேட்டதிலிருந்து..''

''அந்த மகா புருஷர் கூறியது உண்மைதான், சிவகாமி! உனக்குத்தான் பெரிய அபாயம் வந்ததே! இந்த வெள்ளத்தைக் காட்டிலும் பெரிய அபாயம் வேறு என்ன வர முடியும்? கடவுள் அருளால் அதிலிருந்து தப்பி விட்டாய்! இனிமேல் ஒன்றும் வராது!'' என்று மாமல்லர் உறுதியான குரலில் கூறினார்.

''பிரபு! தங்களை என்னுடன் சேர்த்து வைத்து மூன்று தினங்கள் நான் சொர்க்கத்தில் இருக்கும்படி செய்த வெள்ளத்தை விபத்து என்று எப்படிச் சொல்வேன்? ஆகையினால்தான், இன்னும் வேறு ஏதோ இருக்கிறது என்று எண்ணமிடுகிறேன். ஆனால், இனிமேல் என்ன விபத்து வந்தால் என்ன? தங்களுடைய விசால இருதயத்தின் ஒரு மூலையில் எனக்கு ஒரு பத்திரமான இடம் இருக்கிறது என்ற நம்பிக்கையே எனக்குத் தைரியமும் உற்சாகமும் ஊட்டி வரும். தாங்கள் யுத்தத்தை யெல்லாம் முடித்துவிட்டு, தங்கள் தந்தையிடம் அநுமதி பெற்று என்னை அழைத்துப் போக வரும்வரையில் நான் இவ்விடத்திலேயே மன நிம்மதியுடன் இருப்பேன். தங்களுடைய அன்பாகிய கவசம் என்னைக் காப்பாற்றும்போது, என்ன விபத்து என்னை என்ன செய்துவிடும்?''

''மண்டபப்பட்டு அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறதா? இங்கேயே தங்கிவிடுவதென்று தீர்மானம் செய்துவிட்டாயா?'' என்று மாமல்லர் கேட்டார். அதுதான் அவருடைய விருப்பம் என்று குரலிலிருந்தே தெரிந்தது.

''ஆம், பிரபு! வேறு எந்த இடத்திலும் நான் மன நிம்மதியுடன் இருக்க முடியாது. இந்தக் கிராமத்துக் கோயிலும், இந்தப் பாறைகளும், வராக நதியும் எனக்குப் பல இன்ப நினைவுகளை ஊட்டிக் கொண்டிருக்கும். என் தந்தையும் இந்தப் பாறைகளைக் கோயில்களாக அமைப்பதில் பெரும் ஆவல் கொண்டிருக்கிறார். அவரும் நிம்மதியாக இருப்பார். ஆனால், ஒரே ஒரு விஷயம்தான் கொஞ்சம் மனக் கவலை உண்டாக்குகிறது. அந்த நாகநந்தி மட்டும் இங்கே வராமல் இருக்க வேண்டும்!'' என்றாள் சிவகாமி.

''நாகநந்தி இங்கே வரமாட்டார். அந்தக் கவலை உனக்கு வேண்டாம்!'' என்றார் மாமல்லர். குண்டோதரனிடம் நாகநந்தியைப் பற்றித் தெரிந்துகொண்டிருந்ததனால்தான் அவர் அவ்விதம் உறுதியாய்க் கூறினார்.

அதே சமயத்தில் அவர்கள் பேசிக் கொண்டிருந்த பாறைக்குப் பின்னால் ஒளிந்து கேட்டுக் கொண்டிருந்த பிக்ஷுவின் உருவம் மெதுவாக எழுந்து அப்பால் சென்றது!

முப்பத்தெட்டாம் அத்தியாயம்

சந்திரன் சாட்சி

இரவு ஜாம நேரத்துக்கு மேல் மாமல்லர், சிவகாமி, ஆயனர் ஆகியோர் திரும்பிக் கிராமத்தை அடைந்தபோது நாவுக்கரசர் மடத்து வாசலில் பெருங் கூட்டம் நிற்பதைக் கண்டார்கள்.

நிலாவொளியில் அந்தக் கூட்டத்தின் மத்தியில் கத்தி, கேடயங்களும், வாள்களும் வேல்களும் மின்னின.

மூன்றுபேரும் துணுக்கமடைந்து வீதி மூலையில் கோயில் மதில் ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். மடத்து வாசலில் நின்ற வீரர்கள் யாராயிருக்கும் என்ற கேள்வி மூவருடைய மனத்திலும் எழுந்தது.

அன்று காலையில் குண்டோதரனுக்கும் மாமல்லருக்கும் ஒரு சிறு வாக்குவாதம் நடந்தது. மேலே நடக்க வேண்டிய காரியத்தைப் பற்றித்தான். வராக நதியில் வெள்ளம் வடிந்துவிட்டபடியால், பானைத் தெப்பம் ஒன்று கட்டி அதில் தம்மை வராக நதிக்கு அக்கரையில் கொண்டுபோய் விட்டுவிட்டுக் குண்டோதரன் திரும்பி வந்து விட வேண்டும் என்றும், தாம் அங்கிருந்து காஞ்சிக்குப் போய் விடுவதென்றும் குண்டோதரன் ஆயனருக்கும் சிவகாமிக்கும் துணையாக மண்டபப்பட்டுக் கிரா

மத்திலேயே சில காலம் இருக்க வேண்டும் என்றும் மாமல்லர் சொன்னார்.

குண்டோதரன் இதை மறுத்து, தான் முதலில் அக்கரை சென்று பல்லவ சைனியத்தைப் பற்றித் தகவல் விசாரித்து வருவதாகவும், அதற்குப் பிறகு என்ன செய்வதென்பதை முடிவு செய்து கொள்ளலாமெனவும் கூறினான். மாமல்லரும் இன்னும் ஒரு நாள் சிவகாமியுடன் இருக்கலாம் என்ற ஆசையினால் அதற்கு இணங்கினார்.

ஆனாலும், அன்றைக்கெல்லாம் அவருக்கு அடிக்கடி மனத்தில் பரபரப்பு உண்டாகிக் கொண்டிருந்தது. சாயங்காலம் ஆக ஆக, 'குண்டோதரன் ஏன் இன்னும் வரவில்லை?', 'எத்தனை நாள் இங்கே சும்மா உட்கார்ந்திருப்பது?' என்ற எண்ணங்கள் அவ்வப்போது அவர் உள்ளத்தில் தோன்றி அல்லல் செய்தன.

மோகன நிலவொளியில் சிவகாமியுடன் பேசிக் கொண்டிருந்தபோதுகூட நடுநடுவே மாமல்லரின் மனம், 'குண்டோதரன் இதற்குள் வந்திருப்பானா? என்ன செய்தி கொண்டு வந்திருப்பான்?' என்று எண்ணமிட்டுக் கொண்டுதான் இருந்தது.

இப்போது மடத்து வாசலில் கூட்டத்தைக் கண்டதும், அதிலும் வாட்கள் வேல்களின் ஒளியைக் கண்டதும் மாமல்லருடைய மனத்தில் ஏக காலத்தில் பல கேள்விகள் எழுந்தன. இவர்கள் யார்? பகைவர்களா? பல்லவ வீரர்களா? பல்லவ வீரர்களாயிருந்தால், இங்கு நாம் இருப்பது தெரிந்து வந்திருக்கிறார்களா? தெரிந்தவர்களாயிருந்தால், திடீரென்று நம்மைக் கண்டதும் கோஷம் இடுவார்களே? கிராமவாசிகளுக்குத் தெரிந்து போய்விடுமே?

மாமல்லருடைய மனத் தயக்கத்தையும், அதன் காரணத்தையும் ஒருவாறு அறிந்து கொண்ட ஆயனர், ''பிரபு! தாங்களும் சிவகாமியும் சற்று இவ்விடமே நில்லுங்கள். நான் முன்னால் சென்று வந்திருப்பவர்கள் யார் என்று பார்க்கிறேன்'' என்று கூறிச் சென்றார்.

சிவகாமியும் மாமல்லரும் கோயில் மதில் ஓரத்தில் மதிலுக்குள்ளிருந்து கொப்பும் கிளையுமாய் வெளியே படர்ந்திருந்த மந்தார மரத்தின் அடியில் நின்றார்கள். அப்போது மாமல்லர் மடத்து வாசலில் நின்ற கூட்டத்திலிருந்து வந்த சத்தத்தைக் காது கொடுத்துக் கவனமாய்க் கேட்டார். கலகலவென்று எழுந்த பல பேச்சுக் குரல்களுக்கிடையில் தளபதி பரஞ்சோதியின் குரல் கணீரெனக் கேட்டது. கிராமவாசிகள் பலர் ஏக காலத்தில் மறுமொழி கூறினார்கள். அந்தப் பல குரல்களுடன் சுகப்பிரம்ம முனிவரும் சேர்ந்து 'மாமல்லா! மாமல்லா!' என்று கீச்சுக் குரலில் கூவிய சத்தம் எழுந்தது.

மாமல்லரின் மனக் குழப்பமெல்லாம் ஒரு நொடியில் நீங்கி விட்டது. ''நமது தளபதி பரஞ்சோதிதான் வந்திருக்கிறார்! வா சிவகாமி! நாமும் போகலாம்!'' என்று அவர் உற்சாகம் ததும்பும் குரலில் கூறி மேலே நடக்கத் தொடங்கியபோது சிவகாமி அவருடைய கரத்தை மெதுவாகத் தொட்டு, ''பிரபு!'' என்றாள். மந்தார மரத்துக் கிளைகளின் வழியாக வந்த பால் நிலவின் ஒளியில் அவளுடைய கண்களில் துளித்திருந்த இரு கண்ணீர்த் துளிகளும் முத்துப் போல் பிரகாசித்ததை மாமல்லர் பார்த்தார்.



''என் கண்ணே! இது என்ன?'' என்று மாமல்லர் அருமையுடன் கூறி, தமது அங்கவஸ்திரத்தினால் கண்ணீரைத் துடைத்தார்.

''உங்கள் தளபதியின் குரல் கேட்டதும் இந்தப் பேதைப் பெண் அவசியமில்லாமல் போய் விட்டேனல்லவா?'' என்று சிவகாமி விம்மினாள்.

இவ்விதம் நேரும் என்று சற்றும் எதிர்பாராத மாமல்லர் அவளுக்கு எவ்விதம் தேறுதல் சொல்லுவது என்று தெரியாமல் சற்றுத் திகைத்து நின்றார். பின்னர் ''என் ஆருயிரே! ஏன் இவ்விதம் பேசுகிறாய்? சற்று முன்னால் நீதானே உன் வாயார வீர மொழிகள் பகன்று என்னைப் போர்க் களத்துக்குப் போகும்படி ஏவினாய்? போக வேண்டிய சமயம் வந்திருக்கும்போது இவ்விதம் நீ கண்ணீர் விட்டால் நான் என்ன தைரியத்துடன் போவேன்?'' என்று கூறி, சிவகாமியின் அழகிய மோவாயைப் பிடித்து நிமிர்த்தினார். அப்போது சிவகாமியின் முகத்தில் நிலாமதியின் கிரணங்கள் நேராக விழ, அவளுடைய



இயற்கைப் பொன்னிற முகம் தந்த நிறம் பெற்றுத் திகழ்ந்தது.

சிவகாமி அவருடைய கரத்தைத் தன் மோவாயிலிருந்து எடுத்துத் தன் கண்களிலே சேர்த்துக் கண்ணீரால் நனைத்த வண்ணம், ''இந்தப் பேதை நெஞ்சம் ஏனோ காரணமில்லாத பீதி கொண்டிருக்கிறது. என் வாழ்வின் இன்பம் இன்றோடு முடிந்து விட்டது போல் தோன்றுகிறது. பிரபு! என்னை மறக்க மாட்டீர்கள் அல்லவா? மத்த யானையின் மேலேறி யுத்தக் களத்தில் சத்துருக்களைத் துவம்ஸம் செய்யும் போதும், அகில சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகி மணிமுடி தரித்து இரத்தின சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும்போதும், இந்த ஏழைச் சிற்பியின் மகளை மறவாமல் இருப்பீர்கள் அல்லவா?'' என்று கேட்டாள்.

மாமல்லர் வானக் கடலிலே மிதந்த பூரணச் சந்திரனைச் சுட்டிக் காட்டி, ''சிவகாமி! அதோ, அமுத நிலவைச் சொரிந்து கொண்டு வான வீதியில் பவனி வரும் சந்திரன் சாட்சியாகச் சொல்கிறேன். கேள்! இந்த ஜன்மத்தில் உன்னை நான் மறக்க மாட்டேன் என்று வாக்குறுதி கூறுவதில் பொருள் இல்லை. நான் முயன்றாலும் அது முடியாத காரியம். உன் மனத்தில் காரணம் இன்றித் தோன்றும் பீதிக்கு ஏதாவது உண்மையில் காரணம் இருக்குமானால், ஒன்றே ஒன்றுதான் இருக்க முடியும்: ஒருவேளை போர்க் களத்தில் நான் வீர மரணம் அடைவேன்...'' என்றார்.

''ஐயோ! அப்படிச் சொல்லாதீர்கள் ஒருநாளும் அப்படி நேராது!'' என்று விம்மலுடன் உரத்துக் கூவினாள் அவள்.

மாமல்லர் சொன்னார்: ''அப்படி நேரவில்லையென்றால், உன்னை நான் மறப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. யுத்தமெல்லாம் முடிந்து இந்தப் பரந்த பல்லவ சாம்ராஜ்யத்துக்குச் சக்கரவர்த்தியாகி நான் இரத்தின சிங்காதனத்தில் வீற்றிருக்கும் காலம் வரும்போது, நீயும் என் அருகிலேதான் வீற்றிருப்பாய். ஆனால், போர்க் களத்துக்குப் போகும்போது, வெற்றி அல்லது வீர மரணத்தை எதிர்பார்த்துத்தான் போக வேண்டும். நான் போர்க்களத்தில் உயிர் துறக்க நேர்ந்தால்தான் என்ன, சிவகாமி! எதற்காகக் கவலைப்பட வேண்டும்? இந்த ஒரு பிறப்போடு நமது காதல் முடிந்து விட்டதா? ஒருநாளும் இல்லை. போர்க் களத்தில் உயிர் போகும்போது எனக்கு நினைவிருந்தால் பிறைசூடும் பெருமானைத் தியானித்து, 'இந்தப் புண்

கஸ்தூரி விஜயம்

நெறிகெட்டுக் கிடக்கும் ஒரு குடும்பம். அக்குடும்பத் தலைவன் சுந்தரம், தாட்சிண்யம் மிக்கவன். தான் முன்னுக்கு வருவதற்கு உறுதுணையாயிருந்தவர்களை யெல்லாம் தன்னுடன் வைத்துக் கொண்டு ஆதரிக்கிறான். இதனால் ஒரு சோம்பேறிப் பட்டாளமே தயாராகி விடுகிறது. வீட்டுக்கு வந்த மருமகள் கஸ்தூரியின் விஜயத்தினால் எல்லோரும் திருந்திவிடுகின்றனர்.

சாந்திநிகேதன் குழுவைச் சேர்ந்த விஜய சந்திரிகாவுக்கும், பி. ஆர். பிரேமாவுக்கும் ஏற்றமாதிரி நாடகம் புனையப்பட்டிருக்கிறது. புயலாக வெடித்துச் சீறிக் கணவனையே ஆட்டி வைக்கும் பெண் ஒருத்தி; பண்பும், பரிவும், பாசமும் கொண்ட, நிதானம் இழக்காத பெண் ஒருத்தி. இரு வேறு இயல்புகள் கொண்ட பெண்கள் நாடகத்துக்குப் பெரிதும் சுவையூட்டியிருப்பதோடு மேடையிலும் பெரிதும் கலகலப்பு ஏற்படுத்தி யிருக்கின்றனர். புதுமையாகவும் இருக்கிறது. பாராட்டுக்குரிய நடிப்பாகவும் விளங்குகிறது.

முதலில் எல்லோரையும் கண்டு நடுங்கிக் கொண்டிருந்த கஸ்தூரி, ஒரு கண நேரத்தில் மேடையையே நடுங்க வைத்து விட்டாள். நாடகத்தில், இது மிகவும் சுவையான பகுதி.

பொறுப்பற்ற குடும்பத்தைச் சீர்திருத்திய செம்மல் தாத்தாதான். தாத்தாவாக வருபவர் டைரக்டர் டி. என். சேஷாத்திரி. ஆரம்பம் முதலே அதிகமாக அலட்டிக்கொள்ளாமல் நாடகத்தை இயக்கி யிருப்பவர் அவர் தான். டி. கே. எஸ். சந்திரன் சுந்தரமாகவும், ராஜசேகர் பாபுவாகவும் வந்து நன்றாய் நடித்திருக்கின்றனர். ஏ. என். கண்ணன், சைமன் இவர்கள் இருவரும் இல்லையென்றால் நாடகத்தின் நகைச்சுவை 'அம்போ' வென்று போயிருக்கும். மிகவும் இயல்பான நடிப்பு.

யாரையும் உதாசீனப்படுத்திப் பேசும் பட்லரின் பேச்சு அதிகப்பிரசங்கித்தனமானது. நகைச்சுவைக்காக அந்த மிகைச் சுவையைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லையே!

நாடக ஆசிரியர் என். எஸ். ரவிசங்கர் மிகவும் சுவையான வசனங்களைப் புனைந்து நாடகத்துக்குப் பல்சுவையும் ஊட்டி யிருக்கிறார்.

— காந்தன்

ணிய பாரத பூமியிலே பாலாறும் பெண்ணையும் காவேரியும் அமுதப் பிரவாகமாய்ப் பெருகும் தமிழகத்திலே, மீண்டும் வந்து பிறக்கும் வரம் தாருங்கள்' என்று கேட்பேன். அவ்விதமே இந்தத் தமிழகத்தில் பிறந்து, ஊர் ஊராய் அலைந்து திரிவேன். பூர்வ ஜன்மங்களிலே நான் காதலித்த சௌந்தரிய வடிவத்தை, மோகன உருவத்தை, ஜீவனுள்ள தங்க விக்கிரகத்தைத் தேடிக் கொண்டு அலைவேன். இம்மாதிரி கார்த்திகை மாதத்துத் தாவள்யமான நிலவொளியில் உன்னை மீண்டும் காண்பேன். கண்டதும் தெரிந்து கொள்வேன் நீதான் என்று. 'இந்தப் பெண்ணின் முகத்திலே ததும்பும் சௌந்தரியம் இவளுக்குச் சொந்தமானதில்லை. பல ஜன்மங்களிலே தொடர்ந்து வந்த என் காதலின் சக்திதான் இந்த முகத்துக்கு இந்த மோகனத்தைத அளித்திருக்கிறது' என்று தெரிந்து கொள்வேன். உன் கண்களில் ஜொலிக்கும் மின் ஒளியிலே என் உயிரின் சுடரைக் கண்டு தெரிந்து கொள்வேன். உன் இதழ்களின் புன்னகையில் என் இருதயத்தின் தாபம் தணிவதை உணர்ந்து அறிந்துகொள்வேன். 'இவள்தான் என் சிவகாமி! ஜன்ம ஜன்மங்களிலெல்லாம் என் உயிரிலே கலந்த இன்ப ஒளி இவள்தான்; சரத்கால சந்திரனின் மோகன நிலவில் நான் பார்த்துப் பார்த்து மகிழ்ந்த சௌந்தரிய வதனம் இதுதான்; இந்தக் கருங்குவளைக் கண்களிலேதான் என்னுடைய விழிகளாகிய வண்டுகள் ஓயாது மொய்த்து மதுவருந்தி மயங்கின!' என்று தெரிந்து தெளிவேன். சிவகாமி, வாக்குறுதி போதுமா? திருப்தி அடைந்தாயா?''

மாமல்லரின் கவி இருதயத்திலிருந்து பிரவாகமாய்ப் பொழிந்த அமுதச் சொற்கள் சிவகாமியைத் திக்குமுக்காடச் செய்தன. அவளுடைய தேகம் சிலிர்த்தது. புளகாங்கிதம் உண்டாயிற்று; தரையிலே நிற்கிறோமா, வான வெளியில் மிதக்கிறோமா என்று தெரியாத நிலையை அவள் அடைந்தாள்.

திடீரென்று கலகல த்வனியையும், ''அதோ மாமல்லர்!'' ''அதோ பல்லவ குமாரர்!'' என்ற குரல்களையும், ''மாமல்ல பல்லவேந்திரர் வாழ்க!'' ''வாழ்க! வாழ்க!'' என்ற கோஷங்களையும் கேட்டுச் சிவகாமி சுயப்பிரக்ஞை அடைந்தாள்.

''எனக்குத் திருப்திதான்! ஜனங்கள் இங்கு வருவதற்குள் தாங்கள் முன்னால் செல்லுங்கள்!'' என்று கூறினாள்.

(தொடரும்)



வாயில் உமிழ் நீரைச் சுரப்பவை, ஜீரணத்துக்கான சாற்றை வயிற்றில் சுரப்பவை, பால் சுரப்பவை, கண்ணீர் சுரப்பவை என்று மனித உடலில் பலவிதமான சுரப்பிகள் உள்ளன. இவை நாளங்களின் வழியே சுரப்பவை. இவை தவிர, நாளமில்லாத அகச் சுரப்பிகள் வேறு சில உண்டு. தம் ஊடே பாயும் ரத்தத்திலே நேரே தம் சுரப்புச் சாற்றைக் கலப்பவை இவை. இத்தகைய சுரப்புச் சாற்றுக்கு 'ஹார்மோன்' என்பது பொதுப் பெயர். இந்தக் கிரேக்கச் சொல்லுக்கு 'ஊக்குவிப்பது' என்று பொருளாம்.

உடலின் முக்கிய வளர்ச்சி மாற்றங்களுக்குக் காரணமான இந்த அகச் சுரப்பிகளைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சி தொடங்கிச் சுமார் எழுபது ஆண்டுகளே ஆகின்றன.

முதலில் பரவலாக அறியப்பட்ட அகச் சுரப்பி தொண்டைப் பகுதியில் உள்ள தைராய்ட் என்பதே. குரல் வளைக்கருகே உணவுக் குழாய்க்கு இருபுறமும் சற்றே இணைந்த இரட்டைச் சுரப்பி இது.



மூளையின் கீழே, கபாலத்தின் அடித்தளத்தில் இரண்டு காதுகளுக்கும் இடைப்பட்ட பகுதியில் பொருந்தியிருப்பது பிட்யூட்டரி என்னும் முக்கியமான சுரப்பி. இதுவும் ஓர் இரட்டைச் சுரப்பி. இதன் முன்புறம் சுரக்கும் சுரப்பிநீர்களும் பணிகளும் வேறு; பின்புறம் சுரக்கும் நீரும் அவற்றின் பணிகளும் வேறு. மிகச் சிறிதான இந்தச் சுரப்பி மற்றச் சுரப்பிகளைக் கண்காணிக்கும் மேஸ்திரி சுரப்பியாகவும் விளங்குகிறது.

சிறு நீரகங்களின் மீது, குல்லாயைக் கவிழ்த்தது போலக் காணும் ஒரு ஜோடி சுரப்பிகளே அட்ரீனல். இவையும் இரட்டைச் சுரப்பிகள். அட்ரீனலின் வெளிப் பகுதி சுரப்பது வேறு; உட்பகுதி சுரப்பது வேறு.

கணையம் என்னும் வயிற்று உறுப்பின் ஒரு பகுதியும் ஒரு பெரும் அகச் சுரப்பியே ஆகும்.

இவை தவிர ஆணுக்கும் பெண்ணுக்கும் ஏற்ற உடல் மாற்றங்களையும் பாலுணர்ச்சிகளையும் பார்த்துக் கொள்பவை கோனட்ஸ் சுரப்பிகள்.

இந்தச் சுரப்பிகள் அனைத்துமாக உடல் வளர்ச்சிக்கும் இயக்கங்களுக்கு மட்டுமல்ல; மூளைப் பகுதியான ஹைபோதாலமஸுடன் இணைந்து இவை மன வளர்ச்சிக்கும் மன நிலைகளுக்கும்கூடப் பொறுப்பு ஏற்கின்றன. தைராய்ட் சுரப்பியின் சுறுசுறுப்புக் குறைந்தால் மனிதன் மந்தமாகிவிடுகிறான்; மிகையானாலோ விரைவில் உணர்ச்சி வசப்படுகிறான். பிட்யூட்டரி சுரப்பிக்கு மற்றச் சுரப்பிகளின் மீதிருக்கும் ஆதிக்கத்தால் புலனடக்கம் சாத்தியமாகிறது; இவை சீராக இயங்கவில்லையேல் வன்முறை இயல்புகள் தலைதூக்குகின்றன!

ஆரோக்கியம் அழைக்கிறது

அகச் சுரப்பிகளில் முக்கியமானது பிட்யூட்டரியே. பட்டாணி அளவே உள்ள இதன் முன் பகுதியில் ஆறு வகையான ஹார்மோன்கள் சுரக்கின்றன. இவற்றுள் ஐந்து, பிற அகச் சுரப்பிகளின் சீரான இயக்கத்துக்குப் பொறுப்பாகின்றன. ஆறாவது சுரப்பி நீரோ உடல் எங்கும் பாய்ந்து, உடலின் சீரான வளர்ச்சிக்கு உதவுகிறது. இந்தச் சுரப்பியின் வேகம் மிகுவதாலேயே சிலரது உடல் அதி உயரமாக வளர்ந்து விடுகிறது; எலும்புகள் உருவத்திலே பெரிதாகின்றனவே தவிர உறுதியிலே வளர்வதில்லை. சுரப்பி வேகம் மந்தித்துப் போவோரின் வளர்ச்சி குன்றிச் சித்திரக் குள்ளர்களாகத் தோற்றம் அளிக்கிறார்கள்.

பிட்யூட்டரியின் பின் பகுதி சுரக்கும் ஹார்மோன்கள் இரண்டு வகை; இந்தத் தயாரிப்புக்கு மூளையின் நரம்பணுக்களும் உதவுகின்றன. சிறுநீரகத்திலிருந்து சிறு நீர் உடலை விட்டுப் பிரிவதற்குமுன், பயன்படக்

நாளமில்லாச் சுரப்பிகளைக் காக்கிக் கொடுத்து ஊக்குவிப்பதன் மூலம் ஆரோக்கிய வாழ்வுக்கு வழிவகுக்கும் யோகாசனங்கள்.

கூடிய நீரைத் தனியே உடல் மீண்டும் பக்குவமாக எடுத்துக் கொள்ள இந்த ஹார்மோன்களில் ஒன்றே காரணம். இரண்டாவது ஹார்மோன் கர்ப்பிணியின் பிரசவ வாய் வழிவிட்டுக் கொடுக்க உதவி, பிறக்கும் குழந்தைக்கான தாய்ப் பால் சுரக்கச் செய்கிறது. இது இயல்பாக இயங்காவிட்டால் ஆக்ஸிடோசின் என்னும் இந்த ரசத்தைச் செயற்கை முறையில் தயாரித்துக் கர்ப்பிணிகளுக்கு ஊசி போடுவது உண்டு.

மேனியின் வண்ணமும் முடியின் கருமையும் விழியின் கருமையும் ஆளுக்கு ஆள் வித்தியாசப்படக் காரணம் அவரவர் பிட்யூட்டரி சுரப்பியின் ஹார்மோன்கள்தாம் என்று ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

சிலருக்குத் துடிதுடிப்பும் செயலாற்றலும் மிகுந்திருப்பதும் வேறு சிலருக்கு நிதானம் நிறைந்திருப்பதும் அவரவர் தைராய்ட் சுரப்பியின் இயக்கத்தைப் பொறுத்ததே.

உடல், தனக்குக் கிடைக்கும் சக்தியை எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறது என்பது தைராய்ட் இயங்குவதை ஒட்டியே முடிவாகிறது. கழுத்திலே இரண்டு ரோஜா மலர்கள் போல் காற்றுக் குழாயின் இருபுறமும் அருத்திக் கொண்டிருக்கும் இந்தச் சுரப்பி சுரப்பவை இரண்டு ஹார்மோன்கள். அதில் ஒன்று தைராய்ட் ஹார்மோன். இதில் தான் உடலின் ஒவ்வோர் அணுவுக்கும் தேவையான அயோடின் இருக்கிறது. உடலின் திசுக்கள் இயங்கப் பிராணவாயுவான ஆக்ஸிஜனை எந்தவிதத்தில் பயன்படுத்த வேண்டும் என்பதையும், ஜீரணப் பாதையில் சர்க்கரை கிரகிக்கப்படுவதையும் இந்த ஹார்மோனே கவனித்துக் கொள்கிறது. கொழுப்பு ஜீரணமாவதற்கும் இதுவே பொறுப்பு. எலும்பு வளர்ச்சிக்கும் இது அவசியம்.

அளவிலும் இயக்க வேகத்திலும் தைராய்ட் சுரப்பி தேவைக்கு ஏற்ப மாறுவதுண்டு. பெண்கள் கர்ப்பமாயிருக்கும் போதும், பிரசவித்துக் குழந்தைக்குப் பால் கொடுக்கும் போதும் அப்போதைய அதிகத் தேவைகளுக்கு ஏற்ப இது அதிகம் உழைக்கும்.

உணவில் அயோடின் அம்சம் இராவிட்டால் தைராய்ட் ஹார்மோன் உற்பத்தி நின்றுவிடும். தைராய்ட் மிகையாகப் பருத்துப் போய்க் கழுத்திலே கட்டியாகத் தொங்குவதுமுண்டு. தைராய்ட் குறை இருப்பவருக்கு இந்தச் சத்தைச் செயற்கை முறையில் மாத்திரை தயாரித்து அளிக்கிறார்கள்.

தைராய்டுக்குப் பின்புறம் உள்ள இரண்டு ஜோடி சுரப்பிகளின் பெயர் 'பாரதைராய்ட்'. உடலுக்குத் தேவையான சுண்ணாம்பு அம்சத்தையும் பாஸ்பரஸையும் கவனித்துக் கொள்பவை இவையே. இரத்தத்தில் சுண்ணாம்பு அம்சம் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இருந்தால்தான் உடல் இயக்கத்துக்கு நல்லது. மூளையின் கட்டளைகளை நரம்பு இழைகள் வழியே தசைகள் ஏற்று இயங்க இது அவசியம். எக் காரணத்தாலாவது ரத்தத்தில் சுண்ணாம்புச் சத்துக் குறைந்தால் உடனே இந்தச் சுரப்பிகள் விரைந்து பணியாற்றி ஈடு செய்து விடுகின்றன.

தைராய்ட் ரண சிகிச்சையின்போது பாரதைராய்டையும் சேர்த்து எடுத்துவிட்டாலோ, அல்லது சேதம் அடைந்தாலோ, சுண்ணாம்பு அம்சக் குறைவால் சில தசை இடர்கள் தோன்றும். அப்போது சிகிச்சையில் வைட்டமின் டி அளித்து, அதன் காரணமாக உணவிலிருந்து ஜீரண உறுப்புக்கள் சுண்ணாம்பு அம்சத்தைக் கிரகிக்கும் ஆற்றலைக் கூட்டி இடர் நீக்குவார்கள்.

பாரதைராய்ட் மிகையாகச் சுரந்தபடி இருந்தால் ரத்தத்தில் சுண்ணாம்பு அம்சம் அதிகமாகி விடும். சுரப்பியில் கட்டி ஏதேனும் இருந்தால் இப்படி நேர்வதுண்டு. மிகையாகச் சுரப்பதால் சுண்ணாம்பு அம்சங்கள் சிறுநீரகத்திலும் சருமத்திலும் கண்ணிலும் கூட உப்பாகத் தேங்கி விடுவதுண்டு. சிறுநீரகத்தில் 'கல்' சேர இதுவும் ஒரு காரணம். இதையே நோய் அடையாளமாகக் கொண்டு பாரதைராய்டை ரண சிகிச்சை செய்வதுண்டு.

சிறுநீரகத்தின் இரட்டைத் தொப்பிகளான அட்ரினல் சுரப்பிகளின் பணிகள்



உடலில் இன்சுலின் தயாரிப்பு குறைந்தால் ஏற்படும் டையபிடீஸ் என்னும் நீரிழிவு நோய் கண்டவர்களுக்குச் செயற்கை இன்சுலினைச் செலுத்தவேண்டி யிருக்கிறது.

தனி வகையானவை. உள் உறைச் சுரப்பியான 'மெடுல்லா' நரம்பு மண்டலத்துடன் தொடர்புடையது. இதுவே உடலின் 'ஆபத்துதவி', மெய்காப்பாளன். ஆபத்து என்றால் எதிர்க்கவோ தப்பி ஓடவோ உணர்வைத் தருவது இதுவே. கோபம், பயம் போன்ற உணர்ச்சி மிகைகளை வெளிக்காட்ட உடலுக்கு உதவுவதும் இதுவே. தேவையானபோது தசையின் எரிபொருளான

சர்க்கரை அம்சத்தை ஈரல் என்னும் கிடங்கிலிருந்து விடுவிப்பதும் இதுவே.

உடலும் மூளையும் நீடித்த நேரம் தொடர்ந்து உழைக்க அட்ரினல் சுரப்பிகளின் ஹார்மோன்கள் உதவுகின்றன. அட்ரினலின் மேல் உறையான கார்டெக்ஸ் சுரப்பி, பிற அகச் சுரப்பிகளைப் போல் பிட்யூட்டரியின் மேற்பார்வையில் இயங்குகிறது. பிட்யூட்டரியின் கட்டளைப்படி சில ஹார்மோன்களை உற்பத்தி செய்கிறது. இவற்றுள் சில, உணவிலிருந்து உடல் பெறும் கார்போ ஹைட்ரேட்டையும் பலரக உப்புச் சத்துக்களையும் ஏற்றவாறு பயன்படுத்த உதவுகின்றன.

வயிற்று உறுப்பான கணையம் ஒரு நாளத்தின் வழியே ஜீரணத்துக்குத் தேவையான ரசத்தைச் சுரக்கிறது. அது தவிர இந்த உறுப்பின் மற்றொரு பகுதி அகச் சுரப்பியாக விளங்குகிறது. இந்தச் சுரப்பே இன்சுலின் எனப்படுவது. சர்க்கரை உடலுக்கு எரிபொருளாகப் பயன்படுகிறது. இன்சுலின் தான் அந்த இயக்கத்துக்குப் பொறுப்பு. இது இல்லையேல் எரிபடாத சர்க்கரை சிறுநீரகத்தில் சேர்ந்து விடுகிறது.

கணையம் என்ற உறுப்பின் உள்ளே இன்சுலினைத் தயாரிக்கும் அணுக்கள், சமுத்திரத்தில் காணும் பல லக்ஷம் தீவுகள் போலத் தோற்றமளிக்கின்றன. இதைப் பற்றி முதலில் ஆராய்ந்து கண்டுபிடித்த லாங்கர் ஹென்ஸ் என்பவர் பெயரில் இவற்றுக்கு 'லாங்கர்ஹென்ஸ் தீவுகள்' என்று பெயர்.

இன்சுலினின் தயாரிப்புக் குறைவே 'டையபிடிஸ்' என்னும் நீரிழிவு நோய். அப்போது செயற்கை இன்சுலினைச் செலுத்த வேண்டியிருக்கிறது. இன்சுலினைத் தேவைக்கு அதிகமாக உடல் தயாரித்தால் பசியின்மை, வாந்தி போன்ற இடர்கள் வருவதுண்டு.

கணையம்தான் உடலின் பிரதான 'சர்க்கரைக் கண்ட்ரோலர்' என்றாலும் தைராய்ட் அட்ரினலின் சுரப்பிகளும் இந்தப் பணியில் உதவுகின்றன.

வளரும் குழந்தைகள் வாலிபராக மாறுவதும் ஆணும் பெண்ணுமாக உடல் வளர்ச்சியிலும் உள்ளத்து உணர்ச்சிகளிலும் தனித் தன்மை பெறுவதும் சில அகச் சுரப்பிகளின் உதவியால்தான். கோனாட்ஸ் என்னும் பொதுப் பெயரில் உள்ள இவை பிட்யூட்டரியின் தலைமையில் இயங்குகின்றன. பதினன்கு பதினைந்து வயதுச் சிறுவனின் குரல் மாறுபாட்டுக்கும் அவன் முகத்தில் மீசை முளைக்கவும் இவையே காரணம். வயதடைந்த பெண் பெண்மைக்குரிய அக, புற மாறுதல்களை அடையவும் இவையே காரணம்.

இவை தவிர பீனியல், தைமஸ் என்று இரண்டு அகச் சுரப்பிகள் உள்ளன. இரண்டுமே மருத்துவ ஆராய்ச்சியில் முற்றும் அறியப்படாத உறுப்புக்கள். பீனியல் என்பது மூளையின் அடியில் இருப்பது. உலகம் தோன்றிய ஆதி நாளில் ஆதி மனிதன் தேவைக்கு ஏற்ப இது இருந்ததாகவும் இன்றைய மனித வாழ்வுக்கு இது 'மிகை' போலவும் சிலர் கருதுகிறார்கள்.

தைமஸ் என்பது நடுமார்பு எலும்பின் மேல் பகுதியில் ஒட்டிக்கொண்டுள்ள அகச் சுரப்பி. பிறவியில் சிறு குழந்தையின் இதயம் அளவு இருந்து குமரப் பருவத்தில் கூட வளர்ந்து, வயோதிகத்தில் தேய்ந்து அநேகமாக மறைந்துவிடும் விந்தை இயல்புடைய அகச் சுரப்பி இது. வளரும் குழந்தைக்கு நேரக்கூடிய இடர்களைக் காக்க உடலுடன் ஒட்டிப் பிறந்த தடுப்பு மருந்து என்று இதனைக் கருதுவோர் உண்டு. 'பெனிசிலின்' போன்ற தடுப்பு மருந்து செய்யும் வேலையை இது இயற்கையாகவே புரிந்து குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறதாம்.

இவ்வளவு முக்கியமான சுரப்புகளைச் சுரக்கும் அகச் சுரப்பிகள் அளவிலும் பெரியவை அல்ல; அவை சுரக்கும் நீரும் அதிகமல்ல; அட்ரினல் சுரப்பி ஓர் ஆயுட் காலத்தில் சுரப்பது ஒரு ஸ்பூன் அளவுதான் இருக்கும். ஆனால் அவை அருமருந்துகள். மனிதனுக்கும் எலிக்கும் எருதுக்கும்கூட ஹார்மோன்கள் அடிப்படையில் ஒரே தன்மையன. ஒன்றின் ஹார்மோனை மற்றொன்றுக்குச் செலுத்திப் பயனடையலாம். அழுத குழந்தை பால் பெறுவதிலிருந்து வயோதிகத்தில் ஓய்வு கொள்வது வரை எல்லாப் பணிகளுக்கும் ஆதார சுருதியாக இருந்து இசைபட வாழ்விப்பவை இவையே.

ஆலோசனை: **டாக்டர் எஸ். ஜகதீசன்**
கட்டுரை: **தம்பி சீனிவாசன்**




விமானமானாலும் பஸ்ஸைப் போன்று அதிகமான பயணிகளைக் குறைவான தூரமுள்ள ஊர்களுக்கும் ஏற்றிச் செல்ல வசதியாக அமைந்திருப்பதால் 'ஏர் பஸ்' என்று இது பெயர் பெறுகிறது. விமானத் தளம் சிறிதாக இருந்தாலும் பாதகமில்லை. இந்த ஐரோப்பிய ஏர் பஸ்ஸின் தயாரிப்பில் மற்றொரு தனி விசேஷம் உண்டு. பிரான்ஸ௨ம் மேற்கு ஜெர்மனியும் பெரிய அளவிலும், ஸ்பெயினும், நெதர்லாந்தும் சிறிய அளவிலும் விமானத்தின் பாகங்களைத் தயாரித்து அளித்து 'டூலஸ்' என்ற இடத்தில் அவை அனைத்தும் கொண்டுவரப்பட்டு இணைக்கப்படுகின்றன. பல தேசங்களின் கூட்டுத் தயாரிப்பு 'ஏர் பஸ்'. வேறு எந்த விமானத்தையும் விட ஏர் பஸ்ஸில் சத்தம் குறைவு. எண்ணெய்ப் பற்றாக்குறை காலத்தில் சிக்கனமாக எரிபொருளைப் பயன்படுத்துகிறது! இந்திய விமானத்துறை இந்த ஏர்பஸ் விமானங்களை வாங்கத் தீர்மானித்திருக்கிறது.

- பி. எஸ். எம்.

நீங்கள் எம்பிராய்டரியினால் அனேகமாக எதையுமே அழகு மிளிரச்செய்யலாம்.

கோட்ஸ் ஆங்கர் நூல்கள் உங்கள் எம்பிராய்டரியை பல வருடங்கள் பளிச்சென்றும் புதுமையுடனும் வைத்திருக்கும்!







மிகச் சிறந்த பருத்தியிலிருந்தே பெறக்கூடிய உறுதியும், பளபளப்பும் கொண்ட கோட்ஸ் ஆங்கர் எம்பிராய்டரி நூல்கள் மிகச் சிறந்த பயன்களைத் தருகின்றன. பல சலவைகளுக்குப் பிறகும் பளபளப்பும், பொலிவும் குன்றாத வகையில் கெட்டிச் சாயம் தோய்த்த அழகழகான பற்பல வகைகளிலிருந்து எவற்றையும் நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.
கோட்ஸ் ஆங்கர் பலபயனுள்ளது. கை மற்றும் மெஷின் எம்பிராய்டரிக்கென தனித் தனியான விசேஷமான பற்பல வகை நூல்கள் உள்ளன. கோட்ஸ் ஆங்கர் பிரசுரங்களில் ஏராளமான பல டிசைன்கள் உள்ளன! நீங்களாகவே எம்பிராய்டரி செய்து கொண்டாலும், எம்பிராய்டரி செய்த துணிகளை வாங்குவதானாலும் கோட்ஸ் ஆங்கர் நூல்களே வேண்டுமென்று கேளுங்கள்.

ஆங்கர்

எம்பிராய்டரி நூல்கள்

கோட்ஸ்

சிறந்த நூல்களைத் தயாரிப்பவர்கள்

Grant.22.TM


37. வெற்றி நெருங்குகிறது!

கலை நகரான பாரிஸிலிருந்து விமானம் கிளம்பிய சில மணி நேரத்தில் அமைதி நகர் ஜெனிவாவைக் கடந்து, சரித்திர நகராம் ரோமாபுரிக்கு வந்து சேர்ந்தது.

இனி கெய்ரோவுக்கும் அங்கிருந்து, பம்பாய்க்கும் பறக்கும் காலம்தான் மிக நீண்டதாக, ஓரளவு அலுப்புத் தட்டுவதாகவும்கூட இருக்கும் என்பதால், ரோமில் விமானம் நிற்கும் நேரத்தில் சற்று உலாவி வரலாம் என்று அவர்கள் கீழே இறங்கினார்கள்.

அந்த விமான நிலையத்தில் கண்ணாடிச் சுவருடன் கூடிய சமையலறை பலரது கவனத்தையும் கவர்ந்தது. வெண்மையான, உயரமான குல்லாய் அணிந்து 'கலியுக நளன்'கள் சிலர் உணவு தயாரித்துக் கொண்டிருந்தார்கள். சமையல் அறையும் சரி, அதில் பணியாற்றியவர்களும் சரி, பரம சுத்தம். அதனால்தானே துணிந்து கண்ணாடிச் சுவர் எழுப்பிக் கண்காட்சியாக்கி யிருந்தார்கள்!

இத்தாலிய உணவு ரொம்ப ருசி என்பதாக உலகப் பிரசித்தி பெற்றது. வெனிஸ், மிலான், ரோம், நேபிள்ஸ் முதலிய நகரங்களுக்கு வரும் உல்லாசப்




விண்ணும் மண்ணும்

கி.ராஜேந்திரன்

பயணிகள் கால்வாய்ச் சாலைகளில் படகிலே செல்லும் நூதன அனுபவத்தைப் பெறுவதற்காகவோ அல்லது சரித்திரப் புகழும் கலை அழகும் நிரம்பிய விளையாட்டு அரங்கங்கள், மண்டபங்கள், அரண்மனைகள், மாதாகோயில்கள் முதலியவற்றைப் பார்த்து மெய்சிலிர்ப்பதற்காகவோ மட்டும் வருவதில்லை. அத்துடன் இத்தாலிய உணவை ஒரு கை பார்க்கலாம் என்ற நோக்கத்தோடும் இருப்பார்கள்.

சரித்திர காலத்திய கட்டிடங்கள், அங்கே இடிபாடு அடைந்திருந்தாலும் அவற்றைப் புதுப்பிக்க இத்தாலியர்கள் முயலுவதில்லை. இடிபாடடைந்த நிலையிலே அவற்றைப் பார்ப்பதிலேயே ஓர் அலாதியான பிரமிப்பும் வியப்பும் மனித மனத்துக்கு ஏற்படும் என்பதை உணர்ந்து, அவை மேலும் பழுதடையாமல் மட்டும் பாதுகாத்து வருகிறார்கள். சவ அடக்கம் செய்வதற்கென்று ஆதி நாட்களில் பயன்பட்ட பாதாளக் குகைகளைக் கூட அவற்றின்



குறுக்கும் நெடுக்குமான ஒற்றையடிப் பாதைகளுடன் சேர்த்துக் காட்சிப் பொருளாக்கி விட்ட சாமர்த்திய சாலிகள் இத்தாலியர்.

இவற்றை யெல்லாம் காட்டியே ஏராளமாக அந்நியச் செலாவணி சம்பாதிக்கும் திறமை மிக்கவர்கள், உல்லாசப் பயணிகளுக்கு உற்சாகமூட்டும் விதமாக உணவுக் கலையைப் பயன்படுத்தாமல் விடுவார்களா? கண்ணாடிச் சுவருக்குப் பின்னால் சமையலறையைப் பார்த்தபோது தனஞ்செயனுக்கு நாவில் ஜலம் ஊறியது. இத்தனைக்கும் விமானப் பயணத்தில் சாப்பாட்டுக்குத் தட்டுப்பாடு எதுவும் கிடையாது. உபசரணைப் பெண்கள் நன்றாகவே கவனித்துக்கொண்டார்கள்.

என்றாலும் சுடச்சுட 'ஸ்பகடி'யைத் தட்டில் சமையற்காரர் ஒருவர் எடுத்து வைப்பதையும் அருகே ஒரு கிண்ணத்தில் அப்போதுதான் தயாரான தக்காளி 'ஸாஸ்'ஸை ஊற்றுவதையும் கொத்தமல்லி போன்ற வாசனை இலையைப் பொடிசாகச் சீவி இரண்டின் மீதாகவும் உதிர்ப்பதையும் பார்த்த போது தனஞ்செயனுக்குப் பசிக்கத்தான் செய்தது! போதாக்குறைக்கு ஒரு பாட்டில் ஒயிட் ஒயினுடனும் ரொட்டி வெண்ணெயுடனும் அங்கே வந்த வெயிட்டர் நான்கையும் ஒரு டிரேயில் எடுத்து வைத்துக் கொள்வதைப் பார்த்தான். வயிற்றைக் கிள்ள ஆரம்பித்தது! அடுத்த நபருக்குத் தேவையான உணவைத் தயாரிக்கத் தொடங்கு முன்னர், தட்டைத் தூக்கிக் கொடுத்து உதவிய சமையல்காரர் தமது கூரிய மீசையைச் சுண்டி விட்டுக் கொண்டே தனஞ்செயனைப் பார்த்துப் புன்னகையுடன் கண் சிமிட்டவும் செய்தார்!

அவ்வளவுதான், ''நான் ஸ்பகடி சாப்பிடப் போகிறேன், வருகிறீர்களா?'' என்று கேட்டுக் கொண்டே பதிலுக்குக் கூடக் காத்திராமல் உணவு விடுதிக்குள் நுழைந்து விட்டான் தனஞ்செயன். மைக்கேலும் அனுபமாவும் சிரித்துக் கொண்டே அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

''எத்தனை சாப்பிட்டால் என்ன? கொழுப்புச் சத்தாகத் தங்க விடாமல் தசைச் சக்தியாக மாற்றி விடுகிறாய்!'' என்று கூறிக் கொண்டே அவன் பக்கத்தில் அமர்ந்தான் மைக்கேல். ''இத்



தாயியர்களின் சமையல் கலைச் சிறப்பு ஒருபுறம் இருக்கட்டும். அவர்கள் தயாரிக்கும் ஸ்பகடியைச் சாப்பிடும் விதமே ஓர் அரிய கலை, தெரியுமா உனக்கு?''

''ஓயெஸ்! 'ஃபோர்க்'கைத் திருகினாற்போல் சுழற்றி அதில் ஸ்பகடியைச் சுற்றி எடுக்க வேண்டும். பிறகு அது கீழே வழுக்கிக்கொண்டு நழுவி விழுந்து விடாமல் கவனத்துடன் வாயில் திணிக்க வேண்டும். தமிழ் நாட்டில் சேவை என்பதாக ஒரு பண்டம் உண்டு. ஏறத்தாழ இதுபோன்றதுதான். இன்னும் சற்று மெல்லியதாக இருக்கும். சாப்பிட வசதியாக உதிர்த்து விடுவார்கள். இத்தனை வழுவழுப்பாக இருந்து தொல்லை கொடுக்கவும் செய்யாது. அனுபமாவுக்குத் தெரிந்திருக்கலாம்.'' இவ்வாறு கூறியபடியே கழுத்து 'டை'யைத் தளர்த்தி விட்டுக்கொண்டான் தனஞ்செயன், கண்ணாடிச் சுவர் வழியே பார்த்ததைச் சுவைக்கத் தான் தயார் என்று அறிவிப்பவன் போல.

அன்றையக் கடமை முடிந்து அதனைச் செவ்வனே செய்துமிருந்தால் மனிதனுக்கு ஏற்படுகிற திருப்தி இரவு போஜனத்தின்போது வெளிப்படுவது இயல்பு. இருந்து, நிதானமாகச் சப்புக் கொட்டித் தேவைக்குச் சற்று அதிகமாகவே கூடச் சாப்பிட்டு விடுவான்.

தனஞ்செயன் இப்போது ஸ்பகடியை ஒரு கை பார்க்கத் தீர்மானித்ததிலும் அந்த மனோசத்துவம் அடங்கியிருந்தது. தான் மேற்கொண்ட பயணம் வெற்றிகரமாக முடியும் கட்டம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதில் ஏற்பட்ட மன நிறைவு வயிற்றையும் நிரப்பிக்கொள்ள அவனை விரட்டியது. கடைசிவரையில் எத்தனை எத்தனை சந்தேகங்கள், இடையூறுகள்!

'தன்னைச் சந்திக்க ஒரு நண்பன் வரப் போவதாக மைக்கேல் சொன்னார்' என்பதாக லூவர் மியூஸியத்தில் வைத்து அனுபமா கூறியதும் தனஞ்செயன் எவ்வளவு கவலை அடைந்து விட்டான்! ஹோட்டலுக்கு விரைந்து டாக்ஸியில் திரும்பும்போது அவன் வினவினான்:



''ஏன் அனு? இத்தனை முக்கியமான விஷயத்தை என்னிடம் உடனே சொல்ல வேண்டும் என்பதாக உனக்கு எப்படித் தோன்றாமல் போயிற்று?''

''உங்களைப் போல் எதையும் சந்தேகக் கண் கொண்டு பார்க்க நான் பயிலவில்லையே?'' என்று பதிலளித்தாள் அனுபமா.

நண்பன் என்று மைக்கேல் குறிப்பிட்டாலும் அது எஃப். பி. ஐ. பேர் வழியாக இருக்கக் கூடுமென்று தான் சந்தேகித்தது அர்த்தமற்ற பயமா, அல்லது அதில் நியாயம் இருந்ததா என்பதைத் தனஞ்செயனால் உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை. இவர்கள் போய்ச் சேரு முன்னர் அவன் — அந்த நண்பன் — மைக்கேலைச் சந்தித்துப் பேசி விட்டுத் திரும்பிப் போயும் விட்டான். எவ்வாறாயினும், அவனால் மைக்கேல் பாதிக்கப்படவில்லை என்பது தெளிவாகித் தனஞ்செயனுக்கு நிம்மதி யளித்தது. மைக்கேல் மனம் மாறவில்லை, அனுபமாவையும் தன்னையும் முழுமையாக நம்புகிறான் என உணர்ந்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சி இரட்டிப்பாகியது, சற்று நேரத்தில் ஃபிரெஞ்சுப் போலீஸாரிடமிருந்து 'பயணத்தை அவர்கள் மேலே தொடரலாம்' என்பதாக அனுமதி கிடைத்தபோது. பாரிஸ் விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்ததும் மீண்டும் மனக் கலக்கத்துக்கு அவன் ஆளானான். பாரிஸில் அவர்கள் சென்ற இடங்களுக்கெல்லாம் உடன் வந்த சீருடை அணியாத போலீஸ்காரர்களுள் ஒருவர் — பெரிய 'ஹாண்டில்பார்' மீசைக்காரர்—அங்கே அவர்களை எதிர் நோக்கி இருந்தார். ஏதோ புதிய ஆபத்து வந்துவிட்டது; மறுபடியும் தடையுத்தரவு பிறப்பித்து விட்டார்கள் என்றெல்லாம் நினைத்துக் கலவரம் அடைந்தான் தனஞ்செயன். கடைசியில்தான் புரிந்தது, அவர்கள் விமானமேறிவிட்டார்கள் என்பதைக் கண்கூடாகப் பார்த்து விட்டுத் திரும்பிப் போய் கேஸ்-ஃபைலில் 'முற்றும்' என்று எழுதிக் கையெழுத்துப் போடக் காத்திருக்கிறான் அவன் என்பது! தனஞ்செயன் நிம்மதி பெற்று இலேசான மனத்துடன், நிலையத்தை விட்டு விமானத்தை நோக்கி நடக்கத் தொடங்கு முன்னர் அவன் கரத்தைப் பற்றி, ''மெர்ஸி! மெர்ஸி!'' என்று ஃபிரெஞ்சு மொழியில் நன்றி கூறினான். அச்செய்கை மூலம் அவனைத் தாங்கள் இனம் கண்டு கொண்டதையும் வாய் விட்டுச் சொல்லாமலே தெரியப்படுத்திக்கொண்டான். நால்வரும் சேர்ந்து சிரித்ததானது போயிங் விமானம் புறப்படும்போது போடும் சத்தத்தையும் கூட வென்றுவிடும் போலிருந்தது!

38. மண்ணாசை!

ரோடாபுரியை விட்டு விமானம் புறப்பட்டது. வரிசைக்கு மூன்று ஆசனங்கள் என்றிருந்த பக்கத்தில் அவர்கள் அமர்ந்திருந்தனர். ஜன்னல் ஓரம் மைக்கேலைப் போக விட்டுவிட்டு இடையில் அனுபமா உட்கார்ந்ததும் அவள் பக்கத்தில் நடை பாதை ஓரம் தன் இருக்கையில் சாய்வதற்கு முன்னால் தனஞ்செயன் 'கோட்'டைக் கழற்றினான், சௌகரியத்தை உத்தேசித்து. அப்போது கோட்டின் பையில் கனமாக இருந்த பொருள் அனுபமாவின் தோளில் பட்டது. ''என்ன அது ?'' என்றாள் அவள்.

''பாரிஸ் விமான நிலையத்தில் கடைசி நிமிஷ ஷாப்பிங்'' என்று அதை எடுத்துக் காட்டினான் தனஞ்செயன். சானல்—5 ஸெண்ட், பெரிய பாட்டில்.

''உன் காதலிக்கா?'' என்றான் மைக்கேல் புன்னகையுடன்.

''இல்லை, தங்கைக்கு.''

'' அடேடே ! உங்களுக்கு ஒரு தங்கை இருக்கிறாளா ? இத்தனை நாட்களாகச் சொல்லவே யில்லையே ?'' அனுபமா வியப்புடன் வினவினாள்.

''சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.''

'' அவளை நீங்கள் ரொம்ப நேசிக்கிறீர்கள் என்று தெரிகிறது. அவள் கேட்டதை மறக்காமல் வாங்கிப் போகிறீர்களே !''

'' நானாகத்தான் இந்தப் பரிசைத் தேர்ந்தெடுத்தேன். அவள் எதையுமே வேண்டவில்லை. ' ஒரு மன்னியைப் பரிசாகக் கொண்டு வந்திருக்கிறேன் இந்தா! என்று கூறியபடி ஓர் அமெரிக்கப் பெண்ணைக் கொண்டு வந்து நிறுத்தாதே !' என்று மட்டும் கேட்டுக் கொண்டாள். அது விஷயத்தில் நானும் ரொம்ப ஜாக்கிரதையாகத்தான் இருந்திருக்கிறேன்''' என்ற தனஞ்செயன் அனுபமாவைப் பார்வையாலேயே அள்ளிக் கொள்கிறவன்போல் நோக்கினான்.

''ஏன், அமெரிக்கர்களிடம் அவளுக்கு என்ன வெறுப்பு?'' என்று மைக்கேல் அந்தப் பக்கத்திலிருந்து கேட்டான்.

''ஒரு வெறுப்பும் இல்லை. வெள்ளைக்காரி ஒருத்தியை மன்னியாக ஏற்க



தலைவலியா?

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

விரைவில் குணமளிக்கிறது



"தலைவலியைப் போக்க நான் எப்பொழுதும் அனாஸின் சாப்பிடுகிறேன்" என்கிறார், பம்பாயிலுள்ள ஒரு கப்பல் கம்பெனி அதிகாரி திரு. பரமசிவம்.

சக்தி வாய்ந்தது— ஏனெனில், உலகெங்கும் டாக்டர்கள் மிக அதிகமாக சிபாரிசு செய்யும் வலி நிவாரணியை அதிக அளவில் கொண்டது அனாஸின். ஆகையால்தான் அனாஸின் வலியிலிருந்து விரைவிலேயே நிவாரணமளிக்கிறது.

நம்பகமானது— திரு. பரமசிவம் போன்ற லட்சக்கணக்கானவர்கள் அனாஸினை நம்புகிறார்கள். டாக்டரின் நம்பகமான மருந்தைப்போல பல மருந்துகளின் கலவையே அனாஸின்.

ஜலதோஷம் மற்றும் ஃப்ளூவினால் ஏற்படும் வலிகள் மற்றும் நோவுகள், தலைவலி, முதுகுவலி, தசைவலி, பல்வலி ஆகியவற்றுக்கு அனாஸின் சக்திவாய்ந்த நிவாரணி.

சக்தி வாய்ந்த, நம்பகமான

அனாஸின்

இந்தியாவின் புகழ் பெற்ற வலி-நிவாரணி



Regd. User of TM: Geoffrey Manners & Co. Ltd.

இவள் தயாராக இல்லையாம்! அவ்வளவுதான். அதே சமயம் கொழுத்த பணக்காரனை ஓர் அமெரிக்கன் இவள் அழகிலே மயங்கினான் என்றால் கணவனாக ஏற்க இவள் தயங்குவாளா, கேட்கிறேன்!'' கிண்டலான கோபத்துடன் தனஞ்செயன் பேசினான்.

''அதென்ன அமெரிக்க ஆண் மகன் சொக்கிப் போகும்படியாக உங்கள் தங்கை அத்தனை அழகா?'' என்றாள் அனுபமா.

''என் தங்கை ஆயிற்றே, அழகாயிராமல் எப்படி இருப்பாள்?'' என்று கேட்ட தனஞ்செயன், பாண்ட் பாக்கெட்டிலிருந்து பர்ஸை எடுத்துப் பிரித்துக் காட்டினான். ''நீயே பார்த்துக் கொள்'' என்றான்.

பர்ஸ்ஸில் கண்ணாடி போன்ற பிளாஸ்டிக் உறைக்குள் ஒருபுறம் அவன் பிஸினஸ் கார்டும் மற்றொருபுறம் தங்கையின் புகைப்படமும் இருந்தன. ''மைக்கேலிடம் காட்டாதே! கிறங்கிப் போய் உன்னை விட்டுவிட்டு அவளைப் பின்தொடர ஆரம்பித்துவிடுவான்'' என்றான் கேலியாக.

மைக்கேல் தனஞ்செயனின் பேச்சை ரொம்ப இரசித்தவனைச் சிரித்துக் கொண்டே அனுபமா பக்கம் சாய்ந்து படத்தை நோக்கினான். ''உண்மையாகவே அழகாகத்தான் இருக்கிறாள்'' என்றான்.

அனுபமா பர்ஸை மூடித் தனஞ்செயனிடம் தந்துவிட்டு, ''இத்தனை அழகான பெண்ணுடைய பெயரும் ரொம்ப அழகாகத்தான் இருக்க வேண்டும்'' என்றாள்.

''சாந்தி!''

''அருமையான பெயர்'' என்றாள் அனுபமா. அதன் அர்த்தத்தை மைக்கேலுக்கு விளக்கினாள். பிறகு சொன்னாள்: ''இந்த உலகத்துக்கு மிகவும் தேவையான ஒன்றை உங்கள் தங்கை தன் பெயராகக் கொண்டிருக்கிறாள். ஒவ்வொருவரும் தங்களைச் சுற்றி அமைதியைப் பரவவிட்டால் இந்த உலகமே சாந்தி மயமாக ஆகிவிடுமல்லவா?''

''அமைதியாவது சாந்தியாவது? உங்களைப் போன்ற விண்வெளி விஞ்ஞானிகள் இருக்கும் வரையில் அது எங்கே இந்த உலகத்துக்குக் கிடைக்கப் போகிறது?''

''அது என்ன அப்படிச் சொல்லிவிட்டீர்கள்?'' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் அனுபமா. ''உலகத்தில் பல்வேறு நாடுகளிடையே நட்புறவு வளர விண்வெளி விஞ்ஞானம் எந்த அளவுக்குப் பயன்படும் என்று உங்களுக்குத் தெரியாதா? சந்திரனையோ ஏனைய



''இவங்க இரண்டு பேரும் ஊட்டிக்கு அடிக்கடி போயிட்டுப் போயிட்டுத் திரும்பி வருவா! இந்தத் தடவைதான் போகவில்லையாம்!''

''ஏன்?''

''அவர் இன்ஜின் டிரைவர்! இவர் கரி போடுறவர்! ரயில் ஸ்டிரைக்கினாலே போகல்லே!''

கிரகங்களையோ ஆராய்வது மட்டும் எங்கள் நோக்கமில்லை. அந்த அளவுக்கு நாம் பெற்றுள்ள ஆராய்ச்சி பூர்வமான அறிவை இங்கே மனித குலத்தின் முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தலாம்.''

''நீ சொல்வது ஒருதலைப்பட்சமான வாதம்தான். மற்றொருபுறத்தில் தனஞ்செயன் கூறுவதிலும் நியாயம் இருக்கவே செய்கிறது'' என்று ஒப்புக்கொண்டான் மைக்கேல். ''விண்வெளி விஞ்ஞானத்தின் தொடக்கமே பாதுகாப்பு முயற்சிகளை ஒட்டித்தானே ஏற்பட்டது?''

''பாதுகாப்பு முயற்சி என்பது அரசியல்வாதிகள் பயன்படுத்தும் நாசூக்கு வார்த்தை'' என்றான் தனஞ்செயன். ''தாக்கும் திறன், அழிக்கும் ஆற்றல் என்றெல்லாம் வேணுமானால் சொல்லுங்கள். உலகப் போரின் இறுதியில் நேச நாடுகள் ஜெர்மனியை வெற்றி கொண்டதும் அமெரிக்காவும் ருஷ்யாவும் ஹிட்லரின் வி — 2 ராக்கெட்டுகளின் ரகசியங்களை அறிந்து கொள்ள எந்த அளவுக்கு அநாகரிகமான போட்டியில் ஈடுபட்டன என்பதைச் சரித்திரம் தெரிவிக்கிறது.''

''உண்மைதான். ஜெர்மானிய ராக்கெட் தளத்தைப் பகுதி பகுதியாகக் கழற்றிச் சென்று கப்பலேற்றி அமெரிக்காவுக்குக் கொண்டு போய் மீண்டும் பொருத்தினார்கள். ஜெர்மானிய விஞ்ஞானிகளைக் கொத்திக் கொண்டு போவதிலும் அவசரம் காட்டினார்கள். பிரிட்டனை அழிக்க வி—2 ராக்கெட் தயாரித்த ஜெர்மானியர் வான் பிரான் அமெரிக்கா போயிராவிட்டால் விண்வெளி விஞ்ஞானம் இவ்வளவு துரிதமாக அங்கே வளர்ந்திருக்காது.''

''எடுத்த எடுப்பில் அங்கே விண்வெளி விஞ்ஞானத்துக்கு முக்கியத்துவம் தரப்படவும் இல்லை. எதிரிகளைத் தாக்கும் ஏவுகணைகளைத் தயாரிப்பதில் படிப்



''அவர்கள் எதற்குப் போராடுகிறார்கள்?''
''லீவுச் சலுகை வேண்டும் என்று....''
''எத்தனை நாள் லீவு?''
''ஆறு மாத லீவு - வருஷத்திற்கு இரண்டு தடவை வேண்டுமாம்!''
- 'அகமகன்'

படியாக முன்னேற்றம் கண்டு வந்த போது அதன் ஓர் அங்கமாக விண்வெளி ஆராய்ச்சியும் தொடங்கியது. அவ்வளவுதான். அணுகுண்டுகளையும் ஹைட்ரஜன் குண்டுகளையும் ஏந்தித் தொலை தூரம் சென்று எதிரி நாட்டைக் குறித்த இலக்குகளில் தாக்கக் கூடிய பயங்கரமான ஏவு கணைகள் கச்சிதப்படுத்தப்பட்ட சமயத்தில் செயற்கைச் சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சியும் அறிவும் ஆரம்ப நிலையில்தானே இருந்தன!''

''ஐ.சி. பி.எம்., ஐ.ஆர்.பி.எம். போன்றவை இருக்கட்டும்; அமெரிக்காவின் முதல் செயற்கைச் சந்திரனை வெற்றிகரமாக உலகைச் சுற்றி வலைய விட்டதே ராணுவம்தான். நாஸா என்ற ராணுவத் தொடர்பற்ற விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் பின்னால்தான் ஏற்பட்டது.''

''என்றாலும் விண்வெளி விஞ்ஞானத்தை யுத்தத்துக்குப் பயன்படுத்தும் படலமும் ஆரம்பமாகிவிட்டதே!''

''மெய்தான், செயற்கைக் கோள்களை ரேடியோ, டெலிவிஷன், டெலிபோன் போன்ற செய்திப் போக்குவரத்துக்களுக்கும், உலகத்தின் வரைபடத்தை இம்மி அளவும் பிசகாமல் தயாரிக்கவும், பூமிக்கடியில் புதையுண்டு கிடக்கும் கனிப் பொருள்களைக் கண்டு பிடிக்கவும், புயல், பருவ மழைகளைப் பற்றிய முன்னறிவிப்புக்களைப் பெறவும் மட்டுமா பயன்படுத்துகிறோம்? இந்த ஆக்கபூர்வமான காரியங்களோடு எதிரி நாட்டின் மீது எட்டாத உயரத்தில் பறக்கும் ஒற்றனாகவும் அதனை இயக்குகிறோம். எதிரிகளின் ராணுவ முஸ்தீப்புகளைப் புகைப்படம் பிடிக்கிறோம். பகை நாட்டிலிருந்து ஏவுகணைகள் புறப்படுமேயானால் விநாடிப் போதும் தாமதமின்றி அது பற்றி நம்மை எச்சரிக்கும் கருவியாகவும் அது விளங்குகிறது.''

''செயற்கைச் சந்திரனின் அழிக்கும் ஆற்றலை நீங்கள் குறிப்பிடவில்லையே? ஏவுகணைகளை ஏந்தியவாறும் அது உலகைச் சுற்றி வரலாமில்லையா? பூமியை நோக்கிச் செல்லுமாறு ஏவுகணைக்குச் சிறிதளவு விசை கொடுத்தால் போதும். பிறகு, பூமியின் ஆகர்ஷண சக்தி அணுகுண்டுடன் கூடிய ஏவுகணையின் வேகத்தைப் பன்மடங்காக அதிகரிக்கச் செய்யும். ஒரு செயற்கைச் சந்திரனிலிருந்து இம்மாதிரி ஐந்து ஏவுகணைகள் புறப்பட்டு விரோதி நாட்டின் ஐந்து முக்கிய நகரங்களை ஒரே சமயத்தில் தரைமட்டமாக்கும். ஏவுகணைகளுக்கு விசை கொடுத்து அனுப்புவதுடன் அவை திசை தப்பிப் போகாமலும் செயற்கைச் சந்திரன் காக்கும். இந்த விவரங்களைச் சமீபத்தில் நான் ஒரு கட்டுரையில் படித்தேன். செயற்கைச் சந்திரனிலிருந்து புறப்படும் சங்கேதக் குறிகள் ஏவுகணைகளின் வழி பிசகாமல் பார்த்துக் கொள்ளுமாம்.''

''இதெல்லாம் சாத்தியம்தான். விண்வெளி விஞ்ஞானமும் ராக்கெட் பற்றிய அறிவும் தொலைதூரத்திலுள்ள படியே ராக்கெட்டுகளை அல்லது ஏவுகணைகளைக் கட்டுப்படுத்தித் திசை திருப்பும் விஞ்ஞான ஆற்றலும் இன்று அந்த அளவுக்கு வளர்ந்து விட்டிருக்கின்றன.''

''நாஸாவுக்குப் பணியாற்றும் நீங்களே ஒப்புக்கொண்டு விட்டீர்கள், பிறகு என்ன?'' என்றான் தனஞ்செயன்.

''மனிதனின் விண் ஆராய்ச்சியும் அவனது மண் ஆசையையொட்டித்தான் நடக்கிறது. ஆக்க சக்திகளை வாமன உருவாக்கும் வகையில் போட்டியிட்டுக் கொண்டு அசுர சக்திகள் விசுவரூபம் எடுத்து விடுகின்றன. ஆக, அனுபமா குறிப்பிட்ட உலக சமாதானம், சாந்தி, நட்புறவு ஆகியவற்றுக்கு இடமேது? சதா மரண பயம்தான்! சந்தேக மயம்தான்! பனிப்போர் எந்த விநாடியில் நிஜமாக மாறி உலகையே பாலைவனமாக்குமோ என்ற அச்சம்தான்!''

அனுபமாவுக்குக் குறுக்கிட்டுப் பேசவே வாய்ப்புத் தராமல் மற்ற இருவரும் ஒருவித வேகத்தோடு உரையாடிக் கொண்டிருந்தனர். அந்தக் கருத்துப் பரிமாற்றத்தின் சுவாரசியத்தில் அவர்கள் அனுபமா அழத் தொடங்கிவிட்டதைக்கூடக் கவனிக்கவில்லை! பேச்சு ஓய்ந்ததும் விம்மல், விசும்பல் ஒலி அவர்கள் செவிகளைத் தாக்கித் திகைக்க வைத்தது! (தொடரும்)



இந்தியாவில் பெரும்பான்மையான மக்கள்
வாழ்வது வாடகை வீடுகளிலேயே

யாவருக்கும் நிலம்
அவரவர்
வருவாய்க்கு ஏற்ற வீடு
விஜிபி ஹவுஸிங்
வழங்குகிறது



நீங்கள் மன நிறைவோடு வாழ
உங்களுக்கென்று இன்றே
ஒரு நிலத்தையும் வீட்டையும்
உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

திட்டமிட்டு உங்கள் வசதிக்கேற்ப விஜிபியின் சுலபத் தவணைத் திட்டத்தினால் பயன் பெற்ற ஆயிரமாயிரம் வாடிக்கையாளருள் நீங்களும் ஒருவராக இருக்கலாம். இன்றே விஜிபியின் குடியிருப்புத் திட்டத்தில் உங்களுக்கென்று ஒரு நிலத்தையும் வீட்டையும் உரிமையாக்கிக் கொள்ளுங்கள்.

national-358

விஜிபி ஹவுஸிங்
பிரைவேட் லிமிடெட்

விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-600015. தொலைபேசி: 442333

மக்களின் வாழ்வோடு இணைந்த மாபெரும் நிறுவனம் விஜிபி



சியாமா

காலண்டரின் நாள் ஏட்டைக் கிழித்த சுமித்ரா அன்று ஏப்ரல் 23ந் தேதி என்று அறிந்தபோது துணுக்குற்ருள். தன் கணவன் கண்களில் அது படாமல் தவிர்க்க அந்த ஏட்டையும் சேர்த்துக் கிழித்தால் என்ன என்றுகூட ஒரு கணம் தயங்கினுள். ஆனல், தான் அப்படிச் செய்வதால் ஒருவேளை அதை அவன் அவசியம் கவனிக்க நேரிடலாம் என்ற எண்ணம் பளிச்சிட அவ்வாறும் செய்ய முடியாமல் திகைத்தாள். ஆனல், தூக்கம் கலைந்து எழுந்த அவள் கணவன் ராமுவோ வழக்கம்போல் பல் துலக்கி, காப்பி சாப்பிட்டுப் பேப்பர் படித்தவன், குளித்துச் சாப்பிட்டு ஒன்பதரை மணிக்கே ஆபீசுக்கும் சென்ருன். அவளுக்கு அது நம்ப முடியாத விந்தையாக இருந்தது.

பிற்பகல் மூன்று மணிக்கு அவள் தம்பி சுந்தரம், ஹாஸ்டலுக்குப் போகும் வழியில் அவள் வீட்டுக்கு வந்திருந்தான். அவன் சட்டக் கல்லூரியில் இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

''என்ன அத்தி பூத்தாற்போல், அதுவும் பரீட்சை சமயத்தில் வந்திருக்கிருய் !'' என்ருள் சுமித்ரா.

''என்ன அக்கா, மறந்துவிட்டாயா? இன்று ஏப்ரல் 23ந் தேதி இல்லையா?'' என்று சுந்தரம் நிறுத்தினுன். அவன் குரலில் அப்போது ஒரு தடுமாற்றம் தெரிந்தது.

அவள் தலையை மட்டும் அசைத்தாள், பேசவில்லை, பேச முடியவில்லை. அத்தனை காலத்துக்குப் பிற்கும் அந்த நினைவு அவளை அப்படிப் பாதித்தது.

''அத்திம்பேர் ஏதாவது சொன்னுரா ?'' என்ருன் சுந்தரம் தொடர்ந்து.

'' அவர் கவனித்ததாகவே தெரியவில்லை '' என்ற சுமித்ராவின் பதிலில் ஏக்கம், வறட்சி.

மாலை ஆபீசிலிருந்து வந்து உடையைக் களைந்து, ஈஸிசேரில் சாய்ந்திருந்த அவள் கணவன் ராமு, அவள் கொடுத்த காப்பியை வாங்கிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான்.

'' ஏன் இத்தனை சோர்வு?'' என்ருள் சுமித்ரா.

''இன்று ஏப்ரல் 23ம் தேதி என்பதை மறந்துவிட்டாயா? ஒன்ரு, இரண்டா, ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டனவே?'' என்று ராமு பெருமூச்செறிந்தான்.

அவனும் மறந்துவிடவில்லை என்பது அவளுக்கு எத்தனையோ ஆறுதலாக இருந்தது. ஆனல், அவளால் பேசத்தான் முடியவில்லை, கண்களைக் கண்ணீர் முட்டிக் கொண்டிருந்தது.

''இப்போது ராஜு இருந்தால் அவனுக்குப் பத்து வயசு ஆகியிருக்கும். ஆரும் கிளாஸாவது படித்துக் கொண்டிருப்பான். பாவம், எங்கே அவன், எப்படி இருக்கானே?'' என்றபோது ராமுவின் குரல் நடுங்கிற்று.

''உங்களுக்கு இன்னும் அந்த நம்பிக்கை போகவில்லையா ?'' என்ருள் சுமித்ரா, நிராசையுடன்.

''அந்த ஏப்ரல் 23ம் தேதிகூடக் கிட்டத்தட்ட இதே வேளையில்தான் நான் வீடு திரும்பியிருந்தேன். வாசலில் நின்று ராஜுவைக் காணவில்லை என்று நீ பதறிக் கொண்டிருந்தாய். எனக்கு முதலில் பயமே தோன்றவில்லை. வேலைக்காரி எங்கேயாவது எடுத்துப் போயிருப்பாள் என்றுதான் எண்ணினேன். ஆனல், நாழிகையாகி வேலைக்காரியும் வெறும் கையுடன் வந்தபோதுதான் எனக்கு முதலில் பயமே தோன்றிற்று. சுந்தரமும், நானும் போலீஸ்ஸ்டேஷன் சென்று,'கம்ப்ளெயிண்ட்' கொடுத்தோம். அடுத்த நாள் — அடுத்த நாள் — அதற்கு அடுத்த நாளாவது குழந்தை வருவான் என்ற நம்பிக்கையில்தான் அப்போதெல்லாம் நான் இருந்தேன். ஆனல்,



நாட்கள் மாசங்களாகி, பிறகு வருஷங்களான போதுதான் என் நம்பிக்கையும் பட்டுப் போயிற்று.''

''இன்று மட்டும் பின் ஏன் இந்த நம்பிக்கை?'' என்று அவள் பேச்சில் குறுக்கிட்டாள்.

''அவன் வருவான் என்று நான் இப்போது சொல்லவில்லையே. எங்கேயாவது உயிரோடு இருப்பான் என்றுதானே சொன்னேன்.....'' என்ருன் அவன்.

அவள் ஆவலுடன் அவனை உற்று நோக்கிக் கொண்டிருந்தாள்.

''சாதாரணமாகப் பணத்துக்காகக் குழந்தையைத் திருடுபவர்கள்தான் அவர்கள் கேட்ட பணம் கிடைக்காவிட்டால் அந்த

ஆத்திரத்தில் குழந்தைக்கு ஏதாவது செய்து விடுவார்கள். நம்மிடம் அப்படியொருவரும் பணம் கேட்கவில்லையே? அதோடு அந்த நாகரிகம் நல்ல வேளையாக நம் ஏழை நாட்டுக்கு இன்னும் வரவில்லை. இங்கே குழந்தையைத் திருடுபவர்கள் அவர்களைப் பிச்சை எடுக்கப் பழக்க, அப்படிச் செய்வதாகச் சொல்கிறார்கள்.''

அவனால் தொடர்ந்து பேச முடியவில்லை. குரலில் அழுகை விம்மிக் கொண்டிருந்தது.


''பிச்சை யாசிப்பவர்களின் உள்ளத்தைத் தொடச் சமயத்தில் குழந்தையை அங்கஹீனம் கூடச் செய்துவிடுவார்களாமே!'' என்றாள் சுமித்ரா.

அதற்கு அவன் ஒரு பதிலும் சொல்லவில்லை. அந்தக் கற்பனையே அவனுக்குப் பயங்கரமாக இருந்தது.

''உங்கள் நண்பர் மணி தஞ்சாவூரிலிருந்து எழுதியிருக்கிறார். இன்று என் மனமிருந்த நிலையில் அதைச் சொல்லக்கூட நான் மறந்து விட்டேன்'' என்றவள் கடிதத்தை அவனிடம் எடுத்து வந்து கொடுத்தாள்.

அதை அவன் படித்து முடித்தபோது, ''நீ இதைப் படிக்கவில்லை?'' என்று கேட்டான் ஆவலுடன்.

'' நான்தான் சொன்னேனே, என் மனம் இன்று ஒன்றிலுமே செல்லவில்லை என்று—'' என்று ஆரம்பித்தவளை அவன் குறுக்கிட்டு, ''இப்போ மணி ஏழுதானே ஆகிறது, நான் இன்றிரவே ஒன்பது மணி ரயிலில் தஞ்சாவூர் போயாக வேண்டும். அங்கு மணிக்கூண்டு ரோட்டில் ஒரு சைக்கிள் கடையில் ஒரு மாச காலமாக ஒரு பத்து வயசுப் பையன் வேலை செய்கிறானாம். அந்த வழியாகப் போகும் போதும் வரும் போதும் மணி அவனைப் பார்த்திருக்கிறான். சிறுவன் அசப்பில் நம் ராஜூ மாதிரியே இருக்கிறானாம். கடையின் முதலாளியிடம்அச்சிறுவன் பற்றிக் கேட்ட போது ரயில்வே ஸ்டேஷனில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த அவனை ஒரு தொழில் தெரிந்து பிழைத்துக் கொள்ளட்டுமே என்று, தான் அழைத்து வந்ததாக அந்தக் கடை முதலாளி சொன்னானாம். அவன் ஒருவேளை நம் ராஜூவாகவே இருந்தால்—?'' என்று ராமு சொன்ன போது, ''இதென்ன பைத்தியக் காரத்தனம்?'' என்றுதான் சுமித்ராவுக்குத் தோன்றிற்று. ஆனால் போக வேண்டாம் என்றுகட்டாயமாகத் தடுத்துச் சொல்ல அவளுக்குத் துணி வில்லை. ஏப்ரல் 23ம் தேதியன்று இப்படியொரு செய்தி அவர்களுக்குவருவானேன்?



அடுத்தநாள் மாலை அச்சிறுவனைப் பார்த்த பின் பிரகதீசுவரர் ஆலயத்தின் பிராகாரத்தில் முருகன் கோயிலின் படிக்கட்டில் நண்பர்கள் இருவரும் உட்கார்ந்து தங்கள் தங்கள் சிந்தனையில் ஈடுபட்டிருந்தனர்.

'' நீ என்ன சொல்லுகிறாய்?'' என்றான் ராமு மணியிடம், திடீரென்று.

'' எதைப் பற்றி ?'' என்று கேட்டு மணி விழித்தான்.



இரு குப்பிகள் எதற்கு?

கிஸ்ஸிஞ்ஜர் தம்பதிகளுக்கு இஸ்ரேலியப் பிரதம மந்திரி கோல்டா மீர் பிரமாதமான வரவேற்பு அளித்தார். நான்ஸிக்கு வெகு அழகான இரு கண்ணாடிக் குப்பிகளை கோல்டா மீர் அளித்தார். ''ஒரு பாட்டில் நான்ஸி தனக்குப் பிரியமான ஸெண்டைப் போட்டு வைப்பதற்கு. இரண்டாவது கண்ணாடிக் குப்பி கிஸ்ஸிஞ்ஜர் சுற்றுப் பிரயாணத்திலிருக்கும்போது நான்ஸி தனிமையில் சொரியும் கண்ணீரைச் சேர்த்து வைக்க!'' என்றார் இஸ்ரேலியப் பிரதமர்.

— 'நியூஸ் வீக்' - பி. எஸ். எம்.

''நான் அந்தச் சிறுவனை என்னோடு சென்னைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். நீதான் அந்தக் கடை முதலாளியிடம் சொல்லி எல்லா ஏற்பாடுகளும் செய்ய வேண்டும்'' என்றான் ராமு.

''உனக்கென்ன, பைத்தியமா? உன் மனைவியிடம் இது பற்றிக் கேட்க வேண்டாமா? அவளும் பார்த்த பிறகாவது இம்மாதிரி ஒரு முடிவு செய்தால் அதற்கு அவள் சம்மதமாவது இருக்கும்'' என்றான் மணி.

''அந்தச் சிறுவன் ஏன் ராஜுவாக இருக்கக் கூடாது?''

''ராஜுவாக இல்லாவிட்டால்? இப்படி ஊர் பேர் தெரியாத ஒரு சிறுவனின் பொறுப்பைச் சுமித்ரா மேல் சுமத்துதல் நியாயமாகுமா? நீ இவனை உடன் அழைத்துப் போனால் அவனைப் பராமரிக்கும் பொறுப்பு அவள் தலையில்தானே விழும்? உனக்கென்ன ஆபீஸ், ஜம்மென்று ஹாய்யாக வெளியே போய் வருவாய்!'' என்றான் மணி.

ஆனால் கடைசியில் ராமுவின் பிடிவாதந்தான் வென்றது. அச்சிறுவன் தன் மகனாக இருக்க முடியாது என்றுதான் அவன் உள்ளுணர்வும் சொல்லிக் கொண்டிருந்தது. மணி எழுதியிருந்தது போல் தனக்கும், அச்சிறுவனுக்கும் சாயல் ஒற்றுமையிருந்தது என்னவோ உண்மை. ஆனால், சிறுவனின் பேச்சு, அவன் குழைந்து, நெளிந்து நடந்துகொண்ட விதம் ஒன்றுமே ராமுவுக்குப் பிடிக்கவில்லை. அருவருப்பாகக்கூட இருந்தது. ஆனால், மூன்று வயதில் காணமற் போய்ப் பிச்சைக்காரர்களால் வளர்க்கப்பட்ட சூழ்நிலையில் அவன் வேறு எப்படி வளர்ந்திருக்க முடியும்? வேறு எப்படிப் பேச முடியும்? தான் வேண்டாம் என்று அவனை விட்டுப் போய், ஒருவேளை உண்மையிலேயே அவன் தன் குழந்தையாக இருந்தால், அவன் வருங்காலம் என்னவாகும் என்ற எண்ணமே அவனை நிலைகுலையச் செய்தது.

அடுத்தநாள் காலை, ஒரு சிறுவனுடன் தன் கணவன் வீட்டுக்குள் நுழைந்தபோது சுமித்ரா அதிர்ச்சியுற்றாள். விஷயம் இந்த அளவுக்கு வரும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், தன்னைச் சமாளித்துக் கொண்டு, கணவனைத் திருப்தி செய்ய, சிறுவனை நெருங்கிய அவள் அவனை அணைத்துக் கொள்ள முயன்றாள். சிறுவனோ அவளிடமிருந்து விலகி, கூழைக் கும்பிடு போட்டுக் கொண்டு நின்றான். அந்த முதல் சந்திப்பே அவர்களிடையே ஒரு பிளவை ஏற்படுத்திவிட்டது. நாளடைவில், ராமுவிடம் ஒட்டிக் கொண்டது போல், சிறுவன் அவளிடம் ஒட்டிக் கொள்ளவில்லை. அவளைக் கண்டாலே பயப்படுபவன் போல் தோன்றினான். வீட்டில் ராமு உள்ளவரையில் அவனையும், அவன் ஆபீஸ் அறையையும் வளைய வளைய வருவான். அவன் ஆபீஸ் போனபின், திண்ணைக்குப் பக்கத்தில் இருந்த ஜன்னலின் வழியாகத் தெருவில் போவோர் வருவோரைப் பார்த்துக் கொண்டு பொழுதைப் போக்குவான். மாலையில், ராமு வீடு திரும்பிய பிறகுதான் அவன் முகம் மலரும்; செயலிலும் ஓட்டம் வரும்.

ராமு அவனை ராஜு என்று அழைத்தது சுமித்ராவுக்குச் சிறுவன் பேரில் இருந்த வெறுப்பை அதிகரிக்கத்தான் செய்தது. இவனாவது, சந்திர பிம்பம் போன்ற அவள் குழந்தை ராஜுவாவது! அவனை ராஜு என்று அழைப்பதைத் தன் மகனுக்குச் செய்த துரோகம் என்று அவள் எண்ணினாள். இது ஒன்றுமே ராமுவின் மனத்தில் படவில்லை. அச்சிறுவனை ஒரு நல்ல மனிதனாக்கும் முயற்சியில் அவன் காலம் போய்க் கொண்டிருந்தது. மாலை ஆபீஸிலிருந்து திரும்பியதும் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரம் அச்சிறுவனுக்குப் படிப்பு சொல்லித் தருவான். அதுகூடச் சிறுவனிடம் சுமித்ராவின் ஆத்திரத்தை அதிகரிக்கச் செய்தது. அதற்குமுன், அந்த மாலை நேரத்தை எத்தனையோ குதூகலத்துடன், தன்னோடு தன் கணவன் செலவழித்ததை எண்ணிப் பொருமுவாள்.

சுந்தரத்துக்கும் தன் அத்திம்பேரின் போக்கு முற்றும் பிடிக்கவில்லை. யாரோ முன்பின் தெரியாத ஒரு தெருப் பையனை வீட்டில் வைத்துக் கொண்டு அவன் சீராட்டுவதைத் தன் சகோதரிக்கு இழைத்த கொடுமையாகச் சுந்தரம் கருதினான். அதனால், இப்போதெல்லாம் ராமு வீட்டிலிருக்கும் சமயம், அவன் அவர்கள் வீட்டுக்கு வருவதில்லை. பிற்பகலில், சுமித்ரா தனியாக இருக்கும்போது வந்து அவளுடன் பேசிப் போவான். அச்சமயம், அவன் அந்த ஏழைச் சிறுவனை ஏறிட்டுக்கூடப் பார்க்கமாட்டான். மனம் உடைந்த சிறுவன் வாசல் ஜன்னலருகே உட்கார்ந்து அந்த வீட்டில் தன்னை நேசித்த ஒரே நபரின் வருகைக்காக ஏங்கித் தவம் கிடப்பான்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் ராமு எத்தனையோ ஆர்வத்துடன் சொல்லிக் கொடுத்த படிப்பில் சிறுவன் மனம் செல்லவில்லை. ஏதோ கடனுக்காக, அந்த ஒரு நபரின் அன்பையும் இழந்துவிடக் கூடாது என்ற பயத்தில் சொல்லிக் கொடுத்த பாடங்களைத் தன்னால் இயன்றவரை நினைவூட்டிக் கொள்ள முயல்வான். ஆனால், மனம்தான் அதில் செல்லாது. அப்பொழுதெல்லாம் அவ


வசந்தம் தரும்
புன்னகை
வசந்த காலம். இளமையான கனவுகளில்
களித்திடும் இளைய ஜோடிகள்.
அவர்களின் இனிய திருமண நாட்களில்
அணிந்து மகிழ அழகுக்கு அழகூட்டும் நவீன
டிசைன்களில் பட்டுச் சேலைகள், புகழ் பெற்ற
ஊர்களில் பெயர் பெற்ற கைவண்ண
கலைஞர்களால் தயாரிக்கப்பட்டு முதலாவதாக
உங்களுக்கு வழங்குகிறது கீதா.
ஏராளமான மில் கைத்தறி ஜவுளி ரகங்கள் இளைய
சமுதாயத்தினரின் எழுச்சியூட்டும் ரகங்கள்.
தேவையானவற்றை தனித் தனி
மாடியில் தேர்ந்தெடுங்கள்.
கீதா
சில்க் & சாரி பஜார்
31-32, N.S.B, ரோடு,
திருச்சி-620002
CROWN-G20




புதுமை குன்றா
பொலிவுடன்
இருங்கள்
CINTHOL
LUXURY
TOILET POWDER
BY
சிந்தால் பவுடர் அதிவெப்பமான
நாளிலும் உங்களைப் புதுமை
குன்றாமல் வைத்திருக்கிறது.
அதன் அற்புத நறுமணம்
உங்களை விட்டு
அகலுவதில்லை.
கோத்ரெஜ் அளிக்கும்
சிந்தால்
Interpub/GSP/12/74 Tam

னுக்கு அழுகை அழுகையாக வரும். தஞ்சாவூர் ரயில்வே ஸ்டேஷனில் வானம்பாடி போல் உல்லாசமாகத் தான் ஆடிப் பாடித் திரிந்த நாட்கள் மீண்டும் வராதா என்று ஏங்குவான். சில சமயம் ரயில் ஏறித் தான் ஓடிப் போய்விட்டால் என்ன என்றுகூட அவனுக்குத் தோன்றும். அப்போதெல்லாம், ராமுவின் அன்பு முகம் அவன் மனக் கண் முன் வந்து, தான் அப்படி எண்ணியது கூடத் தவறு என்று தன்னையே கடிந்து கொள்வான். தன் விபரீதப் போக்கால், அந்த இளம் உள்ளத்தில் எழுப்பியிருந்த சூறாவளியை உணராத சுமித்ராவோ நாளடைவில் கணவன் இல்லாத சமயம், அவனுடன் பேசுவதையேகூட நிறுத்திவிட்டாள். இப்படி மாதங்கள் பல சென்றன. சிறுவன் அந்த வீட்டில் நிலைத்து ராமுவின் உள்ளத்திலும் குடிகொண்டு விட்டான். ஆனால் அவனால் சுமித்ராவைத் தான் வெல்லமுடியவில்லை.

ஏப்ரல் 23ந் தேதி. விடிந்ததுமே அந்த நாள் தன் கணவனுக்கும் நினைவில் இருக்கிறதா என்று தேடுபவள் போல் சுமித்ரா அடிக்கடி அவன் முகத்தைக் கவனித்தவண்ணம் இருந்தாள். அவனோ அது பற்றிச் சிந்தித்ததாகவே தெரியவில்லை. அச்சிறுவனை அடைந்ததால் தன் பிரச்னைக்கெல்லாம் முடிவு கண்டவன் போல் ராமு நிம்மதியாகவே தோற்றம் அளித்தான். கடைசியில் அவன் சாப்பிட்டு ஆபீஸ் சென்றபின் சுமித்ராவுக்குத் தன் அழுகையை மறைக்கத் தேவையிருந்ததாகத் தோன்றவில்லை. கண்ணும் கண்ணீருமாக அவளைக் கண்ட சிறுவனோ அவளுக்கு ஆறுதல் சொல்லத் துடித்தான். ஆனால் அருகில் செல்லத்தான் பயம். அவளோ அவனைக் கவனித்ததாகவே தெரியவில்லை. தன் அறைக்குச் சென்றவள் அங்கிருந்த ஒரு பெட்டியைத் திறந்து அதில் பத்திரப்படுத்தி வைத்திருந்த ராஜுவின் விளையாட்டுப் பொருள்களை ஒவ்வொன்றாக எடுத்துத் துடைத்து மீண்டும் பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தாள். ஆண்டுதோறும் ஏப்ரல் 23ந் தேதி ராஜுவின் நினைவார்த்தமாக அவள் அதைச் செய்வாள். கூடத்திலிருந்து அவள் ஒவ்வொரு செய்கையையும் சிறுவன் கவனித்துக் கொண்டிருந்தான். தன்னையும் அதில் கலந்து கொள்ளச் சொல்லமாட்டாளா என்று அவனுக்கு ஏக்கம்.

பகல் பன்னிரண்டு மணியானபோதுதான் தான் இன்னும் சிறுவனுக்குச் சாப்பாடே போடவில்லை என்பது அவள் நினைவுக்கு வந்தது. பெட்டியைத் திறந்தபடியே அறையில் வைத்தவள் அவசரம் அவசரமாகச் சமையல் அறைக்குச் சென்று சிறுவனுக்குச் சாப்பாடு தயாரிப்பதில் கவனத்தைச் செலுத்தினாள். வேலை முடிந்த பொழுது சமையல் அறையிலிருந்தே சிறுவனை வந்து கொட்டிக் கொண்டு போகும்படி அழைத்தாள். இரண்டு மூன்று தரம் கூப்பிட்டும் அவன் வராமற் போகவே கோபமாக அவனை அழைத்துக் கொண்டே வாசல் அறைக்கு வந்தவள் அங்கே ஜன்னலுக்கு அருகே உட்கார்ந்து பசி மயக்கத்தில் அயர்ந்து தூங்கும் சிறுவனைக் கண்டாள். அத்தனை நேரம் அவனைப் பட்டினி போட்டு



செலவும் 'கண்டிஷன்' ஆகிறது !

மின்விசைப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு அமெரிக்க நிறுவனங்கள் இப்பொழுது புதுப் புதுப் பொருள்களைப் படைத்தவண்ணம் இருக்கின்றன. இவற்றில் ஒன்று ''ஸோலார் மாஸ்டர்''. இது மென்னிறம் கொண்ட ஃபிலிம். கண்ணாடிக் கதவுகளுக்கும் சன்னல்களுக்கும் கண்ணாடியைக் கழற்றாமலே உள்புறத்தில் பொருத்துவதற்காகும்.

இதனைப் பொருத்தினால் சூரிய வெப்பத்தின் ஐந்தில் நான்கு பங்கு உள்ளே வராமல் தடுக்கப்பட்டு விடுகிறது. இதனால் 'ஏர்கண்டிஷன்' செலவில் 45 சதவீதம் குறையும் என்கின்றனர் இதன் தயாரிப்பாளர்கள். அறையின் வெப்பத்தைக்கூட 20 டிகிரி குறைக்கவல்லது இது.

விட்டோமே என்ற வேதனையைக் காட்டிலும் தான் கூப்பிட்டும் அவன் அப்படித் தூங்கியது அவள் கோபத்தைக் கரைபுரண்டோடச் செய்தது. அவனை நெருங்கி ஆத்திரமாக அவன் கையைப் பற்றி இழுத்த பொழுது இன்னொரு கையால் அவன் அணைத்துக் கொண்டிருந்த அந்தச் சிங்கப் பொம்மை அவள் கண்களில் பட்டது. சமையல் அறையில் அவள் இருந்தபோது அந்தப் பொம்மையை அவன் எடுத்து வந்திருக்க வேண்டும். அந்தச் சிங்கப் பொம்மை அவள் ராஜுவுக்கு மிகவும் பிடித்த விளையாட்டுப் பொருள். அதை அவனுக்கு வாங்கித் தந்த சமயம் ராமுவும் அவளும் அதை 'லியோ' என்று அழைக்க அவனுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். குழந்தையும் தன் மழலையில் 'இயோ' என்று சொல்லி அவளையும் அவள் கணவரையும் சொர்க்கத்துக்கே கொண்டு வைத்துவிடுவான். அந்தப் பொம்மையை இத்தனை சுவாதீனமாக இந்தச் சிறுவன் அணைத்துக் கொண்டிருந்ததைக் கண்ட பொழுது சுமித்ரா முற்றும் தன் நிதானத்தை இழந்தாள். சிறுவன் தூங்கிக் கொண்டிருந்ததையும் பாராட்டாமல் கரகரவென்று அவனைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள். ஓர் அதிர்ச்சியுடன் விழித்துக்கொண்ட சிறுவனோ பொம்மையை விடுவதாக இல்லை. அது எங்கே பறிபோய்விடுமோ என்று அஞ்சுபவன் போல் அதை மார்போடு அணைத்துக் கொண்டு அவள் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான். அதற்கு முன் அவனிடம் அப்படிப்பட்ட ஒரு பிடிவாதத்தைக் கண்டறியாத சுமித்ராவும், ''உனக்கென்ன வந்துவிட்டது?'' என்று சீறினாள்.

சிறுவன் பொம்மையை இன்னும் விடவில்லை. ''நான் தரமாட்டேன். அது என் 'இயோ' '' என்று சொல்லி அவள் பிடியிலிருந்து திமிறிக் கொண்டிருந்தான்.

முற்றும் எதிர்பாராத அந்நிகழ்ச்சியால் கண் திறந்த சுமித்ராவும், சிறுவனை மார்போடு அணைத்துக் கொண்டாள். பிறகு ராஜு உண்மையிலேயே வீடு திரும்பியிருந்ததைத் தன் கணவனிடம் சொல்ல டெலிபோனை நோக்கி அழுது கொண்டும் சிரித்துக் கொண்டும் வெகு வேகமாக விரைந்தாள்!

சத்தியா ஸ்டுடியோ உரிமையாளர் திரு எம். ஜி. ஆர். கழகத்தில் மிக்க செல்வாக்குள்ளவராகத் திகழ்ந்தவர். அவர் கழகத்திலிருந்து வெளியேறிப் புதிய கட்சி அமைத்துவிட்டார். அதற்கு நேர் எதிர்ப்புறத்துக் கட்டடத்தில் வசித்துவரும் முன்னாள் அமைச்சரும் கழகத்திலிருந்து வெளியேறிப் புதிய கட்சியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இப்படியும் ஓர் ஒற்றுமை !

'சுடர்' என்று பெயர் கொண்ட பங்களாவிலிருந்து திருமதி சத்தியவாணி முத்துவை வெளியேறச் சொல்லி விட்டார்களாம். இவருக்குக் கீழ்ப்பாக்கத்தில் சொந்த வீடு ஒன்று இருக்கிறது. அவர் அமைச்சரான பிறகும் அந்த வீட்டிலேயே சில வருடங்கள் வசித்து வந்திருக்கிறார். பின்னர் அந்த வீட்டை வாடகைக்கு விட்டுவிட்டு அரசு தமக்கென அளித்த 'சுடர்' பங்களாவில் குடியேறினார். இன்று தமது சொந்த வீட்டுக்கே குடிபோய்விடலாம் என்றால் அந்த வீட்டில் ஏற்கனவே குடியிருப்பவர் (வட இந்தியராம்) வீட்டைக் காலி செய்ய மறுக்கிறாராம்! 'பேப்பரில் விளம்பரம்கூடக் கொடுத்து வருகிறேன். வீடு ஒன்றும் கிடைக்கவில்லை இன்னும்' என்கிறார் முன்னாள் அமைச்சர்.

புதிய கட்சி பற்றிக் கேட்டதற்கு அவர் கூறுகிறார் : ''கட்சிக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை. கட்சிக் கொடி பற்றியும் இன்னும் முடிவு செய்யவில்லை. திரு சிவசங்கரன் எம். பி., திரு இளம்பரிதி முதலிய ஐந்து பேர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து புதிய கட்சிக்கு ஆதரவு திரட்ட ஆரம்பித்துள்ளனர். இதுவரை எனக்கு ஆதரவு அளித்துச் சுமார் 530 கடிதங்கள் வந்துள்ளன — தமிழ்நாட்டிலிருந்து மட்டும். புதிய கட்சியில் ஷெட்யூல் வகுப்பினர் (Scheduled Castes and Scheduled tribes) மட்டுமே இடம் பெறுவர்.''

''புதுக் கட்சியில் எவ்வளவு பேர்கள் சேருவார்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்?''

''தமிழ்நாட்டின் மொத்த ஜனத்தொகை நாலரைக் கோடியில் ஷெட்யூல் வகுப்பினர் அரிஜனங்கள் மட்டும் சுமார் ஒன்றேகால் கோடிப் பேர். அவர்களுள் நாற்பது லட்சம் பேர் எங்கள் கட்சியில் சேருவார்கள் என நிச்சயமாக நம்புகிறேன்.''

''தேர்தல் வந்தால் சட்டசபையில் உங்களுக்கு எத்தனை இடங்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது ?''

''ரிசர்வ் தொகுதிகள் (43) இருப்பதால் கணிசமான வெற்றி பெற முடியும். 43 எம். எல்.ஏ.க்கள் எங்கள் கட்சியில் இருந்தால், எங்களுடைய நியாயமான கோரிக்கைகளை, தேவைகளை யாரும் புறக்கணிக்க முடியாது. போராடுவதற்கு ஏற்ற பலம் ஏற்படும்.''

''இப்போது ஏழு ஆண்டுகள் நீங்கள் அமைச்சராக இருந்து சாதிக்க முடியாததைச் சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையிலே சாதித்துவிட முடியுமா ?' அரிஜனங்களுக்குக் கணிசமான வசதிகள், முன்னேறுவதற்கான வாய்ப்புக்கள் அளிக்க முடியவில்லை என்பது தானே உங்கள் குறை?''

''ஆமாம். அரிஜன முன்னேற்றத்துக்காக நான் எத்தனை கோரிக்கைகள் சமர்ப்பித்தாலும் அவற்றுக்கு ஆதரவில்லை. நான் அமைச்சர் என்ற வகையிலே உத்தரவு போட்டாலும் அவை பெரும்பாலும் நிறைவேற்றப்படுவதில்லை. அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை. அரிஜன நலனுக்காக மத்திய அரசு வழங்கும் உதவியை முழுவதும் அரிஜன முன்னேற்றத்துக்குச் செலவிட முடியவில்லை. அத்தொகையில் ஒரு பகுதி வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுகிறது.''

''ஏழாண்டுக் காலம்' நீங்கள் அமைச்சராக இருந்தீர்களே — அப்போதெல்லாம் இதைப் பற்றிக் குறை கூறவில்லையே ?''

''ஏழாண்டுக் காலமும் இதே போராட்டந்தான் ! கட்சிக்குள் போராடியிருக்கிறேன். அமைச்சரவைக் கூட்டங்களில் வற்புறுத்தியிருக்கிறேன். கண்டித்துக் ' கேட்டால் முதலமைச்சருக்குக் கோபம் !''

''அரிஜன மக்களின் நலனுக்கு உதவ முதலமைச்சரே தடையாயிருந்திருக்கிறாரா?''

''ஆமாம். அதனால்தான் இந்த அளவுக்கு நிலைமை முற்றியது. அரிஜனக் குடும்பத்தில் தாம் சம்பந்தம் செய்திருப்பதால் தாமும் ஓர் அரிஜன் என்று முதலமைச்சர் கூறுகிறார். வேடிக்கையாக இல்லையா இது? அம்பேத்கார் ஒரு பிராமணப் பெண்ணை மணந்தார். அதனால் தாமும் பிராமணர் ஆகிவிட்டதாக அவர் கூறினாரா? குசேலரும் பிராமணப் பெண்ணைத்தான் மணம் செய்து கொண்டார். அதனால் அவர் பிராமணர் ஆகிவிட்டதாகக் கூறுகிறாரா? கூறுவதுதான் பொருந்துமா?''

''காந்திஜியே அரிஜனங்களுக்காகப் பிரமாதமாக ஒன்றும் செய்துவிடவில்லை என்று நீங்கள் சில மாதங்களுக்கு முன்பு குறை கூறினீர்களே?''

''அதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். காந்திஜி ஒன்றுமே செய்யவில்லை என்று நான் கூறவில்லை. அரிஜன **முன்னேற்றத்துக்காக** அவர் செய்ததை நான் மறுக்கவில்லை ; குறை கூறவுமில்லை. ஆனால் தீண்டாமையை ஒழிக்க அவர் செய்தது போதாது என்பதே என் கருத்து. உலகப் புகழ்பெற்ற ஒரு பெரிய தலைவர் அவர். அவர் மனம் வைத்தால் இன்னும் எவ்வளவோ செய்திருக்கலாம் என்று நம்புகிறேன்.''

'' அவர் அகால மரணம் அடையாதிருந்திருந்தால் உங்கள் நம்பிக்கை நிறைவேறியிருக்கலாம். அது போகட்டும், நீங்கள் பதவியை இழக்க நேரிட்டதன் காரணம் முதலமைச்சருடன் இப்பிரச்னை குறித்து எழுப்பிய போராட்டம் மட்டுந்தானா — அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?''

''அரிஜன மக்களுக்கு நான் செய்ய நினைத்த, செய்ய விரும்பிய நன்மைகளைச் செய்ய முடியவில்லை. அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை. இதற்கு முதலமைச்சர்தான் காரணமாவார். சட்ட மன்றம் கூடும்போது இதைக் கேட்கத்தான் போகிறேன். பைல்கள் எல்லாம் அவர்களிடம் உள்ளன. இருந்தாலும் என்னிடமும் சில ஆதாரங்கள் இல்லாமல் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் பெயர்களைக்கூட இது வரை நான் யாரிடமும் வெளியிடவில்லை. சட்ட மன்றத்தில் கேட்கப்பட வேண்டியது இது.' தனிப்பட்ட முறையில் வேறு உட்பூசல், தகராறு ஏதும் இல்லை.''

''நீங்களே பதவியை ராஜிநாமா செய்திருந்தால் இன்னும் கௌரவமாக இருந்திருக்கும் அல்லவா?''

''நானே ராஜிநாமா செய்திருந்தால் எல்லாப் பழிகளையும் என் மீதே போடுவார்களே? குமரி மாவட்டம் தாழ்த்தப்பட்டோர் லீக் தலைவர் எனக்கு எழுதியுள்ள கடிதத்திலும் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார். முதலமைச்சர் என்னிடமிருந்து ராஜிநாமாக் கடிதம் பெற்றுக் கொண்டு என்னை அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவித்திருப்பதற்குப் பதில் 'டிஸ்மிஸ்' செய்திருப்பது அவமானத்துக்குரியது என்று எழுதியிருக்கிறார் அந்த அட்வோகேட்.''

''நீங்கள் பதவியிலிருந்து நீக்கப்பட்டவுடன் வேறு சில எம்.எல்.ஏ.'க்கள் உங்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் கட்சியிலிருந்து வெளியேறியதாயும் அவர்கள் மீண்டும் கழகத்திலேயே சேர்ந்துவிட்டதாயும் செய்திகள் அடிபட்டனவே?''

''உண்மைதான். அவர்கள் திரும்பிப் போகக் காரணம் கலைஞரிடம் உள்ள பயந்தான்! என்னிடம் என்ன, பணம் இருக்கிறதா? படை பலம் இருக்கிறதா? அவர்களுக்கு நான் என்ன பாதுகாப்புத் தர முடியும்? ஆட்சியை எதிர்த்துக் கொள்ள அவர்களுக்குப் பயம்.''

''அரிஜனங்களுக்குக் கொடுமை இழைக்கும் விஷயத்தில் பிராமண சமூகத்தைக் குறை கூறுவதற்கில்லை. மற்றவர்கள்தான் இதற்குப் பொறுப்பு என்று தஞ்சையில் நிகழ்ந்த கூட்டமொன்றில் முன்பு பேசினீர்களே ...?''

''ஆமாம்! என் மனத்துக்குச் சரி என்று பட்டதைச் சொன்னேன். இதுவரை அரிஜனங்களுக்கும் பிராமணர்களுக்கும் சண்டை, பூசல் என்று தமிழ்நாட்டில் எந்த ஊரிலும் நிகழ்ந்ததே இல்லை. அரிஜனங்கள் எங்கேயாவது தாக்கப்பட்டிருந்தால் அதில் மற்ற சாதியினர் தாம் கலந்து கொண்டிருக்கிறார்களே ஒழியப் பிராமணர்கள் அல்ல; காலத்துக்கேற்றபடி அவர்கள் மாறியுள்ளனர் என்பதைத்தான் குறிப்பிட்டேன். உண்மையும் அதுதான். ஏன், சாதி ஒழிப்புப் போராட்ட சமயத்தில் பெரியாரிடமே இதை வெளிப்படையாகக் கூறினேன். எனக்கு நியாயம் என்று தோன்றியதைச் சொல்ல நான் பயப்படுவானேன்?''

''நீண்டகாலம் தி.மு.க.வுடன் நீங்கள் கொண்டிருந்த தொடர்பு இப்போது அறுந்துவிட்டது. எப்போது நீங்கள் தி.மு.க.வில் சேர்ந்தீர்கள்?''

''நான் தி.மு.க.வில் சேர்ந்தேனா? அக்கட்சியை உருவாக்கியவர்களுள் நானும் ஒருத்தி. பெரியாரிடமிருந்து பிரிந்து வந்து தி.மு.கழகத்தை அண்ணா தலைமையில் உருவாக்கிய போது, உருவாக்கியவர்களுள் நானும் ஒருத்தி என்றுதான் கூற வேண்டும். அண்ணாதான் தலைவர். நானும், கலைஞரும், நாவலரும் சமமானவர்களே. கலைஞர் என் தலைவர் அல்லவே? காங்கிரஸ் ஆட்சியில் திரு கக்கன் அரிஜன நல அமைச்சராக இருந்தார். திரு காமராஜ் திரு கக்கனுக்குத் தலைவர். திரு பரமேசுவரனும் அப்பதவியை வகித்தார். அவருக்கும் திரு காமராஜர் தலைவர். அவர்கள் திரு காமராஜருடன் சரிசமமாக வாதாட முடியாது. ஆனால் என் விஷயம் அப்படியில்லை. கழகத்தில் நானும் திரு கருணாநிதியும், திரு நெடுஞ்செழியனும் சரிசமமானவர்கள். இப்படிச் சரிசமமானவர்கள் என்ற வகையிலே நான் அரிஜன நலத் திட்டங்கள் பற்றி அவரிடம் வாதாடியிருக்கிறேன். போராடியிருக்கிறேன். 'அரிஜனங்களின் நலனுக்காக அம்மையார் அங்குலம் அங்குலமாகப் போராடியவர்' என்று மதுரை முத்துவே பேசியிருக்கிறார் என்னைப் பாராட்டி. இருந்தும் பல திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அதனால்தான் எனக்கு நியாயமான கோபம். அதைத்தான் வெளியிட்டேன். சட்டசபை மீண்டும் கூடும்போது கடைசி பெஞ்சியிலாவது நான் உட்காருவேன். நான் ஒரு எம்.எல்.ஏ. இப்போது. சட்டசபையில் இப்பிரச்னைகளையெல்லாம் கேட்கத்தான் போகிறேன்!''

சத்தியவாணி சொல்கிறார்!



திருமதி சத்தியவாணி முத்துவுக்கு இரு பெண்கள், இரு பிள்ளைகள். காலஞ்சென்ற அவரது கணவர் திரு எம். எஸ். முத்து கார்ப்பொரேஷனில் பணியாற்றியவர். ''1938ம் ஆண்டுக்கு முன்பு அவர் காங்கிரசில் இருந்தார். திரு டி. செங்கல்வராயனுடன் அவர் என்னைப் 'பெண் பார்க்க' வந்தார். அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். திருமணத்துக்குப் பிறகுதான் அவர் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்தார். எங்கள் திருமணம் சுயமரியாதைத் திருமணம்தான். திரு வி. க. அவர்கள் தலைமையில் நடைபெற்றது'' என்று கூறுகிறார் முன்னாள் அமைச்சர்.

நான் விடைபெறுகையில், ''வீட்டில் நான், என் மகள், பிள்ளை, மருமகள், மாமியார் ஆகியோரே இருக்கிறோம். போலீஸ் பாதுகாப்பும் இப்போது கிடையாது. என் மகனைத் தவிர வேறு ஆண் துணையும் இல்லை. டெலிபோனில் சிலர் என்னை அழைத்து மிரட்டுகிறார்கள். போலீஸ் பாதுகாப்புத்தான் இல்லையென்றாலும், குழாயில் கூடத் தண்ணீர் வராமலிருக்கிறது! மின்சார மோட்டாரைக் கூடப் போடமாட்டேன் என்கிறார்கள்!'' என்று குறைப்படுகிறார் முன்னாள் அமைச்சர். பேட்டி: ஆர். பி.

ஆசைகள் மடிவதில்லை

20

கதை: கௌசிகன்

சித்திரம்: சூர்யா..




... அந்தப் பெண் மல்லிகாவிற்காக நீயே வாதாட வேண்டும். கொஞ்சமும் சந்தேகம் ஏற்படாதபடி அவளை அந்தச் சுழலில் அழுத்தி விட வேண்டும். உனக்கு எதிராக வழக்காடப் போவது நான் தானே? ஜாக்கிரதை.
... இது தான் நடந்தது. என் இனிய நண்பன் இதில் பலியானது தான் பரிதாபம். ஆனால் அவன் தூண்டுதல் இல்லாவிட்டால் நான் இதில் இவ்வளவு தூரம்....
ம்... ஓகே! மிஸ்டர் சதீஷ். ஒரு நல்ல நண்பனை இழந்தாலும், அதே போல அதற்கும் மேலாக உங்களை உள்ளன்புடன் நேசிக்கும் ஒருவரை அடைந்து விட்டீர்கள். நல்ல மனங்களின் **ஆசைகள் மடிவதில்லை.**
என்ன சொல்லுகிறீர்கள், இன்ஸ்பெக்டர்? புரியவில்லையே.
உங்களைச் சந்திக்க ஒருவர் வெளியே காத்திருக்கிறார். அவர் உள்ளே வந்ததும் புரிந்து விடும். நான் வருகிறேன்.
இன்ஸ்பெக்டர் போனதும் உள்ளே நுழைகிறாள் மல்லிகா.
ஹல்லோ...! வாருங்கள். சௌக்கியமா?
மரணத்தின் பிடியிலிருந்து என்னைப் பிடுங்கிக் கொண்டு வந்த உங்களை இன்னும் முன்னாலேயே காணத் துடித்தேன். இன்று தான் அனுமதி கிடைத்தது...
இந்தப் புகழ்ச்சிக்கெல்லாம் தகுதியில்லாதவன் நான். என் நண்பன் முரளி என்னுள் கிளப்பிய ஒரு பொறி, அதன் விளைவு உங்கள் விடுதலை... அதற்குள் கிளம்பி விட்டீர்களே?
நான் இதற்கு மேல் இங்கு தங்க அனுமதி இல்லை.
மறுபடி வருவீர்களில்லையா?
பிரிவே இல்லாதபடி உங்களுடனே வந்து விடுகிறேன், போதுமா?
நல்ல மனங்களின் **ஆசைகள் மடிவதில்லை** தான்!
முற்றும்

"ஜோன்ஸ்!'' என்று கூப்பிட்டார் ரைஸ் என்னும் அந்தக் கோடீசுவரர், தம் காரியஸ்தனை. ஜோன்ஸ் ஓடி வந்தான்.

''இந்தா, ஆயிரம் டாலருக்கு ஒரு செக் எழுதி யிருக்கிறேன். அதை அவர் விலாசத்துக்கு அனுப்பிவிடு'' என்று ஒரு செக்கை அவனிடம் கொடுத்தார்.

உடனே ஜோன்ஸ் செக்கை ஒரு தபால் உறையில் போட்டு, ஒட்டி, அதைத் தபால் ஆபீசுக்கு எடுத்துக் கொண்டு ஓடினான்.

ஆனால் ஓடினவன் தபால் ஆபீசுக்குப் போகவில்லை. அதற்குப் பதிலாக ஆல்பர்ட் பாட்ரிக் என்னும் வக்கீலை நோக்கி ஓடினான். அவரிடம் உறையைக் கொடுத்தான்.

பாட்ரிக் உறையைக் கிழித்துச் செக்கை வெளியில் எடுத்தார். தம் மேஜை டிராயரி லிருந்து அதே பாங்கின் செக் புத்தகத்தை எடுத்தார். ரைஸின் கையெழுத்தின்மீது வரைந்து அது போன்ற ஒரு பொய்க் கையெழுத்து தம்மிடம் இருந்த செக்கில் விழும்படி செய்தார். யாருக்குப் பணம் போய்ச் சேர வேண்டுமோ அவர்கள் பெயரையே செக்கில் எழுதி, அதை ஒரு புதுத் தபால் உறையில் போட்டு, ஜோன்ஸ் மூலம் தபாலாபீசுக்கு அனுப்பினார். ரைஸ் யாருக்குப் பணம் அனுப்பினாரோ அவருக்குப் பணம் கிடைத்தது.

இந்த ஒரு செக்கை மாத்திரம் அவர் அப்படிச் செய்யவில்லை. கோடீசுவரர் ரைஸ் ஜோன்ஸ் கையில் கொடுத்த எல்லாச் செக்கு களுக்கும் பாட்ரிக் கள்ளக் கையெழுத்துக் கொண்ட புது செக்குகள் தயாரித்து அவற்றை அனுப்பி வைத்தார்.

இதனால் யாருக்குப் பணம் போய்ச் சேர வேண்டுமோ, அவர்களுக்குப் பணம் போய்ச் சேர்ந்தது. பாட்ரிக்குக்கு ஒரு நயா பைசா லாபம் இல்லை. எதற்காக அவர் அப்படிச் செய்தார். அவர் என்ன பைத்தியக்காரரா ?

இல்லை. அவர் பைத்தியக்காரர் இல்லை. இதில்தான் அவருடைய ஒரு நீண்ட நாள் சூழ்ச்சி அடங்கியிருந்தது. அதுதான் பொய்க் கையெழுத்தைப் பாங்கிக்காரர்கள் நிஜக் கையெழுத்து என்று நம்பும்படி செய்வது.

சில மாதங்கள் இப்படிச் சென்றன. பாங்கிக்காரர்கள் தம்முடைய கள்ளக் கையெழுத்துக்களை ரைஸின் நிஜக் கையெழுத்து என்று நம்ப ஆரம்பித்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் பாட்ரிக் தம் பெயருக்கே அவ்வப்பொழுது, 20,000 டாலர், 30,000 டாலர் என்று செக்குகள் எழுதிப் பணம் பெற்றுக் கொண்டார்.

இதோடு அவர் நிற்கவில்லை. தாம்தான் ரைஸின் வக்கீல் என்றும் அவருடைய சொத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பு தமக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் தஸ்தாவேஜுகள் தயாரித்து, அதற்கடியில் ரைஸின் கள்ளக் கையெழுத்தை இட்டார்.

பிறகு ரைஸ் தயாரித்தது போல் ஓர் உயில் தயாரித்தார். அது பொய் உயில் என்று யாருக்கும் சந்தேகம் விழக்கூடாது என்பதற்காக நிஜ உயிலில் ரைஸ் தம் சொந்தக்காரர்களுக்கு எவ்வளவு சொத்து சேர வேண்டும் என்று எழுதி வைத்திருந்தாரோ, அதைவிட அதிகமாகவே அவர்களுக்குச் சேர வேண்டும் என்று எழுதி வைத்தார். ஆனால் அதே சமயம் ''வக்கீலான தமக்கும் ஒரு பெரும் பங்கு சேர வேண்டும்'' என்று எழுதி வைத்தார்.

கோடீசுவரரான ரைஸுக்கு இது விஷயங்கள் தெரியாது; யார் யாருக்கு அவர் செக் எழுதினாரோ, அவர்களுக்குப் பணம் போய்ச் சேர்ந்து கொண்டிருந்ததால். இது விஷயம் அவருக்குத் தெரிய வழியே இல்லை. வயதான அவர் இன்னும் இரண்டு, மூன்று வருஷங்களில் இறந்து விடுவார். அப்பொழுது பொய் உயிலின்படி பாட்ரிக்குக்கு நிறைய சொத்து கிடைக்கும். அதில் ஒரு பங்கு ஜோன்ஸுக்குப் போய்ச் சேர்ந்து விடும்.

ஆனால் அதிக ஆசை அதிக நஷ்டம் என்பது போல் ஒரு காரியம் நடந்தது. இவர்கள் பொய்ச் செக்குகள் தயாரித்துப் பாங்கியில் இருந்த பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று ஒரு நாள் ரைஸ் 50,000 டாலருக்குத் தம் பெயருக்குச் செக் ஒன்று எழுதவே இவர்களுக்கு என்ன



நாடோடி

செய்வதென்று தெரியவில்லை. பாங்கியில் இருப்பதோ 25,000 டாலர்தான்.

ஆகவே பாட்ரிக் தம் பெயருக்கு 25,000 டாலருக்கு ஒரு செக் எழுதி அந்தச் செக்குக்குப் பின்னால் தம் கையெழுத்திட்டு ஓர் ஆளிடம் கொடுத்துப் பாங்கிக்கு அனுப்பி வைத்தார். பணத்தை அந்த ஆள் வாங்கிக் கொண்டு வருவதற்குள் மயக்க மருந்து கொடுத்து ரைஸைக் கொன்றுவிடுவது என்பது அவர்களுடைய திட்டம்.

திட்டப்படி அந்த ஆள் செக்கை எடுத்துக் கொண்டு பாங்கிக்குப் போனான். அதற்குள் இங்கு ரைஸ் மயக்க மருந்து கொடுத்துக் கொல்லப்பட்டார்.



பாட்ரிக் ஒரு டாக்டரைத் தம் கையில் போட்டுக் கொண்டு, ''ரைஸ் மூப்பின் காரணமாக இறந்தார்'' என்று ஓர் அத்தாட்சிப் பத்திரம் எழுதி வாங்கி வைத்துக்கொண்டார். 'நான் மரணமடைந்தால் என் சடலத்தை எரிக்கும்படி என் வக்கீலான பாட்ரிக்குக்கு உத்தரவு கொடுக்கிறேன்' என்றும் ரைஸின் பொய்க் கையெழுத்திட்ட கடிதம் ஒன்றைக் கையில் வைத்துக் கொண்டார்.

இத்தனை முன்னேற்பாடுகளுடன் நடந்து கொண்டும், பாட்ரிக்கும், ஜோன்ஸும் அகப்பட்டுக் கொண்டார்கள். எப்படி ?

அதை விதி என்று சொல்வதா? அல்லது, ''பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்'' என்று சொல்வார்களே, அந்த முதுமொழிக்கு ஏற்ப நடந்தது என்பதா ?

கடையில் அவர்களைக் காட்டிக் கொடுத்தது, பாட்ரிக் போட்ட பொய்க் கையெழுத்து அல்ல, செக்குக்குப் பின்னால் அவர் போட்ட அவருடைய சொந்தக் கையெழுத்து!

தமக்கு இருந்த கலவரத்தில் ஆல்பர்ட் பாட்ரிக் என்று கையெழுத்திடுவதற்குப் பதில் ஆபர்ட் பாட்ரிக் என்று கையெழுத்திட்டு விட்டார் !

அவரே பாங்குக்குப் போயிருந்தால் பணத்தைக் கொடுத்திருப்பார்கள். ஆனால் வேறு யாரோ செக்கை நீட்டினதால், பாங்கிக் குமாஸ்தா கையெழுத்தில் இருந்த தவற்றைச் சுட்டிக்காட்டி, கையெழுத்தைச் சரிப்படுத்திக் கொண்டு வரும்படி சொன்னார்.

அந்த ஆள் செக்கை எடுத்துக் கொண்டு திரும்பியதும், எதற்கும் முன்ஜாக்கிரதையாக இருப்பது நல்லது என்று அந்தக் குமாஸ்தா ரைஸின் வீட்டுக்குப் போன் பண்ணினார். போனை ஜோன்ஸ் எடுத்தான். தான் ரைஸின் காரியஸ்தன் என்றும், செக் விவரம் தனக்குத் தெரியும் என்றும், பணத்தைக் கொடுக்கலாம் என்றும் சொன்னான்.

இதற்குள் அந்த ஆள் பாட்ரிக்கின் சரியான கையெழுத்துடன் பாங்கிக்குத் திரும்பி வந்தான். குமாஸ்தா அவனிடம் பணத்தைத் கொடுக்கப் போகும் சமயம் பாங்கியின்

ஏஜண்ட் அந்தப் பக்கம் வந்தார். செக்கைப் பார்த்துவிட்டு, எதற்கும் ரைஸிடம் ஒரு வார்த்தை கேட்பது நல்லது என்று தீர்மானித்து, ரைஸுக்குப் போன் பண்ணினார்.

போனை ஜோன்ஸ்தான் எடுத்தான். தான் ரைஸிடம் நேரில் பேச வேண்டும் என்று ஏஜண்ட் தெரிவித்தபோது, ''முடியாது. ஏனெனில், ரைஸ் இப்பொழுதுதான் காலமானார்'' என்று ஜோன்ஸ் சொன்னான். ஒருவர் இறந்துவிட்ட மறுகணத்திலிருந்து அவர் கையெழுத்துப் போட்ட செக்கெல்லாம் செல்லுபடியாகாது. மேலும் இந்தக் கட்டத்தில் பாங்கு ஏஜண்டுக்கு ஏற்கனவே கொஞ்சம் சந்தேகம் விழுந்திருந்ததால் ரைஸ் இறந்து விட்டார் என்று அறிந்ததும் போலீசுக்குத் தகவல் தெரிவித்து விட்டார். அவர்கள் பாட்ரிக்கையும், ஜோன்ஸையும் கைது செய்தார்கள். ரைஸின் சடலத்தைப் பரிசோதனை செய்ததில் அவர் மருந்து கொடுத்துக் கொல்லப்பட்டிருக்கிறார் என்று தெரிந்தது.

பிறகு ரைஸின் செக்குகளையெல்லாம் பரிசோதித்ததில், செக்குகளில் காணப்பட்ட கையெழுத்துக்கள் அச்சடித்தது போன்று ஒரே மாதிரி காணப்பட்டன. யாராலும் ஒரு தடவை போட்டது போலவே அதே அச்சாக மறு தடவை கையெழுத்துப் போட முடியாது என்பது கையெழுத்து நிபுணர்களுக்குத் தெரிந்த விஷயம்.

ஆகவே அது கள்ளக் கையெழுத்து என்று தீர்மானமாகியது. விசாரணையில் கொலை செய்தது இரண்டு பேரும்தான் என்று முடிவாகியது.

பல நாள் திருடர்கள் ஒரு நாள் அகப்பட்டார்கள் !

படித்துப் பாருங்கள்

அழகு தமிழில் வங்க நாவல்!

வள்ளலார் வாழ்வும் வாக்கும்

ஆண்டவன் அருவமானவன் என்றாலும், ஓர் உருவம் இன்றி மக்கள் மனத்தில் இடம் பெற முடிவதில்லை என்ற பேருண்மையைக் கண்ட வடலூர் அடிகள் பிரகாசத்தை அதாவது ஒளி வழிபாட்டை ஆதரித்தவர். மக்கள் பட்டினியோடு அவனை நினைக்க முடியாது என்பதைக் கண்ட அவர் அன்ன மளித்தலுக்கு ஆக்கம் அளித்தார். அவ்வகையில் அருள் உணர்வைப் போற்றினார். எனவே அருட்பிரகாச வள்ளலார் ஆனார்.

எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை மேற்கொண்ட அவர் இனிய எளிய தமிழ்ச் சொற்களைக் கையாண்டு அற்புதமான தெய்விகப் பாக்களும் எழுதினார்.

அவரது வரலாற்றை அழகான ஆராய்ச்சி நூலாகவும், அவரது அமரக் கொள்கைகளை அற்புதமாகப் படம் பிடித்தும் திரு அ. லெ. நடராஜன் அவர்கள் பாராட்டுக்குரிய வகையில் எழுதியுள்ளார்கள்.

பிரசுரம்: இராமலிங்கர் பணி மன்றம், 9, போயசுத் தோட்டம், சென்னை—86. விலை: ரூ. 5.00.

ஸ்ரீ ராமாநுஜர்

திருக்கோஷ்டியூர் நம்பி, தமது உபதேசத்தைப் பிறருக்குச் சொன்னால் சொல்பவருக்கு நரகம் சம்பவிக்கும், கேட்பவர்களுக்கோ வீடு பேறு கிடைக்கும் என்ற நிபந்தனையோடு தான் ஸ்ரீ ராமாநுஜருக்கு உபதேசித்தார். ஸ்ரீ ராமாநுஜரோ தமக்கு நரகம் கிட்டினால் பாதகம் இல்லை, தாம் பெற்ற இன்பம் இவ்வையம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் கோபுரமேறிக் கூறிய தியாக சீலர். அவர் வழி வளர்ந்ததே விசிஷ்டாத்வைதம்.

ஸ்ரீ ராமாநுஜருடைய வரலாற்றை ஆதாரமாகவும் ஆராய்ச்சி பூர்வமாகவும் ஸ்ரீ பி. ஸ்ரீ. அவர்கள் எழுதியுள்ளார்கள். அவரது ஆழ்ந்த புலமையும் ஸ்ரீ வைஷ்ணவ சம்பிரதாயத்தின் இரு மொழி ஆற்றலும் ஆங்காங்கே பளிச்சிடுவதோடு இதனை ஆராய்ச்சி நூலெனவே தூக்கிக் காட்டுகின்றன. இலக்கிய நயம் கொண்ட இந்த நூல் சாகித்திய அகாதமியின் பரிசு பெற்றது என்பதனால் இரட்டிப்புப் பெருமை பெறுகிறது.

பிரசுரம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை: ரூ. 10.00.

ஆரோக்கிய நிகேதனம்

தாராசங்கர் பந்த்யோபாத்யாயர் வங்க மண்ணின் மணம் கமழப் பல நவீனங்கள் எழுதிப் புகழ் ஈட்டியவர். அவரது எழுத்தின் அழுத்தம் அவருக்கு ஞான பீடம், சாகித்ய அகாதெமி போன்ற பல நிறுவனங்களின் பரிசை வழங்கியிருக்கிறது. ஆரோக்கிய நிகேதனம் என்ற இந்த நாவல் ரவீந்திரர் பரிசு, சாகித்ய அகாதெமி பரிசு ஆகியவற்றைப் பெற்று சாகித்திய அகாதெமியினால் தமிழில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஜீவன் மஷாயின் குடும்பம் ஒரு வைத்தியக் குடும்பம். ஆயுர்வேதத்தைப் பேணி வளர்த்த குடும்பம். தம் தலைமுறையில் அவர் அலோபதி டாக்டர்களோடு போட்டி போட்டுக் கொண்டு ரோக நிதானம் (டையோக்னோஸ்) செய்பவர். மரண தேவனை நன்கு அறிந்தவர். அவர் வாழ்க்கையோடு பின்னிய வைத்தியத்தையும் காதல் — குடும்ப விவகாரங்களையும் கன ராகங்களின் நீண்ட ஆலாபனையைப் போல் விவரித்துக் கொண்டு போகிறார் தாரா சங்கர்.

ஆழ்ந்த மனத் தத்துவமும்,—வைத்தியத் துறையை அவர் விளக்கி யிருக்கும் முறையும் எடுத்துக் கொண்ட விஷயத்தில் அவரது ஆழ்ந்த புலமையைப் புலப்படுத்துகின்றன.

அழகுதமிழில், பழகு தமிழில் அற்புதமாக மொழிபெயர்த்திருக்கிறார் த. நா. குமாரசாமி. தாரா சங்கர் — குமாரஸ்வாமி இரு பெரு சங்கமங்களில் தமிழுக்குப் புதுமையான நல்லதொரு நவீனம் கிடைத்திருக்கிறது.

பிரசுரம்: ஜயம் கம்பெனி, நுங்கம்பாக்கம், சென்னை—34. விலை ரூ. 14.50.

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்



Mr. D. SUBBAYAH
"Parallai Illam" Muar Malaysia
Retired Senior Hospital Assistant
Attached to the Health Office,
Muar, Malaysia

தோற்றம்: 3-2-1904 மறைவு: 16-5-1973

தங்கள் பிரிவால் வாடும்

மனைவி: திருமதி ராசம்மா
புதல்வர்கள்: ராஜசூரியர், கனகசூரியர் குமார சூரியர்
புதல்வியர்: செல்வ பாக்யம், ஜெய பாக்யம், ராதாபாக்யம், குணபாக்யம்
மருமகள்: வள்ளிநாயகி ராஜசூரியர்

அமரர் D. சுப்பையா அவர்கள்
நீண்டநாளைய கல்கி வாசகர்



ஸ்ரீலஸ்ரீ சிவராமகிருஷ்ண ஸ்வாமிகள்

"ரோட்டு ஸ்வாமிகள்" என்று பக்தர்களால் அன்புடன் அழைக்கப் பட்ட ஸ்ரீலஸ்ரீ சிவராம கிருஷ்ண ஸ்வாமிகள் சென்ற 8-4-1974 அன்று பிரம்ம சாயுஜ் யத்தை அடைந்தார் கள். 1898ல் தோன் றிய ஸ்வாமிகள் பூர்வா சிரமத்தில் பயிற்சி பெற்ற பள்ளி ஆசிரிய ராகப் பணியாற்றி வந்தார்கள். 1925ல் ஆத்மாநுபவம்பெற்று முற்றும் துறந்த அவதூத முனிவராகி பக்த கோடிகளுக்கு அருள்பாலித்து வந்தார். அவர் பிறந்த மாதிரிமங்கலத்தில் கிரயத்துக்கு வாங்கப் பட்ட மனையில் சமாதி வைக்கப்பட்டுள்ளார். அவ்வதிஷ்டானத்தின் மீது ஆலயமும், நந்தவன மும், தீர்த்தவசதியும், தங்கக் கட்டிடங்களும், வருடாந்திர ஆராதனை நடத்த நிரந்தர நிதி வசதியும்—முதலிய பல கைங்கரியங்கள் செய்ய பக்தகோடிகள் தீர்மானித்துள்ளனர். இவற் றுக்குப் பக்தர்கள் மனமுவந்து பொருளுதவி செய்யக் கோருகிறோம். பணம் அனுப்ப வேண்டிய விலாசம்:

K. நாராயணமூர்த்தி, V. H. M.
மாதிரிமங்கலம் P. O. (வழி) குத்தாலம்
மாயூரம் R. M. S. (தஞ்சை மாவட்டம்)

குளியல் அறைக்குள் நுழைந்த பிறகு தான் சுந்தரமூர்த்திக்குத் தான் சோப்புப் பெட்டி எடுத்து வரவில்லை என்பது கவனத்துக்கு வந்தது. அலமாரியிலிருந்த சோப்புப் பெட்டியை எடுத்து வரச் சொல்லித் தம் பேரனுக்கு அங்கிருந்தபடியே குரல் கொடுத்தார். எட்டு வயது நிரம்பிய பாலமுருகன், தன் பாட்டனார் குரல் கேட்டுச் சோப்புப் பெட்டியை எடுத்துக் கொண்டு உள்ளே ஓடினான்.



இடுப்பில் கட்டிய துண்டைத் தவிர வேறு ஒன்றுமே அணியாதவராய் நின்ற தன் பாட்டனாரை வியப்புடன் பார்த்தான் குழந்தை. ஊரிலிருந்து வந்திருந்த தாத்தாவை அந்தக் கோலத்தில் அவன் அது வரையில் பார்த்தது இல்லை. சிவந்த உடல் வாகு கொண்ட சுந்தரமூர்த்தி நல்ல உயரம். அதற்கேற்ற பருமனும்கூட.

அந்தப் பொன்னிற உடலுக்குத் திருஷ்டி கழித்தாற் போலக் கழுத்துக்குப் பக்கத்தில், இடது தோளின்மேல், மேல் துண்டு போட்டாற் போல், ஒன்பது அங்குலத்துக்கும் மேலாக ஒரு வெட்டுக் காயத் தழும்பு கறுப்பாகக் காணப்பட்டது. பெரிய மரவட்டையைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டது போல் அது தெரிந்தது.

''அது என்ன தாத்தா, காயம் ?'' என்று கேட்டான் குழந்தை.

''அது பெரிய கதைடா, அப்புறம் சொல்றேன்!'' என்று அவனை விரட்டிய பாட்டனார் கதவை மூடிக் கொண்டு குளிப்பதற்கு விரைந்தார்.

பையன் மறக்கவில்லை. . பகல் உணவு முடிந்த பிறகு சுந்தரமூர்த்தியை ஞாபகப் படுத்தினான்.

'' உன்னைவிடப் பெரியவன் நான் அப்போது. எட்டாவது படித்துக் கொண்டிருந்தேன். வழக்கம் போல் ஒரு நாள் பள்ளிக்கூடம் விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். வழியில் ஒரு சிறு சந்து. அதன் வழியாகப் போனால் சீக்கிரமாகப் போய்விடலாம். அங்கே பார்...... ஒரு பெண்.... பார்ப்பதற்கு உன் அக்காள் போல் அழகாக இருந்தாள். ஆனால் பாவம் நொண்டி. கடையில் ஏதோ சாமான்கள் வாங்கிக் கொண்டு தன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தாள். ஒரு முரட்டுப் பையன். ஊர் அறிந்த போக்கிரி. அவள் கையிலிருந்த சாமானைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான். நான் சும்மா இருப்பேனா ? அவனை எட்டிப் பிடித்து மேலே பாய்ந்தேன். என்னைவிடப் பெரியவனான அவனைக் கீழே தள்ளியும் விட்டேன். அவள் அவனைப் பார்த்துச் சிரித்தாள். நான் அடித்ததைவிட அந்தப் பெண் சிரித்தது தான் அவனுக்கு உறைத்தது. ஓரத்தில் கிடந்த காலிப் புட்டியை எடுத்து என் தலையில் அடிக்க வந்தான். நான் சட்டென்று சாய்ந்து கொண்டேன். புட்டி எனது இடது தோளில் பாய்ந்தது. அதுதான் இந்த வடு. நான் ஆஸ்பத்திரியிலிருந்து வர ஒரு மாதம் ஆச்சு !'' என்றார் சுந்தரமூர்த்தி.

அங்கேயே ஓர் ஓரமாக உட்கார்ந்திருந்த சுந்தரமூர்த்தியின் மனைவியின் காதுகளில் அவர் சொன்னது விழுந்தது. வடிவு தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

'தாத்தா ! நான் பெரியவனான பிறகு உங்களைப் போல் ஜோராகச் சண்டை போடுவேன். பயப்பட மாட்டேன்'' என்றான் பாலமுருகன். தாத்தா தம் பேரனைத் தட்டிக் கொடுத்தார்.

சுந்தரமூர்த்திக்குத் தஞ்சையில் வீடு. அவர் அந்த ஊரை விட்டு அதிகம் வெளியே போக மாட்டார். கொஞ்ச நாட்களாக நெஞ்சில் அடிக்கடி வலி வந்தது. பெண்ணும் மாப்பிள்ளையும் வற்புறுத்திக் கூப்பிட்டதன் பேரில், வைத்தியம் பார்க்கச் சென்னைக்குப் புறப்பட்டு வந்திருந்தார்.

அடுத்த நாள் அவர் டாக்டர் வீட்டுக்குப் போக வேண்டி வந்தது. டாக்டர் அவரைப் பனியனைக் கழற்றச் சொன்னார். டாக்டரின் பார்வையில் அந்தத் தழும்புதான் முதலில் தெரிந்தது.

''அப்பப்பா! எத்தனை பெரிய வடு? இப்படிப்பட்ட காயம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?'' என்று கேட்டார் டாக்டர்.

'ஆமாம், ஸார்! பெரிய காயம்தான். அப்போது எனக்கு இருபது வயது இருக்கும். நாங்கள் கிராமத்தில் இருந்தோம். காற்றுக்காக வீட்டின் வெளியில்தான் படுப்பது. வீட்டுக் கதவுகள் திறந்துதானிருக்கும். ஒரு நாள் இரவு பாருங்கள்? ஓர் அயோக்கியன் திறந்து கிடந்த ஒரு வீட்டுக்குள் புகுந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடினான். அந்தப் பெண்ணின் கூச்சல் கேட்டு முதலில் விழித்தது நான்தான். திருட்டுப் பயலை நான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு விட்டேன். தான் பிடிபட்டு விட்டோம் என்ற ஆத்திரத்தில் அரிவாளால் போட்டு விட்டான். கழுத்தில் விழ வேண்டியது தோளில் விழுந்தது. ரத்தம் கொட்டியது. இருந்து கூட நான் அவனை விடவில்லை. மூன்று வருடங்கள் தீட்டினார்கள் அவனுக்கு...''

இந்தப் புதுக் கதையைக் கேட்ட வடிவு தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

மறுநாள் மாலை. அன்று பாலமுருகன் பிறந்த நாள். கோவிலில் மண்டகப்படிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். மருமகப் பிள்ளைக்கு விமானக் கம்பெனியில் பெரிய உத்தியோகம். கோவிலில் ஏகப்பட்ட மரியாதை. ஒரு ஜரிகைத் துப்பட்டாவை மேலே போர்த்தியபடி சுந்தரமூர்த்தி கோவிலுக்குள் நுழைந்தார்.

தீபாராதனை சமயம். அவர் தமது துப்பட்டாவை எடுத்து இடுப்பில் கட்டிக் கொள்ளப் பக்கத்தில் நின்ற கோவில் நிர்வாக அதிகாரி அந்தப் பெரிய வடுவைக் கண் கொட்டாமல் பார்த்தார்.

''என்ன பார்க்கிறீர்கள்? இந்த வடுவையா? என் வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் அல்லவா அது? நான் அப்போது ராணுவத்தில் இருந்தேன். காஷ்மீர்த் தகராறு. நமக்கும் பாகிஸ்தான்காரர்களுக்கும் போர். எங்கள் ஆள் ஒருத்தன் விழுந்தான். நம்ம பக்கத்துப் பையன். நல்லவன். வேண்டியவனும்கூட. முதுகிலாவது தூக்கிப் போட்டுக்கொண்டு முகாமுக்குப் போகவேண்டுமே என்று குனிந்து தொட்டேன். அவ்வளவுதான். என்னை அவன் எதிரி என்று நினைத்துக் கொண்டு துப்பாக்கிச் சனியனால் குத்திவிட்டான். யார் செய்த புண்ணியமோ தோள்பட்டை கிழிந்தது. நெஞ்சில் பாயவில்லை. அப்படியென்றால் சுந்தரமூர்த்தியின் அத்தியாயம் எப்பொழுதோ முடிந்திருக்கும்.''



பக்கத்தில் நின்ற வடிவுக்கு உடல் சிலிர்த்தது. சுந்தரமூர்த்தி இல்லாமல் ஒரு வாழ்வை அவன் நினைத்துப் பார்க்கக்கூடப் பயந்தான்.

கோவிலில் எல்லோரையும் போட்டோ எடுத்தார்கள். சுந்தரமூர்த்தி கம்பீரமாக—நடுநாயகமாக நின்றார். மறு நாள் போட்டோ பிரதி வாங்க ஸ்டுடியோவுக்குப் போனார். போட்டோ மிகத் தெளிவாகவும் அழகாகவும் விழுந்திருந்தது.

''ஸார்! இந்தத் தழும்பு என்னமோ போல் இருக்கிறது. அதை 'டச்-அப்' செய்து மறைத்து விடட்டுமா?'' என்று கேட்டார் ஸ்டுடியோக்காரர்.


''நல்ல வேளை கேட்டீர்களே! இந்தத் தழும்புதான் எனக்கும் மற்றவர்களுக்கும் உள்ள ஒரே வித்தியாசம். அது எனக்கு எத்தனை பெருமையைக் கூட்டித் தந்திருக்கிறது தெரியுமா?'' என்று கேட்டார்.


''தெரியாது!'' என்று ஒப்புக்கொண்டார் ஸ்டுடியோக்காரர்.


''சொல்கிறேன். எனக்கு அப்போது இருபத்தைந்து வயதிருக்கும். தெருவில் போய்க் கொண்டிருந்தேன். அசுர வேகத்தில் ஒரு லாரி வந்தது. நடுத் தெருவில் ஒரு மூன்று வயதுக் குழந்தை. அது லாரியைப் பார்க்கவில்லை. நான் பாய்ந்து குழந்தையைத் தூக்கிக்கொண்டு ஓடினேன். ஆனால் லாரி இலேசாக இடித்துத் தள்ளி விட்டது. நான் தூக்கி எறியப்பட்டேன். நல்ல வேளை..... குழந்தைக்கு அடியில்லை. என் தோளில் தான் ஓரத்தில் இருந்த ஒரு கூரான இரும்புத் துண்டு பாய்ந்து விட்டது. மூன்று மாதங்கள் ஆஸ்பத்திரியில் கிடந்தேன்...'' என்றார்.

வெளியில் நின்று கொண்டிருந்த வடிவு சிரித்தான். எத்தனை சரளமாகக் கதை கட்டுகிறார் என வியந்தான்.

நான்கு நாட்களுக்குப் பிறகு மருமகப் பிள்ளை கூப்பிட்டார்.







''எனக்கு இரண்டு நாள் டில்லியில் வேலை இருக்கிறது. மாமா வந்தால் கூட அழைத்துப் போகிறேன்!'' என்றார்.


''கரும்பு தின்னக் கசக்குமா? கட்டாயம் வருகிறேன். நான் விமானம் ஏறியதில்லை'' என்று ஒப்புக் கொண்டார் சுந்தரமூர்த்தி.

இரண்டு பேருமாகப் புறப்பட்டார்கள். வடிவு மாலையில் வாசல்வரை வந்து வழி அனுப்பி வைத்தாள். இடியை ஒத்த அந்தச் செய்தி காலையில் வந்தது. அவர்கள் போன விமானம் விபத்துக்குள்ளாகியது. மருமகப் பிள்ளை மட்டும் தப்பிப் பிழைத்தார். சுந்தரமூர்த்தியின் உடல் கருகிப் போயிருந்ததால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை.

வடிவும் அவள் மகளும் அடுத்த விமானத்தில் அரற்றியபடி டில்லிக்குப் போனார்கள். வரிசையாகக் கிடத்தப்பட்ட உடல்களைப் பார்த்தவர்கள் நெஞ்சங்கள் நடுங்கின. அதிகாரிகள் ஒவ்வொரு சடலமாகக் காண்பித்தனர். அதோ... அதோ... கன்னிப் போன அந்தத் தோளின் மேல் நீண்ட வடு... வடிவுக்குத் தன் கணவனின் உடல் கிடைத்தது. அவன் தழும்பைக் கண்டு அடையாளம் கண்ட செய்தி பத்திரிகையில் வந்திருந்தது.

வடிவு விக்கி விக்கி அழுதாள்.

முப்பது வருஷங்களுக்கு முன்னால் அந்தக் கிராமத்தில் வடிவு ஓர் ஏழைப் பெண்.






சுபிட்சம் தரும் தலைவலி!

வீட்டை விட்டு ஓடிப்போகும் வாலிபர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது. இப்பொழுது அந்த எண்ணிக்கை ஆறு லட்சத்தை எட்டி விட்டது என்று அமெரிக்க நாட்டு கல்வி - நல்வாழ்வுத் துறைப் பிரிவின் புள்ளி விவரக் கணக்கு கூறுகிறது. இப்பிரச்னை அமெரிக்க நாட்டுக்கே ஒரு தலைவலியாகக் கருதப்படுகிறது. இதற்கு ஒரு பரிகாரமாக ஒரு விசேஷச் சலுகையையும், மேற்படி கல்வி-நல்வாழ்வுத் துறைப் பிரிவு வழங்கியிருக்கிறது. வீட்டைவிட்டு ஓடிப் போகும் வாலிபர்கள் தாங்கள் இருக்கும் ஊரையும், விலாசத்தையும் பெற்றோர்களுக்குத் தெரிவிக்க விரும்பினால், கட்டணம் எதுவும் இல்லாமல் டிரங்க் டெலிபோனில் பேசலாம். இந்த விசேஷச் சலுகைக்காக அந்த இலாகா ஒரு லட்சம் டாலரை ஒதுக்கியிருக்கிறது.

ஆதாரம்: ''நியூ டைம்ஸ்''
தகவல்: விஜயம்




பேப்பர் கொடுத்தால் ஆஸ்பத்திரி கிடைக்கும்!

பம்பாயைச் சேர்ந்த டோம்பிவில்லி என்ற இடத்தைச் சேர்ந்த 'லயன்ஸ் கிளப்' அந்த ஊர் மக்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோள்: ''நீங்கள் வாங்கும் நியூஸ் பேப்பரைப் படித்த பிறகு மூன்று மாதத்துப் பேப்பரை எங்களுக்குக் கொடுங்கள். உங்களுக்கு ஒரு முதல்தர ஆஸ்பத்திரி கட்டித் தருகிறோம்!''

ஒரு மாதத்து பழைய பேப்பரை விற்றால் ரூ. 5-00 கிடைக்கிறது. மூன்று மாதத்தில் 15 ரூபாய் கிடைக்கிறது. டோம்பிவில்லியில் உள்ளவர்களில் 20,000 குடும்பங்கள் நியூஸ் பேப்பர் வாங்குகின்றன. அந்தப் பழைய பேப்பர்களை விற்பதனால் 3 லட்சம் ரூபாய் கிடைக்கும். லாட்டரி டிக்கட், நன்கொடைகள் இவற்றின் மூலம் இன்னும் 2 லட்சம் ரூபாய் வசூலித்து ஆஸ்பத்திரி கட்டப் போகிறார்களாம்!

ஆதாரம்: ஹிந்துஸ்தான் டைம்ஸ்
தகவல்: சரோஜா ராமச்சந்திரன்



அனுமார் வால்!

ஆங்கிலத்திலேயே மிக நீளமான சொல் எது? Pneumonoultramicroscopicsilicovolcanoconiosis நாற்பத்தைந்து எழுத்துக்களைக் கொண்ட இவ்வாசகம் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்வோரைத் தாக்கும் ஒரு நோயின் பெயராம். பெயரே இவ்வளவு நீளம் எனில் நோய் எவ்வாறு இருக்குமோ?

ஆதாரம்: Random House Dictionary
அனுப்பியவர்: நா. ஜ. க. சரவணப்பிரபு

வயதுக்கு வந்தவள். அவள் தந்தை அவளுக்கு ஒரு வரன் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஊரில் பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை சுந்தரமூர்த்தி. வேடிக்கையான பேச்சு. குதர்க்கமான வாதம், மைனர் சங்கிலி, ஜவ்வாதுப் பொட்டு. சுந்தரமூர்த்தியை ஒரு போக்கிரியாக — துஷ்டனாக — பெண் பித்தனாக வடிவு எடை போட்டிருந்தாள்.

ஒரு நாள் காலை. வீட்டில் எவரும் இல்லை. குளிப்பதற்குப் பானையில் நீர் கொதித்துக் கொண்டிருந்தது. இடுப்புவரையில் தொங்கிய கூந்தலை அவிழ்த்து விட்டு இடுப்பைச் சுற்றி ஒரு சிறு துணியைக் கட்டி அதன் ஒரு பகுதியையே மேலாக்காகப் போட்டுக் கொண்டு காத்திருந்தாள் வடிவு. மூடியிருந்த வாயிற் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்தான் சுந்தரமூர்த்தி. வந்த வேகத்தில் கதவையும் மூடினான். அவன் நெற்றியில் வியர்வை துளிர்த்திருந்தது.

பயந்தபடி நின்ற வடிவு அவனைக் கண்டு நடுங்கினாள். கதவைத் தாளிட்டவுடன் என்னமோ என நினைத்து விட்டாள். கீழே கிடந்த அரிவாள்மனையைத் தூக்கிவிட்டாள். சுந்தரமூர்த்தி அவளைத் தடுக்கும் நிமித்தம் கையைப் பிடித்தான். வடிவுக்கு ஆத்திரம் மிகுந்தது. தூக்கப்பட்ட அரிவாள் சுந்தரமூர்த்தியின் இடது தோள் பட்டையில் இறங்கியது.

''அம்மா!'' என்று அவன் சாயவும், கதவைத் திறந்து கொண்டு இரண்டு பண்ணையாட்கள் நுழையவும் சரியாக இருந்தது.

''அந்தக் காளையைப் பிடித்துக் கட்டியாகி விட்டது ஐயா! நீங்கள் வெளியே வாங்க!'' என்று கூப்பிட்ட அவர்கள் சுந்தரமூர்த்தி கிடந்த கோலத்தைக் கண்டு பதறினார்கள். அவன் முரட்டுக் காளை துரத்த ஓடி ஒளிந்து கொண்டவன் என்பதையும், எத்தனிதக் கெட்ட நோக்கமும் அவனுக்கு இல்லை என்ற விவரமும் வடிவுக்குப் பின்னர் தான் தெரிந்தது.

ஊரில் அவளை எல்லோரும் ஏசினார்கள். போலீஸில் வழக்குப் பதிவாயிற்று. சுந்தரமூர்த்தியின் நிலை கவலைக்கு இடமாயிற்று. அவனுக்காகக் கண்ணீர் விட்டுக் கோவிலே கதியாகக் கிடந்தாள் வடிவு. ஆஸ்பத்திரி வாசலில் யார் ஏச்சையும் பேச்சையும் பொருட்படுத்தாமல் பச்சாதாபம் மேலிட வந்து வந்து நின்றாள்.

சுந்தரமூர்த்தி எழுந்து உட்கார்ந்தான். வடிவைப் பற்றிக் கேள்விப்பட்ட அவன் நெஞ்சம் நெகிழ்ந்தது. எதிர்ப்புப் பலமாக இருந்தபோதும் அவன் வடிவைத் திருமணம் செய்து கொண்டான்.

''ஊரார் இதுவரையில் உன்னை ஏசியது போதும் வடிவு... என் உயிர் உள்ளவரை இந்த வடு எப்படி ஏற்பட்டது என்ற உண்மையை யாருக்கும் சொல்லி உன் மனத்தை நோகடிக்க மாட்டேன். நீ இதுவரையில் கேட்ட பேச்சுப் போதும்!'' என்றான்.

அந்தச் சொல்லை அவன் காப்பாற்றி விட்டான். அந்தப் புனிதமான நினைவிலே வடிவு இன்னும் லயித்து நிற்பாள்!

முட்டாளாவதும் பெண்ணாலே; மேதையாவதும் பெண்ணாலே!

சீதா

'' கண்ணன் மனநிலையைத் தங்கமே தங்கம்
கண்டுவர வேணுமடி தங்கமே தங்கம் ''

என்று சாரு கண்ணாடி முன்னால் நின்று கொண்டு பாரதியாரின் மேற்கண்ட பாடல் வரிகளை முணுமுணுத்துக் கொண்டிருந்தாள்.

''யாருடீ, அந்தக் கண்ணன் ? எங்கே இருக்கிறான் சொல்லு ? வேண்டுமானால் போய்க் கண்டு கொண்டு வந்துவிடுகிறேன்'' என்று சொல்லிக் கொண்டே ஹேமா வந்தாள்.

''.ரயில் ஸ்டிரைக்கிலே நியாயமாகப் போகிறவர்களுக்கே தடிங்கினைத்தோம் போடறது. நீ போய் என் கண்ணன் மன நிலையைக் கண்டு கொண்டு திரும்பிவிடுவாயாக்கும் ! அழகுதான் போ!''

'' நீ சொல்றது வாஸ்தவம். நம்ம விமலா கல்யாணம் நடக்குமோ நடக்காதோ என்று சந்தேகமாக இருக்கிறதாம். மாப்பிள்ளைப் பையன் டில்லியில் இருக்கிறானும்! ரயிலில் வந்து சேரணும். வருவானோ மாட்டானோ ? வழியில் எங்கேயாவது நிற்கிறானோ என்று கவலையாயிருக்கிறதாம். எல்லோரும் மாப்பிள்ளைப் பையனின் வருகையை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்'' என்றாள் ஹேமா.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த அத்தை அன்னபூர்ணம்மாள், ''அட, ராமா ! மாப்பிள்ளை காலா காலத்தில் வராததினால் கல்யாணம் நின்று, கடைசியில் நிரந்தரமாகவே நின்றுவிடப் போகிறது '' என்று அங்கலாய்த்தாள்.

'' ஏன் அத்தை இப்படி அபசகுனம் மாதிரி பேசறேள்?''

'' அப்படி நடந்திருக்குடி ! ஒரு மாப்பிள்ளை பிரயாணம் செய்த வண்டி. முகூர்த்தம் தவறி வந்தது என்பதனாலே கல்யாணம் தவறி விட்டது. பிள்ளை விட்டார் என்ன செய்தார்கள், தெரியுமோ? இந்தப் பெண்ணுடன் கல்யாணத்தில் நடப்பது ஈசுவர சம்மதமே இல்லை போலிருக்கிறது; இந்தச் சம்பந்தம் வேண்டாம் என்று சொல்லி விட்டார்கள் !''

''ஐயோ, அப்புறம் அந்தப் பெண்ணின் கதி என்ன ஆச்சு ? வேறே பையனைப் பார்த்துக் கல்யாணம் செய்து வைத்தார்களா ?'' என்று கேட்டாள் சாரு.

'' பெண்ணின் பெற்றோர்கள் அதற்குத் தயாராகத்தான் இருந்தார்கள். ஆனால் அவளோ 'அந்தப் பையன்தான் என் புருஷன் என்று கல்யாணப் பத்திரிகைகளில் அச்சிட்டுத் தேசம் முழுதும் அறிவித்துவிட்ட பிறகு இன்னொரு பையனோடு என் பெயரை இணைக்கிறது எனக்குப் பிடிக்கவே இல்லே !' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டாள் !''

'' அப்படியானால்..... ?'' என்று இழுத்தாள் ஹேமா.

''கன்னியாகவே இருந்து காலம் கழித்து விட்டுப் போய்ச் சேர்ந்தாள் '' என்றாள் அத்தை. அப்பொழுது அத்தையின் கண்களில் கண்ணீர் கப்பி நின்றது.

'' ஐயோ, பாவமே ! இப்படிக்கூட உண்டா ? இந்தக் காலத்தில் என்னடா என்றால், கணவன் இருக்கும் போதே, அவனை 'டைவர்ஸ்' பண்ணிவிட்டு வேறே ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறார்கள் !'' என்றாள் சாரு.

'' ஆமாம், ஆமாம். கொண்ட கணவனையே முட்டாளாக்கி விடுவார்கள், இந்தக் காலப் பெண்கள் !'' என்றான் வேணு.

''பெண்கள் யாரையும் முட்டாளாக்குவதில்லை. ஒருவரிடம் எந்தக் குணம் அதிகம் இருக்கிறதோ, அதை நாலு பேர் தெரிய



வெளிப்படுத்துவது அவர்கள் பண்பு. சீதை ராமனின் பராக்கிரமத்தை வெளிப்படுத்தினாள். திரௌபதி பஞ்சபாண்டவர்களின் வீரத்தை வெளிப்படுத்தினாள். கல்யாணமான பிறகு ஒருவன் முட்டாளாக வெளிப்பட்டானானால், அந்தக் குணம்தான் அவனிடம் அதிகம் இருக்கு என்று அர்த்தம்'' என்றார் சங்கரன். தொடர்ந்து கூறினார் :

''அறிவு பளிச்சிடவும் கல்யாணம் உதவும். க்யூரி தம்பதிகள் எவ்வளவு அன்னியோன்னியமான தம்பதிகள்! இரண்டு பேரும் சேர்ந்து விஞ்ஞான ஆராய்ச்சி செய்து எவ்வளவு மகத்தான விஷயங்களைக் கண்டுபிடித்தார்கள்! ஒருவருக்கொருவர் அனுசரணையாக ஒரே துறையில் ஆராய்ச்சி நடத்தியதால் இம்மாதிரி லட்சியத் தம்பதிகளாக வாழ்ந்தார்கள்.''

'' நம்ம நாட்டில் பையன் படிப்பையோ, லட்சியங்களையோ, பெண்ணின் படிப்பையோ, நோக்கங்களையோ கவனித்து எங்கே கல்யாணம் செய்கிறார்கள் ? ஜோஸ்யர் நிச்சயித்த பெண்ணுக்கும் பையனுக்கும் அல்லவா கல்யாணம் நடக்கிறது?'' என்று அங்கலாய்த்தான் வேணு.

'' அப்பா ! நீ பெரிய விஷயத்துக்குத் தாவி விட்டாய். இதைப் பற்றி வேறொரு நாள் விவாதம் வைத்துக் கொள்ளலாம் !'' என்றார் சங்கரன்.

WWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWWW

'மழை விட்டும் தூவானம் விடவில்லை.'
இது பழமொழி.
'கதை முடிந்தும் படம் முடியவில்லை.
இது படமொழி.

நல்லவனையும் தீயவனையும் நட்பினால் இணைக்க நல்ல சம்பவங்களைப் புனைந்து உள்ளத்தைத் தொட வைக்கும் வகையில் படம் எடுத்திருக்கிறார்கள்.

'தோஸ்த்' படம் இடைவேளை வரையில் 'திடுதிப்பென்று படவுலகில் இதென்ன நல்ல காற்று அடிக்கத் தொடங்கி விட்டது?' என்ற மகிழ்ச்சியில் ரசிகர்களைத் திக்குமுக்காடவே கூட வைத்து விடுகிறது.

'மானவ்' (தர்மேந்திரா) நல் இயல்புகள் கொண்டவன். கோபி (சத்ருக்ன சின்ஹா) களவுத் தொழிலில் ஈடுபட்டுப் பொய் இயல்புகள் பல கொண்டவன். இருவரையும் இணைய வைத்து, நல்லவன் தீயவனைத் திருத்துவதாகக் கனவு காண வைப்பதும், தீயவன் நல்லவனைத் தன் வழிக்குக் கொண்டு வரத் திட்டமிடுவதாகக் காட்டுவதும்,

உள்ளத்துச் சிந்தனைகளுக்கு ஒலி வடிவு கொடுத்து ஒளி வடிவில் முக பாவத்தைச் சித்திரிப்பதும்,

படவுலகப் புதுமை!

பதினைந்து நாட்களுக்குள் நல்லவனுக்கு வேலை கிடைத்து விட்டால், தான் தீமையை ஒழித்து விடுவதாக உறுதிமொழி கூறுவதும், இல்லையேல், அவன் தன் வழிக்கு வந்துவிட வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதும் சுவையான கற்பனைகள். இதற்கிடையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை அருமையாகப் படம் பிடித்துக் காட்டி, நல்லவன் வெற்றி கொள்ள வேண்டுமே என்று ரசிகர்களின் மனத்தைக் கட்டிப் போடுகிறார்கள். நல்லவனுக்கு வெற்றி இல்லை என்று உறுதியான பின் பெருமூச்சு விட வைத்து விடுகிறார்கள். தீமைக்கு இணங்க மனமொப்பாமல் நல்லவன் தற்கொலைக்குத் தயாரான பொழுது தீமை நன்மைக்கெதிரே தான் பணிகிறது.

ஆனால் தம் நடிப்பால் சத்ருக்ன சின்ஹா தர்மேந்திராவைத் தம் தாள் பணிய வைத்துவிடுகிறார். ஆம், சத்ருக்ன சின்ஹா தாம் ஏற்ற புதுமைப் பாத்திரத்துக்கு அப்படி உயிர் கொடுத்து விடுகிறார்!

இதோடு கதை முடிந்துவிட வேண்டாமோ? அதுதான் இல்லை. இங்கு கடையைக் கட்டிக் கொண்டு விட்டால், இடைவேளைக்குப் பிந்திய மிச்சப் பகுதி என்ன ஆவது? 'அஞ்சேல்' என்று வாழையடி வாழையாக வந்த திரைப் படக் கதை ஆபத்துக்கு உதவும் நண்பனாகக் கைகொடுத்து உதவுகிறது.

கதாநாயகியாக வரும் ஹேமமாலினி கனவுகள் பல கண்டு தம் 'கனவுக் கன்னி'ப் பட்டத்துக்கு நியாயம் வழங்குகிறார். அன்வர் ஹுசேன், ரஹ்மான், இவாரி ஆகியவர்கள் தங்களுக்கே புளித்துப்போன அடி, தடி, மிரட்டல் ஆகிய குணாதிசயங்களைக் காட்டுகிறார்கள். இறுதி மிரட்டலில் தீயவனையும் நல்லவனுக்கு நட்புக் கரம் நீட்டி முடிகிறது கதை. அப்பாடா ஒரு வழியாக முடிந்ததே என்று நாமும் எழுந்திருக்கிறோம்!

ரயில் பாட்டில் ரயிலோசையே இசையாக ஒலிப்பதாகக் காட்டியிருப்பது சிறந்த உத்தி. நல்லதொரு சிறுகதையும் வழக்கமான திரைக்கதையும் நண்பர்களாக இணைந்து இயங்கும் படம் தோஸ்த். —ரா. வீ.





தலைவலியை எதிர்த்து ஸாரிடான்




தலைவலி உங்களைத் தாக்கும்போது, ஸாரிடான் கொண்டு அதைத் தாக்குங்கள். ஒன்றே ஒன்று போதும். ஸாரிடானின் தனிப்பட்ட கலவைமுறை மட்டுமே உங்களைத் தலைவலி, உடம்புவலி, மனச்சோர்வு மற்றும் வலிகளிலிருந்து மீட்கிறது. நிவாரணமளித்து, சோர்வை நீக்கிப் புத்துயிரளிக்கிறது. ரோஷின் சர்வதேச ஆராய்ச்சியின் விளைவு இங்கு செயல்படுகிறது.

தலைவலியைப் போக்குகிறது ஒரே ஒரு ஸாரிடான்

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைட்டமின்களும் தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை



அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?

வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருள்களின் பற்றுக்குறை குடும்ப ஆரோக்கியத்தைப் பாதிக்கக் கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்தல், சரும மற்றும் பல் உபாதைகளுக்குக் காரணம் இவற்றின் பற்றுக்குறைதான்.

திட்டமிடப்பட்ட உணவில் கூட இக்குறை காணப்படுகிறது. அவ்வாறின்றி குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும் தேவையான அளவில் இந்த இன்றியமையாத சத்துக்கள் கிடைக்க தினம் விம்க்ரான் கொடுங்கள்.

விம்க்ரானில் 11 முக்கிய வைட்டமின்களும் 8 தாதுப் பொருட்களும் அடங்கியுள்ளன. இரும்புச் சத்து—இரத்தப் பெருக்கத்திற்கும், சுறுசுறுப்பிற்கும், கால்ஷியம்—எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைக்கவும், வைட்டமின் 'ஸி'—ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்கவும், வைட்டமின் ஏ—சிறந்த கண்பார்வைக்கும் ஆரோக்ய சருமத்திற்கும், வைட்டமின் பி12—பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் இவற்றுடன் இதர போஷாக்குச் சத்துக்களும் உள்ளன. இன்று முதல் தினம் உட்கொள்வீர்—விம்க்ரான்!

விம்க்ரான்®

பலவேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்
11 வைட்டமின்கள் + 8 தாதுப் பொருட்கள்



SQUIBB®
SARABHAI CHEMICALS PVT. LTD.

® இ. ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் இன்கார்ப்பரேடெட் அவர்களின் ரெஜிஸ்டர்ட் ட்ரேட் மார்க்காகும். எஸ்.சி.பி.எல். இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது

Shilpi-HPMA 2A/74 Tam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் சேவை தனி)

